# வ. உ. சி. கட்டுரைகள்.

வ. உ. சி.

# வ. உ. சி.
# கட்டுரைகள்

தொகுப்பாசிரியர்

மா. ரா. அரசு

பாரி நிலையம்
184, பிராட்வே, சென்னை-600108

முதற் பதிப்பு : டிசம்பர் 1989

விலை ரூ. 15-00

அச்சிட்டோர் : தொ. பே. 47 78 20
சாலை அச்சகம், 11 திருவீதியான் தெரு
கோபாலபுரம், சென்னை-600 086 [சாலை 179]

# முன்னுரை

விடுதலைப் போராட்டத்தைப்போலவே தமிழ் இலக்கிய வரலாற்றிலும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கால கட்டத்தில் வாழ்ந்தவர் வ. உ. சி.

விடுதலை வேள்வியின் தொடக்ககால அரசியல் தலைவர்களில் ஒருவராக விளங்கி வரலாறு படைத்தவரான அவர், இலக்கியத் துறையிலும் சாதனைகள் நிகழ்த்தியவர்.

மொழிபெயர்ப்பாளராகவும் உரையாசிரியராகவும் பதிப்பாசிரியராகவும் விளங்கிய வ.உ.சி. சிறந்த கட்டுரையாளராகவும் விளங்கிப் பல அரிய கட்டுரைகளை எழுதியுள்ளார். அவற்றுள், என் பார்வைக்குக் கிடைத்தவை இங்குத் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபடுவதற்கு முன்பே இலக்கிய முயற்சிகளில் கவனம் செலுத்தினார். 1900 ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் 'விவேகபாநு' என்ற ஆன்மீகத் திங்கள் இதழ் வெளிவருவதற்கு முன்னின்று பெரிதும் உழைத்தவர் அவர். இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழில் வெளிவந்த ஆன்மிகத் தொடர்பான இதழ்களுள் குறிப்பிடத்தக்கது 'விவேகபாநு'. இந்த இதழில்தான் வ.உ.சி.யின் முதல் கட்டுரையும் வெளிவந்தது. 'கடவுளும் பக்தியும்' என்பது கட்டுரைத்தலைப்பு. கடவுளைப் பற்றியும் பக்தியைப் பற்றியுமான உன்னதமான விளக்கங்கள் அக்கட்டுரையில் இடம் பெற்றுள்ளன. அதை எழுதியபோது அவருக்கு வயது 28. இருபத்தெட்டு வயதிலேயே அவருடைய மனம் கடவுள் ஞானத்திலும் தத்துவ விசாரணையிலும் தோய்ந்

திருந்தமை குறிக்கத்தக்கது. இதைத் தொடர்ந்து அவர் எழுதிய கட்டுரைகளே 'விதி அல்லது ஊழ்', 'கடவுள் ஒருவரே' என்பன.

'சுதேசாபிமானம்', 'சுதேச ஸ்டீமர் விக்ஞாபனம்' ஆகியவை விடுதலை உணர்வை மக்களிடையே பரப்பும் முயற்சியின் ஒரு பகுதியாக அமைந்த கட்டுரைகள். 'சுதேசாபிமான'த்தில் 'சுதேசம்' என்பதற்கும், 'அபிமானம்' என்பதற்கும் விளக்கம் தரும் வ.உ.சி. சுதேசாபிமானம் (நாட்டுணர்வு) எப்போது வெளிப்பட வேண்டும், எப்படி வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதையெல்லாம் கூறி, அதனால் விளையும் பயனையும் குறிப்பிடுகின்றார். சாதி மத வேறுபாட்டுணர்வுகளை ஒதுக்கிவைத்துவிட்டு, நாட்டுக்கு உழைக்க வாருங்கள் என்று அழைக்கின்றார்.

'சுதேச ஸ்டீமர் விக்ஞாபனம்' தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையில் ஓட்டுவதற்கு வேண்டிய இரண்டு 'ஸ்டீமர்'களையும் இரண்டு 'லாஞ்சு'களையும் வாங்குவதற்கு உரிய தொகைக்கான பங்குகளைப் (1 பங்கு ரூ. 25) பொதுமக்கள் வாங்கிட வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைக்கின்றது.

'மனிதனும் அறிவும்', 'மனமும் உடம்பும்', 'வினையும் விதியும்' இவை மூன்றும் வாழ்வியல் கட்டுரைகள்.

விடுதலை இயக்கம் தாய்மொழிப் பற்றை வளர்த்தது. தேசியக் கல்வித்திட்டம் தாய்மொழியே பயிற்றுமொழியாக வேண்டும் என்று வலியுறுத்தியது; மொழித்தூய்மைக்கும் பாடுபட்டது. ஆங்கிலச் சொற்கள் கலவாமல் எழுதுவதே இன்றைய தேவை என்று வற்புறுத்தப்பட்டது. இது வ.உ.சி. வாழ்ந்த காலச் சூழல். இதை ஒட்டி அவர், 'தமிழ் எழுத்துக்கள்' 'தமிழ்' என்ற இரண்டு அருமையான கட்டுரைகளை எழுதியுள்ளார். அவைமுறையே ஞானபாநுவிலும் சுதேசமித்திரனிலும் வெளிவந்துள்ளன.

1915 ஜூலை ஞானபாநுவில் பாரதியார் 'தமிழில் எழுத்துக் குறை' என்ற தலைப்பில் எழுதிய கடிதம் வெளிவந்தது. பாரதியாரின் அந்தக் கடிதத்திற்கு மறுப்பாக அல்லது பதிலாக அமைந்ததே 'தமிழ் எழுத்துக்கள்' என்னும் கட்டுரை. எழுத்துச் சீர்திருத்தம் பற்றிப் பெரிதும் பேசப் படும் இந்நாளில் பாரதியார், வ.உ.சி. கட்டுரைகள் படிப் பதற்கும் சிந்திப்பதற்கும் உரியனவாய் அமைந்துள்ளன.

'தமிழ்ப்பாஷையும் சுதேசமித்திரனும்' என்னும் தலைப் பில் 'பாரத புத்ரன்' என்பவர் சுதேசமித்திரனில் எழுதிய கடிதத்தைப் பற்றிய தம்முடைய கருத்துகளை வ.உ.சி. 'தமிழ்'என்னும் கட்டுரையில் விவரித்துள்ளார். அவருடைய கலைச்சொல்லாக்கம் பற்றிய சிந்தனைகளை இதில் காண முடிகிறது.

'தமிழ் நூல்கள்' என்ற கட்டுரையில் தமிழ் இலக்கண இலக்கிய நூல்களை அறிமுகம் செய்கிறார். இக்கட்டுரை வ.உ.சி. யின் தமிழ் அறிவுப் பரப்பையும் திறனாய்வுப் பார்வையையும் உணர்த்த வல்லது.

திருக்குறளில் அமைந்துள்ள முதல் மூன்று அதிகாரங்களாகிய 'கடவுள் வாழ்த்து', 'வான் சிறப்பு', 'நீத்தார் பெருமை' ஆகியன திருவள்ளுவரால் இயற்றப்பட்டவை அல்ல என்பது வ.உ.சி. கருத்து. தம்முடைய இந்தக் கருத்தை வலியுறுத்தி அவர் எழுதியுள்ள செய்திகளின் தொகுப்பே 'திருவள்ளுவரி திருக்குறள்' என்ற தலைப்பில் அமைந்த இரு கட்டுரைகளாகும்.

சிவஞான போதத்திற்கு எளிய உரை எழுதியவர் வ.உ.சி. உரை எழுதியதோடு அவர் மனம் நிறைவடையவில்லை. சிவஞானபோதத்தின் ஆறாவது சூத்திரத்திற்குத் தனியானதொரு ஆராய்ச்சியாக,'சிவஞான போத ஆறாஞ் சூத்திர ஆராய்ச்சி' என்ற கட்டுரையை எழுதியுள்ளார். 'அசத்', 'அசித்' இரண்டில் எது சரியான பாடம் என்பதை இக் கட்டுரையில் விவாதித்துள்ளார்.

வ.உ.சி. எழுதி வெளிவந்துள்ள கட்டுரைகளில் என் பார்வைக்குக் கிடைத்த பதினைந்து கட்டுரைகள் இங்குத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. இவற்றை ஆன்மிகம், அரசியல், இலக்கியம் என்ற தலைப்புகளுக்குள் அடக்கலாம். இக்கட்டுரைகள் 1900—1935 என்னும் காலப் பகுப்பில் அவ்வப்போது எழுதப்பட்டனவாகும். இவை வ.உ.சி.யைப் பல்வேறு கோணங்களில் பகுத்தறியப் பெரிதும் பயன்பட வல்லவை.

விவேகபாநு (குற்றாலம்), விவேகபாநு (மதுரை), ஞானபாநு (சென்னை), தமிழ்ப்பொழில் (தஞ்சை), சுதேசமித்திரன் (சென்னை), தினமணி (சென்னை) ஆகிய திங்கள், நாளிதழ்களிலிருந்து இக் கட்டுரைகள் தொகுக்கப் பட்டுள்ளன.

வ.உ.சி.யின் கட்டுரைகள் தொகுக்கப்பட்டு நூல் வடிவில் வெளிவருவது இதுதான் முதல்முறை.

'மனிதனும் அறிவும்', 'மனமும் உடம்பும்', 'வினையும் விதியும்' ஆகிய வ.உ.சி.யின் கட்டுரைகள் பற்றிய குறிப்பை முதன் முதலில் தந்தவர் அறிஞர் பெ.சு. மணி ஆவார். தம்முடைய 'வீரமுரசு சுப்பிரமணிய சிவா' (1984) என்னும் நூலில் (பக். 263—64) அவர் இதைக் குறிப்பிட்டுள்ளார். 'சிவஞான போத ஆறாஞ் சூத்திர ஆராய்ச்சி' என்னும் கட்டுரை பற்றிய செய்தி அவர் மூலமே எனக்குக் கிடைத்தது. இந் நான்கு கட்டுரைகளும் பார்வைக்குக் கிடைக்கும் இடங்களைக் கூறி, அவற்றைப் படியெடுக்க உதவிய அவரை என்றும் மறவேன்.

மறைமலையடிகள் நூலகம், அடையாறு உ.வே.சா. நூலகம், சென்னைப் பல் கலைக் கழக நூலகம், தினமணி நூலகம், பிரம்ம ஞானசபை நூலகம் (மதுரை) ஆகிய நூலகங்களும் குமரி மலர் இதழ்களும் இத் தொகுப்பு முயற்சிக்குப் பெரிதும் பயன்பட்டன, அவற்றின் பொறுப்

பாளர்களுக்கும் நூலகர்களுக்கும் நூலகப் பணியாளர் களுக்கும் என் நன்றி.

பதிப்புத் துறையில் என்னை வழிநடத்திச் செல்பவரும் தம் இனிய பண்புகளாலும் செயல்களாலும் பதிப்புத் துறையில் வரலாறு படைத்தவருமான பாரி நிலைய உரிமையாளர் பெரியவர் திரு. க.அ. செல்லப்பன் அவர்கள் என் நெஞ்சில் நிறைந்தவர். அவர்களுடைய வெளியீடாக இந்த நூல் வருவதை எண்ணி மகிழ்கிறேன்.

செல்வமும் செல்வாக்குமாக இருந்த காலத்திலும் (1898—1907) வெஞ்சிறையில் வேதனையில் வாடிய காலத்திலும் (1908—1912) எல்லாம் இழந்து வறுமையில் வாடிய காலத்திலும்(1913—1936) தமிழை மறவாத—இலக்கியத் தொண்டைத் தம் வாழ்வின் ஓர் அங்கமாகவே கருதி வாழ்ந்த தன்னலமற்ற தேச பக்தரான வ.உ.சி.யின் கட்டுரைகளைத் தொகுத்தளிக்கும் வாய்ப்பைக் காலம் எனக்கு அளித்தமையை வாழ்வின் பெரும்பேறாக எண்ணிப் போற்றுகிறேன்.

மா. ரா. அரசு

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | கடவுளும் பக்தியும் | 1 |
| 2. | விதி அல்லது ஊழ் | 15 |
| 3. | ஈகை | 22 |
| 4. | கடவுள் ஒருவரே | 31 |
| 5. | சுதேசாபிமானம் | 37 |
| 6. | சுதேச ஸ்டீமர் விக்ஞாபனம் | 47 |
| 7. | மனிதனும் அறிவும் | 54 |
| 8. | மனமும் உடம்பும் | 59 |
| 9. | வினையும் விதியும் | 63 |
| 10. | தமிழ் எழுத்துக்கள் | 68 |
| 11. | தமிழ் | 75 |
| 12. | தமிழ் நூல்கள் | 84 |
| 13. | திருவள்ளுவர் திருக்குறள் | 111 |
| 14. | திருவள்ளுவர் திருக்குறள் | 133 |
| 15. | சிவஞான போதம் ஆறாஞ் சூத்திர ஆராய்ச்சி | 141 |

# கடவுளும் பக்தியும்

1

பஞ்சபூதச் சேர்க்கையாய்க் காணப்படும் இவ்வுலகத்தின்கண் தோன்றிய எண்ணிறந்த உயிர்களையும் பிரித்துப் பார்ப்போமாயின், அவையாவும் தேவர், மனிதர், மிருகம், பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, ஸ்தாவரம் என்று சொல்லப்படும் எழுவகைப்பிரிவுகளுள் அடங்குமென்பது பிரத்தியக்ஷம். இவைகளில் ஆகாயம், வாயு, அக்னி, அப்பு என்னும் லோகங்களாயிருக்கின்ற சித்தலோகம், கந்தர்வலோகம், தேவலோகம், பிதிர்லோகம் என்பவைகளில் வசிக்கும் சித்தர், கந்தர்வர், சூரியன் முதலிய தேவர்கள், சந்திரன் முதலிய பிதிர்க்கள், அயிராவதம் முதலிய மிருகங்கள், கருடன் முதலிய பக்ஷிகள், கற்பகவிருக்ஷம் முதலிய தருக்கள், இவர்களையொழித்து இப்பூலோகத்தின்கண் வாழும் அறுவகையுயிர்களையும் ஆராய்வோமாயின் யாவற்றிலும் மனிதனே உத்தமஜாதியென அறிவோம். எதனாலெனின் மிருகம், பறவை, ஊர்வன, நீர் வாழ்வன இவை இகலோகப் புத்திமாத்திரமுடையனவாயும், விருக்ஷாதிகள் அது கூட இல்லாதனவாயுமிருக்கின்றன. மனிதனோ இகபர மிரண்டிற்கும் அவசியமான புத்தியை உடைத்தாயிருக்கின்றான். இதனாலன்றோ ஔவையாரும் "அரிது அரிது மானிடராதலரிது" எனப் புகழ்ந்திருக்கின்றனள். இத்தகைய அருமையான ஜென்மம் வாய்க்கப் பெற்றும், சிலர் அதனாலடைய வேண்டிய பயனைக் கனவிலும் நினையாதவராய்,

இவ்வண்ட சராசரங்களுக்கும் ஆதிகாரணனான வோர் கடவுள் இல்லவே இல்லையென வாயாற்பிதற்றி, தம் வாணாட்களை வீணாட்களாகக் கழிப்பதோடு நில்லாமல், அப்பரம் பொருளினிடத்தில் விசுவாசமுடையவரை நோக்கி "கடவுள் எங்கிருக்கின்றார்? எங்கேனுமிருப்பின் அவரை யெங்களுக்குக் காட்டுங்கள். இல்லாத பொருளை நம்பி வீணாய் துக்கத்துக்காளாகின்றீர்களே" என்று உபதேசிக்க வும் ஆரம்பிக்கின்றனர். அஞ்ஞானம் என்னும் அந்தகாரத் தால் மூடப்பட்ட அத்தகைய மாந்தர் சற்று ஊன்றி ஆலோ சிப்பாராக. பொருள்களைக் காண்பது கண்ணினுடைய தொழிலன்றோ? அக்கண்ணும் இரவு இருட்டில் என் செய்யும்? ஓர் யானையின் சரீரமே யாயினும் அது பார்க்கச் சக்தியற்றதாயிருக்கிறது. சூரியனுடைய அல்லது அக்னியி னுடைய ஒளி தோன்றினால் மாத்திரம் பொருள்களைக் காணும் சக்தி அதற்கு உண்டாகின்றது. இங்ஙனம் அதிக ஸ்தூலமாய ஒரு பொருளைக் காணற்கே ஒளியை அபேக்ஷிக் கின்ற ஊனக்கண் கொண்டுதானா அவர்கள் கடவுளைக் காண விரும்புவது? என்ன பேதமை! அவருடைய புத்தி யானது இவ்விதம் மழுங்கிப்போவதற்குக் காரணம் என் னென்றுரைப்பது? அவர் பூர்வ ஜன்மங்களிற் செய்த பாவத் தின் கொடுமையோ, உலக விஷயங்களில் அவருக்குள்ள பற்றின் தடிப்போ, மாயையின் வல்லமையோ அறியேம். நிற்க, வேறு சிலர் கடவுள் இல்லையென்று சொல்ல நாவெழாதவராயிருப்பினும் "கடவுள் உண்டென்னின் காணப்படாரோ" என்னும் சந்தேகந்தங்கிய மனதுடைய வராய், கடவுளுக்கு வழிபாடு செய்பவர் போன்று நடிக் கின்றனர்.

மனிதனுக்கு இரண்டு கண்கள் உள. அவற்றுள் ஒன்று புறத்தும் மற்றொன்று அகத்தும் உள்ளனவாம். புறக்கண் ஏறக்குறைய எல்லா மாந்தரிடத்துமுளது. அகக்கண்ணோ

யாவரிடத்து மிருப்பினும் அநேகரிடத்துத் திறக்கப்படாது உறங்குகின்றது. கடவுளானவர் நித்தியராய் எங்கும் வியாபித்திருக்கின்றவராயினும் ஞானக்கண் என்று சொல்லப்படும் இவ்வகைக்கண் திறக்கப்படுகிறவரை மாந்தர் அவரை யுணரும் வலியற்றவராயிருக்கிறனர். ஆதலின் தாம் குருடராயிருப்பதை மறந்து ஒருவரும் கடவுள் இல்லை யென்று சொல்லலாகாது. தக்க ஆசிரியரைப் பின்பற்றி அவ்வுண்மைப் பொருளையடைய எல்லாரும் முயலக் கடவர். சிலர் பொருள், புகழ் என்பவற்றைச் சம்பாதிப் பதற்காக ஆசிரியர்களெனப் பெயர் வகித்துக் கொண்டு சீஷர் எனத் தம் அடிகளை வணங்குபவர்க்குத் தமக்குத் தோன்றியவாறு யாதேனுமொன்றைச் சொல்லிக் காலம் கழித்து வருகின்றனர். இம்மாதிரியான குருக்களை யணுகா திருக்க மிகவும் ஜாக்கிரதையாயிருப்பதுடன் சாஸ்திர சம்பிரதாயங்களை மாணாக்கர்களுக்குப் போதிக்கும் போதககுரு, வேதககுரு, நிசிதகுரு, காமியகுரு, சூசககுரு, வாசககுரு, காரககுரு, விகிதகுரு என்று சொல்லப் படும் எண்வகை ஆசிரியர்களுள், வசியம், ஆகர்ஷணம் முதலிய வித்தைகளைப் போதிக்கும் நிசிதகுருவையும் சுகர்ம உபதேசத்தால் சுவர்க்காதிகளில் சிறிதுகாலம் சுகமடையச்செய்து பின்னும் மனித ஜென்மம் எடுக்கும் படி செய்யும் காமிய குருவையும் நீக்க வேண்டியது. மற்ற அறுவர்களுள் போதககுரு சாஸ்திரார்த்தம் போதிக் கின்றவரும், வேதககுரு தத்துவ தெரிசனம் செய்விக்கின்ற வரும், சூசககுரு தமது விவேகத்தினால் சமம்,[1] தமம்,[2]

1. சமம்:—மனமானது உலகவிஷயங்களில் செல்லாமல் தடுத்தல்.

2. தமம்:—இந்திரியங்கள் விஷயங்களில் செல்லாமல் தடுத்தல்.

விடல்,[3] சகித்தல்,[4] சமாதானம்,[5] சிரத்தை[6] என்று சொல்லப்படும் அறுவகை நற்குணங்களையும் ஒருங்கே வரச் செய்பவரும், வாசககுரு கருத்துப் பொருள் காட்சிப் பொருளாய் நின்றுள்ள விஷயமனைத்தையும் அநித்திய மெனக்காட்டிப் பரமாத்மாவினிடத்தில் நேரே பிரியம் வரச் செய்பவரும், காரககுரு ஜீவேசுவர ஐக்கிய ஞானம் இனைய தெனப் போதிப்பவரும், விகிதகுரு கடவுட் பேறாகிய மோக்ஷத்தையளிப்பவருமாகின்றாராதலின், மாந்தர் அவரவர்க்கேற்ற குருவினிடத்திற்சென்று, அவரைச் சந்தோஷிப்பித்து அவரால் உபதேசிக்கப்பட்டவழியில் நடந்துவிட முயற்சி செய்தாலொழிய ஒப்பற்ற பரம் பொருளின் கிருபா நோக்கத்திற்குப்பாத்திரராதல் கூடாத காரியம். "இதற்காக இத்தனை பிரயாசையேன்? கடவுளை யுணர்ந்தடையாவிடின் கெட்டுபோவது யாது? பசிக்கு உணவில்லையா? உடுக்க வஸ்திரம் இல்லையா? பின்னால் பார்த்துக்கொள்வோம்; இப்போது என்ன அவசரம்", என்று யாரேனும் சொல்வாராயின் அன்னோர் உண்மை யறியாது சொல்கின்றனரேயன்றி வேறில்லை. ஏனெனில் சுகமடையும் பொருட்டே சகல பிரவிர்த்திகளும் செய்யப் படுகின்றன.

---

3. விடல்:—உலக விவகாரங்களைச் சுருக்குதல்.

4. சகித்தல்:—சுக துக்கங்களை ஒன்றாய்ப்பாவித்து அனுபவித்தல்; காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் இவைகளைச் சகித்தலெனவும் சொல்வர்.

5. சமாதானம்;—குருவினிடத்தில் கேட்டபொருளில் மனதை ஏகாக்கிரப்படுத்தல். எதிலும் சஞ்சலப்படா திருத்தல் எனவும் சொல்வர்.

6. சிரத்தை:—குருவினிடத்திலும் சத்சாஸ்திரத்தி னிடத்திலும் விசுவாஸம் வைத்தல்.

ஒருவன் யுத்தகளத்தில், பீரங்கிக் குண்டுகளின் மத்தியில் தன் உயிரை வெறுத்து நின்று யுத்தம் செய்கின்றான். மற்றொருவன் கப்பலிலேயே வாசம் செய்து கொண்டு சமுத்திரமெல்லாம் சுற்றுகின்றான். வேறொருவன் தூரதிருஷ்டிக் கண்ணாடியைக் கையிற் பிடித்துக்கொண்டு ஆகாயத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறான். இவரெல்லாம் இங்ஙனம் பிரயாசைப்படுவது எதற்காக? சுகமடைதற்கன்றோ? பணத்திற்கெனின் அதுவும் சுகத்தை முன்னிட்டன்றோ? கீர்த்திக்கெனின் அதுவும் திருப்தியின் பொருட்டன்றோ? திருப்தியும் சுகமும் ஒன்றேயாமாதலின் ஜீவர்கள் பிரவிருத்திக்கிற சகல பிரவிருத்திகளும் சுகத்திற்காகவேதானென்பதற்கையமென்னை? கடவுள் சுகசொரூபமாயிருத்தலின் மாந்தர்கள் கடவுள் இல்லையென்று வாயினாற் சொல்லினும் அந்தரங்கத்தில் அவரிடத்திலேயே நாட்டமுடையவராயிருக்கின்றனர். இவ்வெதார்த்தம் அவர் உணர்கின்றாரில்லை. திசையறி கருவியை எவ்விடத்தில் எம்முகம்நோக்கி வைப்பினும் காந்தசக்தியால் அது வடதிசையையே நோக்கி நிற்றல் போன்று மாந்தர்கள் எந்நிலையில் எவ்விடத்திருப்பினும் சுகசொரூபமாகிய கடவுளையே நோக்கியிருக்கின்றனர். ஒருக்கால் திசையறிகருவி வேறு முகமாயினும் இவர் கடவுளினின்றும் வேறுமுகமாதலில்லை. தாகத்தால் வருந்துமொருவன் ஜலத்தைப் பார்த்துக்கொண்டேயிருப்பானாயினும் அவன் தாகம் தணியுமா? தணிய மாட்டாது. தாகசாந்தியுண்டாக வேண்டுமாயின் ஜலத்தைப் பானம் செய்தல் வேண்டும். அதுபோன்று கடவுளின் சொரூபமாகின்ற சுகத்தையே மாந்தர் சதா நாடிக்கொண்டிருப்பினும் அவரது வடிவம் முழுவதும் வியாபித்து அவரையே அனுபவிக்கத் தொடங்கும் வரை மாந்தர்க்கு நித்திய சுகம் லபிக்கமாட்டாது. கடவுளானவர் சர்வ வியாபு

கராயும், உண்மைப் பொருளாயும், சிதானந்த சொரூப ராயும், சகல தோற்றங்கட்கும் ஆதாரமானவராயும், ஆதிமத்தியாந்த ரகிதராயும், அவிவேகிகளாற் காணப் படாதவராயும், விவேகிகளால் எளிதில் அடையப்படுபவ ராயும் விளங்கிக் கொண்டிருக்கிறார். அவரது சொரூபம்,- 'மெய்மொழி'யில்,

**1. இப்படி யிருப்பதொன்றென் றியம்புவ தொன்றதின்றி**
**யொப்புட னுணர்வு சூழ்ந்த வுணர்விறந்**
**துணர்வாயென்றுந்**
**தப்பில் பேரின்ப மாகிச் சந்ததம் விளங்கி யெங்கு**
**மப்படி யிருப்பதொன்றங்கதற்கு மாஞ்சிவம தன்றே.**

**2. எல்லாந்தானுள்ளதாகி யெல்லாத்துக் குள்ளுமாகிச்**
**சொல்லாத பொருளுமாகித் தொல்லையாயெல்லையின்றி**
**யல்லாதவடி வொன்றின்றி யானந்தவடிவேயாகிக்**
**கல்லாதோர் காட்சியாகிக்கலந்து தானிருந்ததன்றே.**

என்று விளக்கப்பட்டிருக்கின்றது. இம்மகிமைகளால் விளங்கும் பரம்பொருளை அடைந்தாலன்றி ஜீவர்களுக்கு நித்தியானந்தப் பிராப்தி சித்திக்கமாட்டாதென்பது திண்ண மாகையால்தான் சுருதிகள் அக்கடவுளை யடையுமார்க்கங் களையே பேசுகின்றன.

3. சுருதிகளில் கர்மம், பக்தி, ஞானம் என மூன்று மார்க்கங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றில் கர்மம் இகபரமிரண்டினிலுமுள்ள விஷயங்களின் மேலெழும் இச்சையை விடுத்து நிஷ்காமியமாக வேதத்தில் விவரிக்கப் பட்டிருக்கின்ற எக்ஞாதிகளைச் செய்தலாம். இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தியானம், தாரணை, சமாதி என்று சொல்லப்படும் அஷ்டாங்க யோகங்களை அணிமாதி சித்திகளின் பொருட்டன்றிப் பழகுதலும் இதனுள் அடங்கும். அன்றியும் லாபம்

நஷ்டம், வெற்றி தோல்வி, சுகம் துக்கம் முதலிய துவந்துவங்களைவிட்டுச் சமபுத்தியுடன் கர்மபலத்தில் இச்சையில்லாமல் செய்யும் சகலகர்மங்களும் இம்மார்க்கத்தில் செல்கின்றவர் அனுசரிக்கத்தக்கவைகளாம். இந்த நிஷ்காமிய கர்மத்தினால் சித்தமானது அதிலுள்ள மலினம் நீக்கப்பட்டு ஞானாப்பியாசத்திற்கு ஏற்றதாகச் செய்யப் படுகின்றது. அதனாலேயே இதனையும் மோக்ஷசாதனமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. சிலர் நித்திய நைமித்திக, பிராயச்சித்த கர்மங்களைச் செய்வதினாலேயே, மோக்ஷம் அடையலாமெனக் கூறுவர். வேதத்தின் கருத்து அஃதன்று. இதனை இனிது விளக்கத்தக்க ஓர் சிறிய கதை புராணத்தில் கூறப்பட்டிருக்கின்றது. அது வருமாறு:—

ஓர்காலத்தில் கைலயங்கிரியில் ஸ்ரீபரமசிவனானவர் ஓர் அழகிய மாம்பழத்தைத் தமது திருக்கரத்தில் உடையவராய் வீற்றிருந்தார். அப்பொழுது சமீபத்தில் விளையாடிக் கொண்டிருந்த அவருடைய மூத்தகுமாரராகிய விநாயகரும் இளைய குமாரராகிய சுப்பிரமணியரும் அந்த மாங்கனியைக் கண்டு விருப்பமுற்றவர்களாய்ப் பிதாவினிடத்திற்சென்று அதைத் தங்களுக்குக் கொடுத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர். ஸ்ரீபகவான் "இந்தப்பழத்தைத் தருகிறேன்; நீங்கள் இருவரும் பங்கிட்டு எடுத்துக் கொள்ளுங்கள்" என்றார். அதுகேட்ட இளைய குமாரர் "நன்றாயிருக்கின்றது, எனக்கு வேண்டுவதில்லை; கொடுத்தால் முழுப்பழத்தையும் கொடுக்க வேண்டும்" என்றார். இவர் சொல்லி வாய் மூடுமுன் மூத்தகுமாரராகிய விநாயகர் "அந்த ஒரு பழத்தையும் எனக்குத்தான் கொடுக்க வேண்டும், அன்று கூட அவனுக்கு ஓர் முழுப்பழம் தாயார் கொடுக்கவில்லையோ? பாதிப்பழம் எனக்கு வேண்டுவதில்லை" என்று சொல்லிவிட்டு வருத்தமுடையவர் போன்று ஓர் புறமாய் முகத்தைத் திருப்பிக்கொண்டு நின்றனர். இவ்வு

களைக்கேட்ட பிதாவானவர் இவ்விருவர்களுடைய விவேகத்தையும் பரீக்ஷிக்க இது நல்ல சமயம் என்று கருதி அவ்விருவர்களையும் நோக்கி "உங்களில் யாவனொருவன் இந்த அண்டங்களை எல்லாம் சுற்றி முன்னதாக வருகின்றானோ அவனே இந்தப் பழத்தைப் புசிக்கிறதற்கு யோக்கியனாகின்றான். செல்லுங்கள் பார்ப்போம்," என்றனர். இதைக் கேட்டவுடன் சுப்பிரமணியர் நமக்கே ஜயம். நமது தமையன் அவனுடைய தொந்திவயிற்றைத் தூக்கிக் கொண்டு எவ்விதம் சுற்றி வருவான். தவிரவும் அவனுடைய வாகனமும் பெருச்சாளிதானே என்று எண்ணிக்கொண்டு மனதில் சந்தோஷித்தவராய்த் தம்முடைய மயில்வாகன மீதேறி "இதோ அரை நொடியில் வந்து விட்டேன்" என்று சொல்லிப் புறப்பட்டுப் போயினர். விநாயகரோ பிதாவை நோக்கிப் புன்சிரிப்புக் கொண்டவராய் அவரை மூன்று பிரதக்ஷணஞ் செய்து விட்டுக் கனியைக் கொடும் என்று கேட்டனர். ஸ்ரீ பரமேஸ்வரர் மிகுந்த சந்தோஷம் அடைந்தவராயினும் அதனை வெளியில் தோற்றச் செய்யாமல் அதிகப்பிரியத்துடன் விநாயகரை நோக்கி "அப்பா நான் அண்டத்தைச் சுற்றி வந்தவனுக்ன்றோ இந்தப்பழம் கொடுப்பதாகச் சொல்லியிருந்தேன். நீ என்னைப் பிரதக்ஷணம் செய்து விட்டுக் கனியைக் கொடுக்கச் சொல்லுகின்றனையே! அஃதேன்?" என்று வினவினர். அதற்கு விநாயகமூர்த்தி "நும்மை நீர் அறியீர் போலும். அண்டசராசரங்கள் யாவும் நும்மையன்றியுண்டோ? அவையாவும் நும்மிடத்திலன்றோ விளங்குவது? இவ்வுண்மைைய யான் நன்றாய் அறிவேன். கனியைக் கொடும்" என்று சொன்னார். அதுகேட்ட பிதாவானவர் நன்று நன்றென்று தலையை அசைத்து மிகுந்த களிப்படைந்தவராய்ப் பாலனைத் தமது அருகிலழைத்து முத்தமிட்டுக் கனியையும் அளித்தனர். சுப்பிரமணியரும்

தமது வாகனம் வாயுவேகமும் மனோவேகமும் பின்னிடும்படி அதிவேகமாய்ச் சென்றமையின் அண்டங்களையெல்லாம் க்ஷணத்திற்குள் சுற்றி முடித்துப் பிதாவிடம் வந்த பொழுது கனியானது தன் தமையன் கையில் இருக்கக் கண்டு வருத்தமடைந்து நின்றார். பின்பு அதன் காரணத்தைப் பிதா விளக்க அறிந்து கொண்டார்.

4. கருமத்தினால் எவ்வளவு முயன்றாலும் மோக்ஷ பலம் இல்லையென்பதும் அஃது ஞானத்தினால் அடையத் தக்கதென்பதும் இக்கதையில் குறிப்பித்தமை காண்க. இது நிற்க, முன்கூறிய நிஷ்காமிய கர்மம் மோக்ஷமார்க்கங்களுள் ஒன்றாயினும் மிகவும் பயப்படத்தக்கது. ஏனெனின் தன் உள்ளத்தில் இச்சை சிறிதும் இன்றென்று ஒருவன் எண்ணிக்கொண்ட போதிலும் அவன் அறியாமல் இருதயத்தில் கிஞ்சிற்று தங்குமாயின் அவன் கர்மத்தால் பந்திக்கப்பட்டு ஜென்மத்திற்காளாகின்றான். மற்றைய ஞானமோ, கத்திமுனையில் நடப்பதைப்போல மிக்கக் கடினமானதெனப் பெரியோரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. அவ்விதமாகவே பகவத்கீதையில் ஸ்ரீ பகவானும் அருளிச் செய்திருக்கிறார். ஆதலின் இவ்விரண்டு மார்க்கங்களும் எல்லார்க்கும் உரியனவாகா. பின் சகலரும் கைக்கொள்ளத் தக்கதுதான் யாதோவெனின் பக்தி ஒன்றேயாம்.

5. இஃது லகுவான மார்க்கமாயிருத்தலாலும் ஸ்திதி, வருணம், சமயம் முதலிய பேதத்தால் நீக்கப்பட வேண்டியதாகாமல் எவராலும் கைக்கொள்ளக்கூடியதாயிருத்தலானும் இஃதை யாவரும் அனுசரித்து உய்யும் பொருட்டு இஃதைப்பற்றிய கிரந்தமொன்று ஸ்ரீநாரத பகவானால் சூத்திரவடிவமாக எழுதப்பட்டிருக்கின்றது. பகவத்கீதையில் ஸ்ரீபகவானும் பக்தர்களை வெகுவாய்ப் புகழ்ந்திருக்கின்றார்,

6. பக்தி என்பதற்கு அன்பு, விசுவாசம் என்று பொருள்படும். அஃது இரண்டுவிதம் எனக்கூறலாம். அவை யாவன :—கண்டம், அகண்டம். இவற்றுள் கண்டபக்தி யாவது ஏதேனுமோர் பொருளை ஈசுவரனாகப் பாவித்து அதனிடத்தில் அன்புசெய்தலாம். ஒருவன் இந்தியாவின் தென்முனையாகின்ற கன்னியாகுமரியில் நின்றும் புறப் பட்டு வடக்கே இமயகிரிக்குச் சமீபமாயுள்ள ஹரித்துவாரத் திற்கோ, வாரணாசி என்று சொல்லப்படுகிற காசிக்கோ ஈசுவரதெரிசனைக்காகச் செல்கின்றான். வேறொருவன் கருடன் என்னும் பக்ஷியைப் பகவானுடைய வாகனமாகக் கருதி சனிவாரத்தின் மாலையிலும் ஆதிவாரத்தின் காலை யிலும் தெரிசனம் செய்து வருகின்றான். ஒரு ஸ்திரீ அசுவத்தம் என்று சொல்லப்படும் அரசமரத்தைப் பிரத க்ஷணம் செய்கின்றாள். பெரிய புராணத்தில் ஒரு நாயனா ருடைய சரித்திரம் சொல்லப்பட்டுள்ளது. அதுவருமாறு : சைவசமயம் எங்கும் பரவும்படி செய்துவந்த கழற்சிங்க நாயனார் என்பவர் தம் மனைவியோடு சிவஸ்தலங்கள் தோறும் சென்று சுவாமி தெரிசனம் செய்து வருபவராகித் திருவாரூரையடைந்து கோயிலில் பிரவேசித்து சுவாமியை வணங்கினார். அப்பொழுது அவருடைய தேவி கோவிலை வலஞ் செய்து புஷ்பமாலை கட்டும் மண்டபத்தின் பக்கத் தில் வரும்போது அங்கு விழ்ந்துகிடந்த மலரொன்றை யெடுத்து மோந்தனள். உடனே செருத்துணைநாயனார் என்பவர் அம்மாது இதனைப் புஷ்பமண்டபத்திலிருந்து எடுத்து மோந்தனள் என்று நினைத்து ஓடிவந்து அவளு டைய கூந்தலைப் பற்றி இழுத்து வீழ்த்தி அவள் மூக்கைக் கத்தியினால் அரிந்தார். அவள் வருத்தமுற்றுப் புலம்புகை யில் சுவாமி தெரிசனம் செய்துகொண்டிருந்த கழற்சிங்க நாயனார் சமீபத்தில் வந்து யாது சங்கதி யென்று வினாவ, செருத்துணைநாயனார் "இவள் சுவாமிக்குச்

சாற்றுதற்குரிய புஷ்பத்தை எடுத்து மோந்தமையால் யானே இங்ஙனம் செய்தேன்" என்றனர். அப்பொழுது கழற்சிங்கநாயனார் அவரை நோக்கி "புஷ்பத்தை யெடுத்த கரத்தையன்றோ முன்னே துணித்தல் வேண்டும்" என்று தம்முடைய வாளையுருவிக் கையையும் துணித்தார்.

7. இவையெல்லாம் கண்டமென்று முன்னர்காட்டிய டக்தியினுள் அடங்குமாயினும், அவற்றுள் மோக்ஷ லாபத்தை உத்தேசித்துச் செய்யப்படுபவைகளே ஏற்ற முடையதும் பக்தி என்றழைக்கத்தக்கதுமாம். இக்கண்ட பக்தியால் முற்காலத்தில் அநேக உயிர்ச்சேதங்கள் நடந்திருப்பதுந்தவிர தற்காலத்திலும் எங்கும் சண்டை சச்சரவுகளும் அபூர்வமாய் உயிர் நாசங்களும் நடந்துகொண்டு வரினும், விசேஷ அறிவில்லாத சாதாரண மாந்தர்க்கு இஃதே பின்னால் விவரிக்கப்படும் அகண்ட பக்திக்கேறும் ஓர் படியாக இருக்கின்றது.

அகண்டபக்தியாவது

**தெரிவரிய சிற்கனமாய்த் திகழ்சிவனே திசைமுகனு**
**மரியுடனவ்வரனும் வனமரரதிபதியுமவன்**
**துரிசரவேயக்கரமாய்ப் பரமாகுமஞ்சுராட்டுமவ**
**னெரியுமழல் காலனவனிந்துவொடு பிராணனவன்.**

**ஒழிந்ததொருபொருளில்லை யுள்ளதெலாமவனே முன்**
**கழிந்தபொருண்மேலு மவரக்கடவ பொருடானுமவன்**
**மொழிந்ததனிப் பரவிச்சை[1] யவிச்சை[2] யெனுமுற்றுமவ**
**னிழிந்த பிறப்பறவேறோர் வழியில்லை யிவனொழிய.**

என்று பிரமகீதையிற் சொல்லியிருக்கிறபடி கருத்துப் பொருள் காட்சிப்பொருள் யாவற்றையும் அவைகட்கெல்

1. பரவிச்சை—மேலானஞானம்
2. அவிச்சை—அஞ்ஞானம்

லாம் ஆதிமூலகாரணனாயுள்ள கடவுளாகவே பாவித்து அன்பு செய்தொழுகலாம். இங்ஙனம் சகலமும் பகவத் சொரூபமாகப் பார்க்கின்ற பக்தர்கள் "அன்னியமாகிவிடுதல் பற்றுதல் உண்டாகுமேற் பூரணனாகப் பன்னியபெருமைக் கானியாம்" என்று பிரமகீதையிற் சொல்லியிருக்கிறபடி இராகத்துவேஷங்களைவிட்டு சதானந்தராய் பகவத் சன்னிதியினின்றும் விலகாதவராய் மோக்ஷ நிலத்தில் நித்தியமாய் வசிக்கின்றனர்.

8. ஆலவிருக்ஷமானது எத்தனையோ பெரிதாயிருப்பினும் அது முழுவதும் கடுகிலும் சிறிய ஓர் வித்தினிடத்திருந்தன்றோ புறப்படுவது? அதுபோன்று கண்ட பக்தியினின்றே அகண்டபக்தியும் உண்டாகின்றது. ஒன்றுமில்லாததிலிருந்து யாதும் தோன்றாதென்பது திண்ணம். ஆதலின் மாந்தரிடத்து அன்பில்லையாயின் அதையுண்டாக்குவது அசாத்தியம்; ஆனால் அன்போ சகல மாந்தர்கட்கும் பிராணனாயிருக்கின்றது. அன்பில்லையாயின் ஒருவரும் ஜீவிக்கமாட்டார்கள். ஒருவனுக்கு மனைவியினிடத்திலும், மற்றொருவனுக்குப் பொருளினிடத்திலும், வேறொருவனுக்குக் குழந்தையினிடத்திலும் அன்பு அல்லது பிரியம் மிகுந்திருக்கின்றது. இவர்களுள் எவனையேனும் அவன் பற்றியிருக்கும் விஷயத்தின் மேலுள்ள அன்பை எடுத்துவிட ஒருவன் உபதேசிப்பானாயின் அவன் தன் அன்பை வேறொன்றின் மேல் செலுத்தப்பார்க்கின்றான். அவ்விதம் அவன் தன் அன்பிற்கேற்ற பொருள் காணானாயின் மரிப்பதே சிலாக்கியமென நினைக்கின்றான். இவ்விதமாக சகல ஜீவர்களும் ஏதேனுமொன்றை அன்பினால் பற்றியிருத்தலினாலேயே ஜீவிக்கின்றார்கள். ஆதலின் உயிரும் அன்பும் வேறன்று. அஃதாவது ஜீவன் அன்பின் சொரூபமாகவே யிருக்கின்றான். கடவுளோ அன்பாகின்ற ஜலத்தினால் நிறைந்த சமுத்திரமாயிருக்கின்றார். ஆதலின் மாந்தர்க்கு

அன்பானது எவ்வளவுக்கெவ்வளவு விரிகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு அவர் கடவுள் தன்மையை அடைந்தவராகின்றனர். ஆதலின் கடவுட்பேறாகிய மோக்ஷத்திற்கு மார்க்கம் அகண்ட பக்தியாயும், அதற்கு மார்க்கம் கண்ட பக்தியாயுமிருக்கின்றன. இவ்விடத்தில் ஓர் சந்தேகம் ஜனிக்கலாம். அஃதாவது இதன் முன் பாகத்தில் கடவுளானவர் சுகசொரூபியாயிருக்கின்றாரென்றும், இப்போது அவர் அன்பு வடிவமாயிருக்கின்றாரென்றும் சொல்லப்பட்டிருக்கின்றதென்பதே. இச்சந்தேகமானது சற்றூன்றி யோசிக்கில் நிவிர்த்தியாகத்தக்கது. எங்ஙனமெனில் அக்கினியானது உஷ்ணசொரூபமாயும் ஜோதி சொரூபமாயும் இருக்கின்றதென்றால், எவ்விதம் இரண்டும் பேதப்படாமல் ஒன்றாகவே யிருக்கிறதாகக் கிரகிக்கப்படுகிறதோ அதுபோலவே இதுவும் கிரகிக்கத்தக்கது.

9. மேற்சொல்லிய அகண்ட பக்திக்கும் ஞானத்திற்கும் பேதம் என்னையோவெனின் முடிவில் இரண்டும் ஒன்றேயாம். அதனாற்றான் பக்தியும் ஞானமும் மோக்ஷ நிலத்தில் சேர்க்கும் மார்க்கங்களாகச் சொல்லப்படுகின்றன. ஞானமானது கடவுளின் சொரூபத்தை விசாரித்துணர்ந்து அவரையடைதல்; பக்தியானது விசாரணை யொன்றுமின்றி குருவினிடத்தில் கேட்டபடி கடவுளின் சொரூபத்தைப் பாவித்தடைதல். திருஷ்டாந்தமாக ஓர் பக்தனிடத்தில் போய் "ஜெகத்தின் சொரூபம் என்ன? மாய்கை எப்படிப்பட்டது?" என்று இவ்விதக் கேள்விகளை யொருவன் கேட்பானாயின் அவைகட்கெல்லாம் சமாதானம் அவனாற் சொல்லமுடியாது. ஞானியோவெனில் அவைகளை நன்றாய் விளக்குவன். எதார்த்த பக்தனும் தீர்ந்த ஞானியும் விஷயத்தில் வேறல்லர். ஆனால் மார்க்கம் மாத்திரம் வெவ்வேறு.

10. ஆதலின் இவ்வெளிதான பக்திமார்க்கத்திற் செல்ல சகலரும் முயல்வாராக. இஃது மேலான சாயுஜ்ய பதவியை அளிக்கத்தக்கது. ★★

—விவேகபாநு, செப்டம்பர்: 1900;

தொகுதி-ஒன்று, புத்தகம்—1.

# விதி அல்லது ஊழ்

## 2

ஜகம் கானல் நீருக்குச் சமமாயிருக்கிறதென்று அத்வைதிகள் சொல்லுகிறார்கள். கானலிடத்து நீர் எப்படி எதார்த்தத்தில் இல்லையோ தோற்றமாத்திரையில் இருக்கின்றதோ அதுபோலவே சச்சிதானந்தமாய் விளங்கும் பிரமத்தினிடத்தில் உலகமும் தோற்ற மாத்திரையாக இருக்கின்றதேயன்றி எதார்த்தத்தில் இல்லையென்று அவர் சொல்லுவர். அதன் உண்மை எவ்வாறிருப்பினும் நமக்கு ஒரு விஷயம் பிரத்தியக்ஷ அனுபவமாகவே யிருக்கின்றது; அஃதாவது உலகத்தில் மாந்தர் சுகத்தையடையும் பொருட்டுப் பலவித முயற்சிகள் செய்கின்றனர். அவரவர்களுடைய முயற்சிக்குத் தக்கபடி பிரயோஜனமும் சித்திக்கின்றது. ஒருவன் தான்கருதிய பிரயோஜனத்தை முயற்சிவலியால் அடையப் பெற்றானாயினும் அத்துடன் திருப்தியடைந்தவனாகக் காணப்படுகின்றானில்லை. பின்னரும் அவனுடைய புத்தி வேறு எதையேனும் நாடுகிறதாகக் காண்கிறோம். திருஷ்டாந்தமாக, ஓர் மனிதன் தன்னுடைய குடும்பத்தை சம்ரக்ஷணை செய்யப் போதுமான வருமானமில்லாமல் வருந்துகின்றானென வைத்துக் கொள்வோம். அந்நிலையில் அவனுக்கு என்ன தோன்றுகின்றது? "நமது குடும்பத்திற்கு மாதம் 20 ரூபாய் வேண்டியிருக்கின்றதே, இப்போது நமக்கு 15 ரூபாய்தானே வருகின்றது. இன்னும் 5 ரூபாய் அதிகமாக வருமானால் சுகமாகக் காலக்ஷேபம் செய்யலாமே,

அது எப்போது கிடைக்குமோ'' என்று நினைக்கிறான். கடவுள் கிருபையால் அவன் எண்ணப்படி நிறைவேறுகிற தென்று வைத்துக்கொள்வோம். அவன் அதில் திருப்தி யடைவதுண்டோ? ஒருக்காலும் இல்லை. அவனே இலக்ஷாதிபதியானானென்று வைத்துப்பார்ப்போம். அப்பொழுதேனும் அவன் சுகமாயிருப்பதுண்டோ? கிடையாது. பின்னென்ன நினைக்கின்றான்? 'ஆ! ஆ! 70000 ரூபாய் பெறுமான கிராமம் சகாயமான விலைக்கு வந்திருக்கிறதே, 50000 ரூபாய்தானே விலை சொல்லுகிறான். இது நல்ல தருணமாச்சுதே. கையில் பணமில்லையே' என்று வருத்தப்படுகின்றான். இது போலவே உலகத்தில் அடையக் கூடிய சகல—சாதாரண ஜனங்கள் சொல்லுகிற படி சுகசாதனங்களையும் ஒருவன் அடைவானேயாயினும் அவனுக்குத் திருப்தியுண்டாவதில்லை. அஃதாவது சுகம் லபிக்கிறதில்லை. பின்னும் பின்னும் அவனுடைய புத்தி அடைந்தவைகளைத்தவிர வேறொன்றிலேயே செல்லுகின்றது. இவ்விதமாக ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றில் சுகமிருப்பதாகத் தோன்றி அதனை அடைவதற்காக அவரவரால் இயன்றமட்டும் பிரயாசைபட்டுக் கடைசியாய் அதனை யடைந்த பின்னர் அவற்றில் சுகமில்லையெனக்கண்டு, வெவ்வேறு பொருள்களை அவர் நாடிச் செல்கின்றமையால், உலகத்திலுள்ள விஷயங்களில் எதார்த்தமாய்ச் சுகமில்லையென்பதும், கானலில் தோற்றல் மாத்திரையாக ஒன்றன்பின்னொன்றாய் வரும் அலைகள்போல உலக விஷயங்கள் ஒன்றன் பின்னொன்றாய்ச் சுகம் போலத் தோன்றமாத்திரம் செய்கின்றன வென்பதும் வெளிப்படையாகின்றன.

உலகவிஷயங்களால் திருப்தியுண்டாகாமல் போகிறதைத்தவிர துக்கமும் உண்டாகின்றது. இவ்வுண்மையை அநேகர் கவனித்திருப்பதின்றேனும் பலர்க்கு இது பிரத்தி

யக்ஷ அனுபவமா யிருந்திருக்குமென்பதில் சந்தேக மில்லை. பொருளல்லவற்றைப் பொருளென்று மதித்து இவ்விதமாய் உலகவிஷயங்களில் உழன்று வருந்து மனிதன் ஒருவனை நோக்கி "அநியாயமாய்க் கெட்டுப்போகின்றாயே, எவ்வளவு பிரயாசைப்பட்டாலும் உலகவிஷயங்களினின்றும் நித்திய சுகம் அடைந்தவர்களுண்டோ? அவைகளால் துக்கமேயொழிய வேறில்லை. ஆதலின் அவைகளின்மேல் இச்சைவைக்காமல் பகவானுடைய பாதாரவிந்தங்களை யடைந்துய்யும் வழியில் நடப்பாயாக. அதற்கு வேண்டு முயற்சி செய்வதே மனுஷியனுக்குரிய தொழிலாம்" என்று புண்ணியபுருஷர் யாரேனும் சொல்வாராயின், "நான் என்ன செய்யவேண்டும்? எனக்கு நல்லவிதியில்லையே, விதியைக் கடக்க யாரால் முடியும்" என்று அவன் விடையளிக் கின்றான். உலகத்தில் மனிதர்கள் அநேக வார்த்தைகளை வாயினாற் சொல்லிவிடுவதுண்டு; ஆனால் அவற்றின் பொருள்களை விசாரித்துணர்வதில்லை; அவ்விதம் உபயோகிக்கப்படும் பதங்களுள் விதியென்பதும் ஒன்றே. மேற்சொன்ன திருஷ்டாந்தத்தைத்தான் பார்ப்போம். "நான் என்ன செய்யவேண்டும்? எனக்கு நல்விதியில் லையே" என்கின்றான். விதியானது நடு ஆகாயத்திலிருந்து நழுவி அவன் தலையில் விழும்போலும். இதற்கு மாத்திரம் நல்விதியில்லையென்று சொல்லுவதுபோல லௌகிக விஷயத்திலும் அவன் அப்படியேயிருப்பானோ? அவை களின்மாத்திரம் தனக்கு நல்விதி கையிலிருப்பதுபோல் எண்ணி யாவர்க்கு முந்துகின்றானே. இதென்ன பேதமை!

விதி என்னும் பதத்திற்குப் பலபொருள்கள் உளவேனும் இவ்விடத்தில் ஊழ் என்றே பொருள்படும். ஊழ் என்பது ஏதேனும் ஒரு பலனைக் கொடுப்பதற்கு ஏதுவாயுள்ள பூர்வகர்மம். கர்மம் என்றால் செய்கை, தொழில் என்று

பொருள்படும். அது மனம், வாக்கு, காயம் என்பவைகளால் செய்யப்படுவதொன்று. ஒருவன் தன்னுடைய திரிகரணங் களாலும் கர்மங்கள் செய்வானாயினும் அவற்றுள் மனதினால் செய்யப்படுபவைகளே முக்கியமானவைகளாயும் சீக்கிரம் பலனைக் கொடுக்கக்கூடியவைகளாயுமிருக்கின்றன. ஏனெனில் மனமே மற்றக் கரணங்களுக்கெல்லாம் பிரதான மானதாயிருக்கின்றது. இது நிற்க. கர்மமானது வித்துக்குச் சமானமாயிருக்கின்றது. ஒருவன் தன் வயல்களில் வித்து விதைக்காமல் எங்ஙனம் விளைவறுக்க எதிர்பார்க்க முடியாதோ அங்ஙனமே முந்தின ஜென்மங்களில் கர்மம் செய்யமசல் இப்போது அவ்விதகர்மத்தினால் அடையும் பயனை எதிர்பார்க்க முடியாது. அதுபற்றியே தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனாரும்,

**ஊழிற்பெரிது யாவுள மற்றொன்று**
**சூழினும் தாமுந்துறும்**

என்று அருளிச் செய்திருக்கின்றனர். ஆதலின் ஊழ் அல்லது விதி என்பது சாதாரண ஜனங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறது போல எங்கேயோ இருந்து திடீரென வந்திறங்குவதொன்றல்ல வென்பதும் ஆனால் அவரவர் முந்தின ஜென்மங்களில் செய்த கர்மங்களே யாமென்பதும் விளக்கமாயின.

கர்மம் மூவகைப்படும். அவையாவன:—சஞ்சிதம், பிராரப்தம், ஆகாமியம் என்பவைகளாம். அவற்றுள் சஞ்சிதம் அநாதிகாலம் தொட்டு வராநின்ற ஒவ்வொரு ஜென்மங்களிலும் செய்துள்ள கர்மங்களில் பலன் கொடுத் தவைகள் போகப் பாக்கியுள்ளவைகளாம். பிராரப்தமாவது பலன் கொடுக்கத்தக்கனவாயும் ஒரு ஜென்மத்திற் கேதுவா யிருப்பனவாயுமுள்ள கர்மங்களாம். ஆகாமியமாவது பிராரப்தம் அனுபவிக்குங்காலத்தில் புதிதாய்ச் செய்யும்

கர்மங்களாம். இவற்றில் நாயனார் அருளிச் செய்திருக்கின்றது பிராரப்தமேயாம். யாவனேயாயினும் பிராரப்தத்தை அனுபவித்துத் தொலைக்கவேண்டுமேயன்றி அதை விலக்க முடியாது. ஊழ் என்பதற்கு பிராரப்தமென்று சொல்லினும் அமையும். சகலகர்மங்களையும் ஞானத்தீயினால் சுட்டெரித்த மெய்ஞானிகளுக்கே பிராரப்தம் அனுபவித்துத்தான் தீர வேண்டுமானால் மற்றவர்களுக்குக் கேள்ப்பானேன். பிராரப்தம் அனுபவித்துத்தான் தீர வேண்டுமென்று சொன்னால் ஆகாமியம் சத்தர்மமாய் இருக்கப்படாதென்று பொருளா?

'இப்போது வந்திருக்கிற யாத்திரையில் கட்டமுதம் இல்லாமல் வந்திருக்கிறோம். ஆதலால் பசியால் வருந்துகிறோம்' என்று அறிந்தால் அடுத்த யாத்திரையில் பசியால் துன்புறாமலிருக்கக் கட்டமுது இப்போது தயார் செய்து கொள்வது அறிவீனமா? முந்தினபருவத்தில் விதைக்காததினிமித்தம் இப்போது நமது நிலம் தரிசாய்க் கிடக்குமானால் இப்பொழுது வந்திருக்கிற நல்ல பருவத்திலும் விதையாமலிருந்து பின்னர் ஆகாரத்திற்கு வாயைப்பிளந்து கொண்டிருப்பதுதானா விவேகம்? ஜென்மம் எடுத்தவர்கள் ஊழை அனுபவித்துவிட்டுச் சும்மாவா போய்விடுகிறார்கள்? புதிய கர்மம் (ஆகாமியம்) சம்பாதித்துக்கொண்டு போகிறார்களன்றோ? அது சத்கர்மமாயிருந்தாலாகாதா?

ஆதலின் ஒவ்வொருவரும் முந்தின ஜென்மங்களில் பகவானுடைய பாதாரவிந்தங்களை யடைதற்கவசியமான கர்மங்களைச் செய்யாததினால் இச்சென்மத்தில் அத்தகைய மாட்சிமைபெற்ற கடவுட்பேறடைய ஏதுவில்லையாயினும் இப்போதாவது மேலோரிடத்தில் கேட்டு அதற்கு வேண்டிய கர்மங்களைச் செய்யவேண்டுவது அவசியு

மன்றோ? அதைவிட்டுச் சிலர் "எனக்கு விதியில்லையே, விதியிருந்தால் கூட்டிவைக்கும்" என்று சொல்வது "விதைக்கிற காலத்தில் ஊர்வழிபோனால் அறுக்கிற காலத்தில் ஆள்த்தேடவேண்டுவதில்லை" என்ற பழமொழிக்கிணங்க விருக்கின்றது.

ஆதலின் மாந்தர் நல்வழியிற் செல்வதற்கு மாத்திரம் விதிவரட்டுமென்று சொல்லி அல்வழியிற் செல்லவெனின், விதியையும் எதிர்பாராமல் கச்சைகெட்டி நிற்பது அழகன்று. மேலோர் யாரேனும் ஒருவனைச் சன்மார்க்கத்திற் செல்லும்படி உபதேசித்தால் "நாம் ஏதோ பூர்வ ஜென்மத்தில் செய்த சத்கர்மத்தின் பலன்தான் நமக்கிவ்வாறு ஒருவர் சொல்வது; நமக்கு நல்லவிதி வந்துவிட்டது போலிருக்கிறது" என்று நினைத்து, அவருடைய சொல்லைக் கடைப்பிடித்து, அவன் ஒழுகுவதைவிட்டு, "மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்" என்று ஔவையார் உபதேசித்திருப்பதையும் மறந்து, காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் முதலிய துர்க்குணங்களோடு கூடிய மனத்தின்பின் குதிரையின் வாலைப்பற்றி யதன்பின்னோடுகின்ற அந்தகனைப்போன்று தன்னுடைய விவேகமென்னும் நேத்திரமும் கெட்டுச் செல்வானாயின், அவனுடைய கதி அதோகதிதான் என்பதற்கையமென்னை? விதி, விதி, என்று சொல்லி இந்தச் சென்மம் முழுவதும் துஷ்கிருத்தியங்களே செய்து கொண்டிருந்தால் அடுத்த ஜென்மத்தில்தான் நல்ல விதியேது? இவையெல்லாம் நன்றாயாலோசித்து இந்தச் சென்மத்தில் சரீரம் அனுபவிக்கிற சகல சுகதுக்கங்களும் விதிவழிவருகின்றன வென்று அறிந்து அவைகளைப்பற்றி மனதில் கிஞ்சிற்றேனும் சுகதுக்கம் பாராட்டாமல் மனித ஜென்மம் எடுத்ததின் பிரயோஜனத்தை அடைய முயலு

வதில் எல்லாரும் மிகுந்த சிரத்தை யெடுப்பார்களாக. முந்தின ஜென்மங்களில் நாம் செய்த கர்மமே இப்போது விதியாகி நமக்குண்டாகிற சுகதுக்கத்திற்குக் காரணமாயிருக்கின்ற தென்பது நமக்குப் பிரத்தியக்ஷமாதலின் இப்போது சன்மார்க்கத்தில் சிறிதேனும் பழகுவமேல் அதுவும் பின்னிடு பலன் கொடுக்குமென்பதில் என்ன ஆக்ஷேபம்?

ஆதலால் ஒவ்வொருவரும் இனிமேலாகிலும் நல்ல விதியைச் சம்பாதிக்க இப்பொழுதே முயல்வாராக. அருமையான ஜென்மம் கிடைத்திருக்கின்றது.

**காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளல் வேண்டும்.** ★★

*—விவேகபாநு, அக்டோபர், 1900;*
*தொகுதி-1, புத்தகம் 2.*

# ஈகை

## 3

இப்பிரபஞ்சத்தின்கண் தோன்றிய உயிர்கள் பலவுள் உத்தம ஜன்மமாகிய மனிதஜன்மத்தை யடைந்த ஜீவர்கள் சிலரேயாம். அவரிலொருவருக்கொருவருள்ள பேதம் அளவற்றதாயிருப்பினும், அவர் யாவரும் உலகத்தில் நிற்கும் நிலையின் பேதங்களை ஒருவாறு உணரக்கூடும். நமது முன்னோர் அவைகளை நான்காகப் பிரித்திருக்கின்றனர். அவையாவன :—பிரமச்சரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசமாம்.

குணம், தொழில், நம்பிக்கை முதலியன எங்ஙனமிருப்பினும், மாந்தர் இந்நால்வகை ஆச்சிரமங்களுள் ஏதேனுமொன்றில் நிற்கவே நிற்கிறார்கள். அங்ஙனம் நிற்பவருள் முதலாச்சிரமத்திற் குரியோராகிய பிரமசாரிகள் ஆசாரியனிடத்தோதி, விவாகமின்றி விரதங்காத்திருப்போராயும், மூன்றாவதாச்சிரமத்திற் குரியோராகிய வானப்பிரஸ்தர் இல்லந்துறந்து இல்லாளோடாயினும் தனித்தாயினும் வனத்தில் தவம் செய்பவராயும், நான்காவதாச்சிரமத்திற் குரியோராகிய சந்நியாசிகள் அகப் பற்று, புறப்பற்றுகளை முற்றும் துறந்தோராயும் இருத்தலின் அம்மூவகை ஆச்சிரமத்தார்களும் இலௌகிக காரியங்களில் ஒருவருக்கொருவர் உதவிசெய்யும் வலியில்லாதவராயிருக்கின்றனர். ஆனால் இரண்டாவதாச்சிரமத்திற் குரியோராகிய கிரகஸ்தர் இல்லாளோடுங்கூடி இல்லறத்தில் வாழ்பவராதலின்

அவரொருவருக்கொருவர் மாத்திரமன்றி ஏனைய ஆச்சிரமிகளுக்கும் வேண்டுமுதவி புரியத் தக்கவராயிருக்கின்றனர். ஆகவே உலகத்தின் உயர்வும் தாழ்வும் இவருடைய ஆதீனமாகவே இருக்கின்றன. ஒவ்வொரு ஆச்சிரமத்திற் குரியோரும் அவரவர் ஆச்சிரம தர்மத்தை வழுவாது நடத்தினன்றி உலகம் நன்மையும் சுகமுமடையாதேனும், இல்லறத்தார் வழுவின் ஏனையோரும் தமது ஆச்சிரம தர்மங்களினின்றும் நழுவும்படி நேருமாதலின் அவர் சிறிதும் தவறாதொழுகல் உலக நன்மையின் பொருட்டு மிக்க அவசியமாயிருக்கின்றது.

கிரகஸ்தாச்சிரமத்திற்குரிய அறங்கள் பலவுளவேனும் தெய்வப் புலமை திருவள்ளுவநாயனார்,

......மேலுலக
மில்லெனினு மீதலே நன்று

(இதன்பொருள் :— ஈந்தார்க்கு மேலுலகில்லையென்பா ருளராயினும் ஈதலே நன்று. ஈதலே என்னும் பதத்திலுள்ள பிரிநிலை ஏகாரம் பிற அறங்களின் ஈதல் சிறந்ததென்பதைக் குறிப்பிக்கின்றது.) என்று திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்றமையின் அவற்றுள் ஈதலே தலைமைத்தென விளங்குகின்றது. அத்தகைய மேலான அறத்தை யாவரும் கடைப்பிடித்து ஒழுக வேண்டியதாயிருக்க, தற்காலத்தில் ஜனங்கள் அதை முழுவதும் கைவிட்டு, பொருளல்லாததும் அநித்தியமுமான பொருளையே பொருளாகவும் நித்தியமாயுள்ளதெனவும் கொண்டு, தம்மிடம்வந்து யாசிப்பவருக்குத் தம்மாலியன்ற அளவும் ஒரு சிறிதேனும் ஈயாது, புகல்சொல்லியும், நிந்தித்தும், பயப்படுத்தியும் அவரை ஓட்டிவிடுகிறார்கள். இவ்விஷயத்தில் ஆயுதப்பிரயோகம் கூடச் செய்கின்றவர்கள் சிலர் இருக்கிறார்கள். இவர் என்ன கருத்துக்கொண்டு

இங்ஙனம் செய்து வருகின்றனர்? தாம் நித்தியமாயிருந்து அப்பொருளைத் தாம் அனுபவித்தற்குக் காரணமாயிருக்கும் உடலின் தன்மையை அவர் அறிந்திலர் போலும். அவ்வுடலமோ,

**படுமழை மொக்குளிற் பல்காலுந் தோன்றிக்**
**கெடும்**

எனவும்,

**மலையாடு மஞ்சுபோற் றோன்றி மற்றாங்கே**
**நிலையாது நீத்துவிடும்**

எனவும் ஆன்றோர் கூறியிருப்பதையும் பிரத்தியக்ஷமாய்த் தினம் தினம் பார்க்கிறதையும் மறந்து அதனை நித்தியமாயெண்ணிப் புல்லறிவினையே உடையேம் யாமெனக் காட்டுகின்றனரே. இது நிற்க, அவருடைய செல்வந்தான் எத்தன்மைத்தாயிருக்கின்றது? அதன் தன்மையும் நிலையாமையன்றோ?

**அற்கா வியல்பிற்றுச் செல்வம்**

(இதன்பொருள் :— செல்வம் நில்லாத இயல்பையுடையது) எனவும்,

**கூத்தாட் டவைக்குழாத் தற்றேபெருஞ் செல்வம்**
**போக்குமது விளிந்தற்று**

எனவும் மேலோர் கூறியிருக்கின்றனரே. இவ்விஷயமும் யாவர்க்கும் பிரத்தியக்ஷ அனுபவமன்றோ? அங்ஙனமிருந்தும் மாந்தர் ஏனோ இங்ஙனமுழல்கின்றனர்! நித்திரை செய்பவனை ஒருவன் எழுப்பக்கூடும். விழித்துக் கொண்டுறங்குபவனை எழுப்புதலெங்ஙனம்? கூடாதாகலின் அவரவரே தத்தம் அறியாமையையும் அதனால் வரும் கேட்டையும் உய்த்துணர்ந்து விழிப்பாராக. இவர் நிற்க, வேறு சிலர் உள்ளன்பின்றி வேண்டியவாறு வழங்கி வுள்ள

லெனும் கீர்த்திபெற முயற்சிக்கின்றனர். அவரிடத்தில் பசியால் வருந்துமொருவன் சென்று, தனது பசிநோய்க் கிரங்க வேண்டுவானாயின், அவர் அவனைப் புறத்தே தள்ளுகின்றனர். ஆனால் அவருடைய நாமத்தைக் கல்விலோ மற்றச் சாதனத்திலோ பதிப்பதற்கிடையுள்ள எவ்வித ஈகையும் அவர் செய்யத் தயாராயிருக்கிறனர். இதனால் அவருத்தேசம் என்னவென்று விளங்குகின்றது? யாவரும் தன்னைப் புகழ வேண்டுமென்பதன்றோ? அத்தகையார் இரகசியமாய்ச் செய்யும் ஹீனமனத்தின் காரியத்தைப் பிறர் அறியாது ஒரு சமயம் அவரைப் புகழ்வாராயினும், அவர் பகிரங்கமாய்ச் செய்யும் கொடையினால் மற்றவர்களுக்கு ஒருவிதப் பிரயோஜனமிருப்பினும் அவைகளால் அவருக்குப் பயன் யாது? சிறிதுமில்லை யென்பதே உண்மை.

ஈதல் தர்மமென்றும் அதனாலொருவன் நற்கதியடைவானென்றும் மேலோர் ஆராய்ந்துரைத்ததின் காரணந்தான் யாது? ஈதலினால் மனமானது விரிந்து சுயநயம் பாராட்டுந்தன்மை இழக்கப்படுமென்றன்றோ? சுயநயம் எம்மட்டிருக்கின்றதோ அம்மட்டும் ‘நான்’ ‘எனது’ என்னும் பேய்விட்டொழிதலின்று. அதுவிட்டொழியினன்றி பந்தம் நீங்குதலின்று. அது நீங்கினன்றிச் சுகமேது? புகழ் பற்றிச் செய்வதும் ஒருவித லாபத்தைக் கருதியாதலின், அதை ஈகையென்றெவ்விதம் சொல்வது? ஈதலினால் புகழுண்டாமென்பதில் ஐயமில்லை. ஆனால் எவனொருவன் புகழை நாடி மாத்திரமும் அகத்திலன்பின்றியும் ஈதலைக் கைப்பற்றியிருக்கின்றானோ அவனைப் பெரியோர் புகழவே புகழார். அவனுக்கும் வட்டியை அபேக்ஷித்துத் தன் பணத்தைப் பாங்கியில் இடுபவனுக்கும் பேதம் என்னை? இவன் பொருள்வரவை நோக்கிப் பணத்தைப் பிறருக்குக் கொடுக்கின்றான், அவன் புகழ் வரவை நோக்கிப் பிறருக்

களிக்கின்றான். இருவரும் ஒத்தே யிருக்கின்றனர். ஆதலினிவ்விருவருக்கும் கொடையின் பயன் வாய்ப்பதில்லை. அங்ஙனமேல் கொடையின் லக்ஷணந்தான் யாதெனின்,

**வறியார்க் கொன்றீவதே யீகைமற் றெல்லாம்**
**குறியெதிர்ப்பை நீரதுடைத்து**

(இதன் பொருள்:— பிறர்க்குக் கொடுத்தலாவது ஒரு பொருளுமில்லாதார்க்கு அவர் வேண்டியதொன்றைக் கொடுப்பதே. அஃதொழிந்த எல்லாக் கொடையும் குறியெதிர்ப்பைக் கொடுக்கும் நீர்மையையுடைத்து. குறியெதிர்ப்பையாவது அளவு குறித்து வாங்கி அவ்வாங்கியவாறே எதிர்கொடுப்பது.) என்று மேலோர் கூறியிருக்கின்றனர். இவ்வாக்கியத்தில் 'வறியார்க்கு ஈவது' என்பது அன்பின்காரணமாக உண்டாகும் கொடையே கொடையெனவும் பாத்திரா பாத்திரம் இன்னதெனவும் குறிப்பிக்கின்றது. இந்நீதியை உள்ளபடி யுணர்ந்து ஒருவன் ஈகையைக் கடைப் பிடிப்பானாயின் அவனுக்கு அந்த க்ஷணமுதல் இன்பம் ஜனிக்கின்றது. பெற்றோர் தம் குழந்தைகளுக்கொன்று ஈவதில் எத்தனை சந்தோஷமடைகிறார்கள். அஃது அன்புகாரணமாகச் செய்வதினாலன்றோ? அதுபோலவே அன்பினால் தூண்டப்பட்டு, ஒருவன் தன்னையடையும் வறியார்களைக் குழந்தைகளாகப் பாவித்து ஈவானாயின், அவனுக்குக் கொடுக்குந்தோறும் மிக்க குதூகலமும் ஆனந்தமும் உண்டாமென்பதில் சந்தேகமென்ன?

**அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா**
**ரென்பு முரியர் பிறர்க்கு**

என்று கூறியிருத்தலினாலும் அன்புவாயிலாகப் பிறக்கும் கொடையில் துன்பம் சிறிதுமின்றி ஆனந்தமே பலிக்கிறதென்பது பெறப்பட்டது.

இம்மையிலேயே இத்தனை பலனைக் கொடுக்கும் ஈகையானது, மறுமையில் எத்தனை கொடுக்குமென்பதை விளம்பவும் வேண்டுமா? ஐயோ! இவ்வுண்மையை அறியாமல் மாந்தர் யாசகரை இகழ்கின்றனரே.

**இரவலர் தம்மை யெள்ளுமேழை காளியம்பக்கேளீர்**
**நரகமோக்கத்தை விற்க நண்ணிய வணிகரன்னார்**
**பரகதி அவரைத் தாங்கும் பண்பினர்க் கீவரள்ளல்**
**கரவுளார்க்கீவ ரென்னின் அவர்தகை கழறலென்னே**

என ஆன்றோர் கூறியிருத்தலின், வறியோராய் வந்து கையேந்துவாரை அலக்ஷியஞ் செய்யாமலும் தாமே அவரைக் காப்பாற்றுபவராக நினைத்து அகங்காரமென்னும் யானைவாய்ப்படாமல், தம்மிடத்தில் கொடுக்க இருத்தலின் அதனை உதவுவது தம்முடைய கடமையென ஓர்ந்தும்,

**இம்மியரிசித் துணையானும் வைகலும்**
**நும்மிலியைவ கொடுத்துண்மின்.**

ஏனெனில்,

**......உம்மைக்**
**கொடாதவரென்பர் குண்டு நீர்வையத்**
**தடாஅ வடுப்பினவர்.**

(இதன்பொருள் :—ஆழமான கடல்சூழ்ந்த பூமியில் சமைக்காத அடுப்பையுடையவர்—சோற்றுப் பிச்சைக்கு வருகின்றவர்—முற்பிறப்பில் யாசகருக்குக் கொடுக்காத லோபிகளென்று பெரியோர் சொல்லுவர்.)

இதுவரை கூறிவந்த ஈகையின் தன்மையை நன்கு விளக்கும் சிறிய கதையொன்று வரைகின்றேன். அஃதாவது :—

இப்பரத கண்டத்தின் திலகமாய் விளங்கும் தென்னாட்டில் கொடையில் பேர்பெற்ற தலைவள்ளல்களில்

ஒருவனான 'குமுணன்' என்னும் பேர் வழங்கிய அரசனொருவன் இருந்தான். அவ்வரசனுக்கு 'அமணன்' என்னும் ஓர் சகோதரன் இருந்தான். அவன் தன் தமையனைப் போலவே ஈகைத் தன்மையில் கீர்த்தி பெறும் பொருட்டு யாசிப்பவர்களுக்கெல்லாம் வேண்டிய மட்டும் கொடுத்து வந்தும் தன்னுடைய புகழ் உலகப்பிரசித்தியாகாமையை நோக்கித் தன் தமையனிடம் சென்று, ஒருபாயத்தால் அவனை வனம்புகுவித்து, தான் அரசாக்ஷிசெய்துவந்தான். தான் முன்போலவே கொடுப்பதுடன் அரசனாகியும் தமையனைப்போல் தனக்குப் புகழுண்டாகாமையால் அவன் மரித்தாலன்றித் தனக்குப் புகழ் கிட்டாதென நினைத்து அவன் சிரசைக் கொண்டுவருபவர்க்குக் கோடி பொன் கொடுப்பதாக விளம்பரஞ்செய்தான். இவ்விஷயம் வனத்தில் வசிக்கும் தமையன் செவிக்கும் எட்டிற்று.

இங்ஙனமிருக்கையில் மிடி (வறுமை) யென்னும் அக்கினியினால் தகிக்கப்பட்ட வித்வானொருவன் அதன் வெப்பத்தைச் சாந்திசெய்யத்தக்கவன் குமுணனேயெனக் கேள்வியுற்று வனத்திற்சென்று அவனைக்காண, குமுணராஜன் "நீ யாவன்? எங்கு வந்தாய்?" என வினவ வித்வானும்,

**ஆடெரி படர்ந்த கோடுயரடுப்பில்**
**ஆம்பி பூப்பத்தேம் பசியுழல**
**இல்லிதூர்ந்தன பொல்லாவறுமுலை**
**சுவைதொறும் சுவைதொறும் பால்காணாமல்**
**குழவிதாய் முகம்நோக்க மனைவி**
**என்முகம் நோக்க யானும்**
**நின்முகம் நோக்கி வந்தனன் குமுணா...**

என்றனன். அதுகேட்டு அரசன் வித்வானுடைய திறமைக்கு வியந்தும் அவன் வறுமையை நோக்கிப் பரிதபித்தும்,

**அந்தநாள் வந்திலை யருங்கவிப் புலவோய்**
**இந்தநாள்வந்து நீ நொந்தனையடைந்தாய்**
**தலைதனைக்கொடுபோய்த் தம்பிகைக் கொடுத்ததன்**
**விலைதனைமீட்டுன் வெறுமைநோய் களையே**

என்று சொல்ல, வித்வான் கேட்டு நடுநடுங்கி, அரசனது வள்ளற் றன்மையை மிகவும் வியந்து அமணனுடைய கடின சித்தத்திற்காக அவனை இகழுங்கால் குமுணராஜன் அவனை நோக்கி,

**வெம்புங்காலை வெதும்பி விழுஞ்சிரம்**
**செம்பொன் கோடி விலையெனச் சிந்தித்தான்**
**உம்பர் நாட்டு முலகினும் தேடினும்**
**எம்பிபோ லெமக்கி யாவருரியரே**

(இதன்பொருள் :—எனது சிரம் பிராரத்தம் நீங்குங் காலத்தில் தானே விழுவதொன்று. அதற்குக்கோடி பொன் விலைகொடுப்பதாய் எனது தம்பி பறையறைவித்தான். ஆதலின் பூலோகத்திலும் தேவலோகத்திலும் தேடிப் பார்க்கினும் எனது தம்பியைப்போலெனக்குரியவர் ஒருவரு மில்லை) எனச் சொல்லினான். இவையெல்லாம் செவியுற்ற வித்வான் தனக்கு நேரிட்டிருந்த வறுமையின் கொடுமையை மறந்தவனாய் குமுணராஜனை மிகவும் புகழ்ந்து "சுவாமின்! அடியேனுடைய வறுமையெல்லாம் நீங்கிற்று. அடியேனுக்கு வேண்டுவதொன்றுமில்லை. நான் போய்வருகிறேன்" என்று விடைபெற்றுக்கொண்டு அமணனிடத்திற்சென்று குமுணராஜனுடைய தலைபோன்று ஒருதலைசெய்து சந்தி நேரத்தில் அவனிடத்தில் காண்பித்து, விளம்பரப்பிரகார முள்ள கோடி பொன்னையும் கேட்டான்.

அத்தலையைக் கண்டமாத்திரத்தில் அமணன் சிம்மா சனத்திலிருந்தபடியே மூர்ச்சித்துக் கீழேவிழ, மந்திரி முதலானவர்கள் ஒருவாறு அவனை மூர்ச்சையினின்றும்

எழுப்பினார்கள். எழுந்த அரசன் சகோதரவாஞ்சையாலுண்டான சோகத்தால் ஜீவித்தல் அரிதென உணர்ந்த வித்வான், நடந்த வரலாற்றையெல்லாம் அமணனுக்குணர்த்த, அரசன் சோகம் நீங்கி ஆனந்த பலிதனாய் "ஆ ஆ!! அத்தனை பெருமை பொருந்தியவனன்றோ இச்சிம்மாசனத்திலிருக்கத்தக்கவன். அவனே புகழுக்குடையான்" என்று சொல்லி மந்திரி பிரதானிகளுடன் வித்வான் வழிகாட்ட, தமையனிருந்தவனம் சென்று அவருடைய பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து, தனது அறியாமையாற் செய்த பிழையை மன்னிக்கவும் பூர்வம்போல இராச்சியத்தை ஒப்புக்கொண்டு அரசுசெலுத்தவும் வேண்டுமென்று பிரார்த்திக்க, குமுணனும் அதற்கிணங்கி அரசாக்ஷியைச் சுவீகரித்துக் குன்றாப் புகழோடு பின்னும் வெகுகாலம் இராச்சியபரிபாலனம் பண்ணி முடிவில் மேலான பதவியை அடைந்தான் என்பதே. ★★

—விவேகபாநு, டிசம்பர், 1900;
தொகுதி-1, புத்தகம் 4.

# கடவுள் ஒருவரே

## 4

கடவுள் சர்வஞ்ஞரென்றும், சர்வவியாபகரென்றும், விகாரமற்றவ ரென்றும், நித்தியரென்றும், ஏகரென்றும் சர்வமத நூல்களும் ஒரே தன்மையாகச் சொல்லுகின்றன. ஒரு கிறிஸ்தவனை அல்லது ஒரு மகமதியனை, ஒரு பார்ஸியனை அல்லது ஒரு ஹிந்துவை அல்லது வேறெந்த மதத்தையாவது அனுசரிக்குமொருவனைப்பார்த்து அவனுடைய கடவுள் எத்தன்மையரெனக் கேட்போமாயின் ஒவ்வொருவனும், மேற்சொல்லிய குணங்களையுடையவரென்றே தன்தன் மத நூல்களின் வாக்கியங்களை எடுத்துக் காட்டுவன். ஏசுவினுடைய விக்கிரகத்தின்முன் தூபதீபங்களையேற்றி அவரை வணங்கும் கத்தோலிக் சுவாமியாரும் கடவுள் இந்தத்தன்மைகளையுடையவரென்றே சொல்லுவர். விக்கிரகத்திற் கடவுளில்லையெனச் சொல்லும் பிராட்டஸ்டண்டு பாதிரியாரும் கடவுள் இந்தக் குணங்களையுடையவ ரென்றே சொல்லுவர். இவ்வாறு சகல மதஸ்தரின் கடவுளும் ஒரேதன்மைகளையுடையவராய் அதாவது ஒருவராகவே இருக்க, அவரெல்லோரும் அறியாமையினாலும், மூட பக்தியினாலும், பிடிவாதத்தினாலும், மதோன்மத்தத்தினாலும் தமது கண்கள் மறைக்கப்பட்டிருத்தலின், ஒருவருக்கொருவர் 'எமது கடவுள்' 'நுமது கடவுள்' எனச் சண்டையிட்டலறுகின்றனர். ஒவ்வொரு மதஸ்தரும் ஒரே கடவுளைத்தான் வணங்குகிறாரென அவர் அறிகின்றிலர்,

தமது மதத்திற்குரிய கடவுளே உண்மையானவரென்றும், புற மதஸ்தருடைய கடவுள் உண்மையல்லாதவரென்றும் அவர் நினைக்கின்றனர். அவ்வெண்ணந்தான் இவ்வளவு விபரீதங்களையும் விளைவிக்கின்றது. கொஞ்சநாளைக்கு முன் கடவுளைப்பற்றிப் பிரசங்கஞ் செய்து கொண்டிருந்த அறிவிலியொருவன் "அந்நிய மதஸ்தரின் கடவுளைப்பற்றி ஜாக்கிரதையாயிருங்கள்" என்று சொன்னான். இவனுடைய அபிப்பிராயம் கடவுள் இருவரென்பதுபோலும். அறியாமையே மூடபக்திக்கும், பிடிவாதத்திற்கும், மதோன்மத்தத்திற்கும் காரணமாயிருக்கின்றது. கடவுள் யாவர்க்கும் பொதுவான பொருளென்பதை ஜனங்கள் அறிகிறார்களில்லை. அநேகர் தாங்கள் சொல்லுகிற வார்த்தைகளின் அர்த்தத்தையுணராமல் "கடவுள் ஒருவரே. அவர் சர்வவியாபகர்" என்று சொல்லுகிறார்கள். ஆனால் அவருடைய கருத்தில் கடவுள் இவ்வுலகத்திற்கப்புறம் எவ்விடத்திலோ மனிதனைப்போல் உட்கார்ந்து கொண்டிருப்பதாகவே தோன்றுகின்றது. 'சர்வவியாபகர்' என்பதின் அர்த்தத்தை அவரிடம் நாம் கேட்கும்பொழுது நியாயப் பொருத்தமில்லாத அநேக வீண்வார்த்தைகளையே சொல்லுகின்றனர். அவர்கள் கடவுளை எவ்வளவுதூரம் மட்டுப்படுத்தக்கூடுமோ அவ்வளவு தூரம் மட்டுப்படுத்தி, அதை ஸ்தாபிப்பதற்காக எத்தனையோ ஆபாச நியாயங்களையும் கூறுகின்றார்கள். கடவுளைச் சுகுணரென்று நம்புகின்றவரும் அவரது உண்மையான இலக்ஷணங்களைச் சொல்லுவர்; ஆனால் அவர் சொல்லுகிற இலக்ஷணங்களின் அர்த்தத்தை யோசியாமல் கடவுளுக்கு மனித உருவத்தைக் கொடுத்து அவருடைய வியாபகத்தைக் குறைக்கப்பார்க்கின்றனர்.

கடவுள் அளவுபட்டவராயிருந்தால் தேச, கால; நிமித்தங்கட்குட் பட்டவராயிருத்தல் ஆவசியம். அங்ஙன

மாயின் அவர் விகாரியாயும், ஆதியந்தமுடையவராயுமிருக்க வேண்டும். அத்தகைய பொருளொன்றைக் கடவுளென வணங்க நாம் துணிவோமா? துணியோம். நாம் கடவுளுக்கு எவ்வுருவத்தையும் கொடுக்கவே கூடாது. ஏனெனில் உருவம் யாவும் இடத்திலடங்கினவை. இடமில்லாமல் எவ்வுருவமுமிருத்தலின்று. மேலும் உருவம் யாவும் ஆதியந்தங்களையுடையன. ஆதலின் எவ்விதரூபத்தையேனு முடைய ஒரு கடவுள் நித்தியராயிருத்தல் கூடாது. ஆகவே அவர் அளவுகடந்தவராயிருக்கின்றார். அதாவது தேசகால நிமித்தங்கட்கும், நாம் நினைக்கக்கூடிய எவ்வித அளவிற் கும் உட்படாது அவை யாவற்றையும் கடந்துளா ரென்பதே. இங்ஙனம் அளவுகடந்த பொருள் ஒன்றாகவே யிருக்கவேண்டும். ஏனெனில், வேறு பொருளுமுளதாயின் அப்பொருளால் மற்றையது அளவுபட்டதேயாகும். ஆயின் அதனை அளவுகடந்ததென்பது தவறு. இதினின்றும் இரகிக்கத்தக்கது யாதெனின் அளவுபட்டதாய்த் தோன்றும் சகல பொருள்களும் உண்மையில் அளவு கடந்த பொருளே யாதல் வேண்டுமென்பதே. ஆதலின், இப்பிரபஞ்சத்திலோ ரணுவேனும், அளவு கடந்தவராயும் ஏகராயுமிருக்கப் பட்ட கடவுளுக்கு வேறாகயில்லை. நம்முடைய சரீரத்தில் ஒவ்வொரணுவும் இப்பிரபஞ்சத்தில் ஒவ்வோரணுவும் கடவுளுடைய அம்சமாகவேயிருக்கின்றன. கடவுள் சர்வ வியாபகராயிருத்தலின், ஜடப் பொருள், மனது, சக்தி இவைகளும் நன்மை தின்மை, புண்ணியபாவம், சீதோஷ்ண முதலிய துவந்துவங்கள்யாவும் அவருக்கு அந்நியமாகவில்லா மல் கடவுளிடத்திலேயே, கடவுளாகவேயிருக்கின்றன. அவருடைய சர்வ இலக்ஷணங்களையும் சேர்த்துப் பார்ப்போமாகில் அவர் சுயம்பிரகாசமான அளவுகடந்த அறிவு சமுத்திரமாயிருக்கிறார். எண்ணிறந்த தோற்றங்

களும் அச்சமுத்திரத்தில் எழும் நுரை, குமிழி, அலைகளே யாகும். அலைகளின் நாமரூபங்களைக் கவனித்தால் அவைகள் வெவ்வேறாகவும் பலவாகவுமிருக்கின்றன. ஆனால் அவைகள் யதார்த்தத்தில் ஜலமாகவும் ஒரே பொருளாகவுமிருக்கின்றன. அது போன்று பிரபஞ்சத்திலுள்ள பொருள்களின் நாம ரூபங்களை நோக்கும்போது அவைகள் வெவ்வேறாயும் பலவாயுமிருக்கின்றன; ஆனால் அவைகள் யதார்த்தத்தில் ஒன்றாகவும் அதுவும் கடவுளாகவுமிருக்கின்றன.

கடவுள் இவ்வுலகத்தைச் சிருஷ்டித்தார் என்று சிலர் சொல்லுகிறார்கள். கடவுள் ஏகரென்றும் சர்வவியாபகரென்றும் நாம் ஒப்புக்கொள்ளின், அவர் உலகத்தைச் சிருஷ்டித்தாரென்பது தகாது. கடவுளன்றிப் பிறிதொன்றுமில்லாதிருக்கும்போது அவர் எதைச் சிருஷ்டிப்பது? ஆதலின், உள்ளதெல்லாம் கடவுளேயென்றுணரத்தக்கது. இத்தகைய கடவுளை யாவனொருவன் அனுபவமாயறிகிறானோ அவன் தன்னை யிழந்து கடவுளாகவே தனிக்கிறான். ஏகத்துவத்தை அல்லது தனது கடவுட்தன்மையை அறியவேண்டுமென்பதே சகலமதங்களுடையவும் எதார்த்த நோக்கம். நமதுயிர்க்குயிரானபொருள் அதாவது நாமே யதார்த்தத்தில் கடவுளாயிருப்பினும் அதை உணர்கின்றோமில்லை. நம்முடைய கண்களை நாமே பொத்திக் கொண்டு வெளிச்சத்தைப்பார்க்க விரும்பி "கடவுளே உதவி செய்யும், கடவுளே இரட்சியும்" என்று சொல்வோமானால் நாம் எத்தகைய அவிவேகிகளாயிருத்தல் வேண்டும்! நம்முடைய கையையெடுத்துவிட்டால் போதுமானது. சுயம் பிரகாசம் ஒருபொழுதும் மங்குகிறதில்லை. எப்பொழுதும் பிரகாசித்துக் கொண்டுதானிருக்கின்றது.

ஒருவன் கடவுளை அனுபவித்தறிதலென்றால் அவனது கடவுட்தன்மையை அவனறிதலேயாம். ஏசுவான

வர் தம்முடைய தெய்வத்தன்மையை யுணர்ந்த பொழுது ''நானும் என் தந்தையும் ஒன்றே'' என்றார். ஹிந்து ஞானிகளும் 'நான் பிரமம்' என்கிறார்கள். இவ்வுன்னத நிலையைச் சிலர் ஞானத்தினாலும், சிலர் பக்தியினாலும், சிலர் உபாசனையினாலும் சிலர் யோகத்தினாலும் அடைய முயலுகின்றனர். ஞானமார்க்கமாய்ச் செல்பவர் தம் ஞானத் தீயினால் பல பொருள்கள் உளவென்னும் எண்ணத்தைச் சுட்டெரித்து, பிரபஞ்சப் பொருள்களின் நாமரூபங்களைத் தள்ளி மெய்ப்பொருளைக் கண்டு அத்துடன் பிரிவற்றிருக் கின்றனர். இம் மார்க்கத்தில் செல்பவர் சிலரேயாம். பக்தி உபாசனையென்னு மார்க்கங்களில் செல்லும் அனேகர் ரூப முள்ள கடவுளை விரும்புகிறார்கள். மனிதர்களில் அனேகருக்கு உருவமுடைய கடவுள்தான் நல்லதென்று ஹிந்து மதவேதத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றது.

புத்தர் (கௌவுத்தமர்) ரூபமுடைய கடவுளை மறுத்துக்கொண்டிருந்தார். ஆனால் அவரிறந்து ஐம்பது வருஷங்களுக்குள்ளாக அவரையே ரூபமுடைய கடவுளாக வைத்துக்கொண்டார்கள். எவ்வுருவத்திலேனும் கடவு ளென்னும் பாவனையால் பக்தி ஸ்திரப்படுதல் நலமே. ஏசு வானவர் ''நான்தான் கடவுளுக்கு வழி'' என்று சொல்லியிருப் பதுபோல ஒவ்வொரு பெரியவரும் ''ஏகமாயிருக்கப்பட்ட சத்திய நித்திய கடவுளிடம் சேர்ப்பிவிக்கிறவன் நான்'' என்று சொல்லியிருக்கின்றனர். ஏசுவினிடத்தில் நம்பிக்கை யுள்ளவர் அவருடைய உபதேசப்படிக்கே நடக்கட்டும். புத்த ரிடம் நம்பிக்கையுள்ளவர் அவருடைய உபதேசப்படியே நடக்கட்டும். ஒருவருடைய கொள்கை யதார்த்தம், மற் றொருவருடைய கொள்கை பொய்யென்பது மாத்திரம் சரி யன்று. கடவுள் ஒருவராயிருக்கும் பொழுது உயர்ந்த கடவுள் தாழ்ந்த கடவுளென்பதுண்டா? அவ்விதம் நினைப்போமா

யின் அது நமது அறியாமையே. ஆதலின், சர்வவியாபகரா யிருக்கும் கடவுளின் சொரூபத்தை உள்ளவாறுணர்ந்து அவரையன்றி மற்றொரு பொருளைக் காணாதவராய் இச்சரீரத்திலிருக்கும் பொழுதே அவரது பேரானந்தத்தை யடைந்துய்யுமாறு முயல்வோமாக. ★★

*விவேகபாநு, பிப்ரவரி, 1901;*
*தொகுதி—1, புத்தகம் 6*

# சுதேசாபிமானம்

5

"சுதேசாபிமானம்" என்னும் தொடர்மொழியானது சொந்தத் தேசத்தின் மீது அன்புடைமை எனப் பொருள் படும். தேசம் என்பது பொதுவகையால் தேசத்திலுள்ள பொருள்களை யெல்லா முணர்த்துமேனும் சிறப்புவகையால் அங்குள்ள மக்களையுணர்த்தும்.

## சுதேசம்

ஒருவர் பிறந்த தேசமே அவருக்குச் சுதேசமெனக் கூறலாமெனின் அது பொருந்தாது. என்னை? இங்கிலாந்து சென்றிருக்கும் இந்தியர் ஒருவருக்கு இங்கிலாந்தில் ஒரு புத்திரன் பிறப்பானாயின் அப்புத்திரனுடைய சுதேசம் இங்கிலாந்து எனக் கூறாராகலின். ஒருவருடைய பெற்றோர் பிறந்த தேசமே அவருக்குச் சுதேசமாம் எனக் கூறலாமெனின் அதுவும் பொருந்தாது. என்னை? இங்கிலாந்துவாசியாகிய ஒரு இந்தியருடைய இங்கிலாந்திற் பிறந்த புத்திரன் இங்கிலாந்து வாசியாகிய மற்றொரு இந்தியருடைய இங்கிலாந்திற் பிறந்த புத்திரியை விவாகம் செய்து இங்கிலாந்தில் ஒரு புத்திரனைப் பெறுவாராயின் அப்புத்திரனுடைய சுதேசம் இங்கிலாந்து எனக் கூறாராக லின். இந்தியரிற் பெரும்பாலார் கறுப்பு நிறமுள்ளவராயும் ஆங்கிலேயரிற் பெரும்பாலார் வெளுப்பு நிறமுள்ளவராயு

யிருப்பது பற்றி வெளுப்பு நிறத்தோர்க்கெல்லாம் சுதேசம் இங்கிலாந்து எனவும் கறுப்பு நிறத்தோர்க்கெல்லாம் சுதேசம் இந்தியா எனவும் கூறலாமெனின் அதுவும் பொருந்தாது. என்னை? இந்தியர் ஒருவர் குடும்ப சகிதம் இங்கிலாந்திற் பல வருஷங்கள் வசிப்பராயின் அவருக்குப் பிறக்கும் புத்திரர் பெரும்பாலும் வெளுப்பு நிறமுள்ளவரா யிருப்பர். அப்புத்திரர் மற்றொரு இந்தியருடைய இங்கிலாந் திற் பிறந்த புத்திரியை விவாகஞ் செய்து அங்கேயே வாழ்வ ராயின் அவருக்குப் பிறக்கும் புத்திரர் ஆங்கிலேயரை யொத்து மிகுந்ததோர் வெளுப்பு நிறமுள்ளவராகவே யிருப்பார். ஒரு தேசத்தார் வெளுப்பு நிறத்தராயும் மற்றொரு தேசத்தார் கறுப்பு நிறத்தராயுமிருப்பது முக்கியமாக அவ்வத்தேசங்களின் சீதோஷ்ண நிலை மையைப் பொறுத்ததேயாம். ஒருவருடைய நடை உடை பாவனைகளைப் பற்றி அவருடைய சுதேசம் இன்னதெனக் கொள்ளலாமோ வெனின் இந்தியர் ஒருவர் ஆங்கிலே யருடைய நடை, உடை, பாவனைகளையும் ஆங்கிலேயர் ஒருவர் இந்தியருடைய நடை, உடை, பாவனைகளையும் கைக்கொள்ளக் கூடுமாதலின் அதுவும் பொருந்ாதெதன்க.

பின்னர் ஒருவருக்குச் சுதேசம் இன்னதெனக் கொள்ளுமாறுதான் யாங்ஙனமெனின் ஒருவருடைய உற்பத்திக்கு அவருக்குத் தெரிந்த வரையிலும் முற்காரணராயிருந்த முப்பாட்டன், முப்பாட்டி முதலிய முன்னோர் பிறந்த தேசமெதுவோ அதுவே அவருக்குச் சுதேசமெனக்கொள்ளற்பாலதாம். ஒருவருடைய உற்பத்திக்குக் காரணராயிருந்த ஸ்திரீ புருஷர்களில் ஸ்திரீ யின் தேசம் எதுவோ அதுவே அவருக்குச் சுதேசம் எனச் சிலரும் புருஷர் தேசம் எதுவோ அதுவே அவருக்குச் சுதேசம் எனச் சிலரும் கூறா நிற்பர். அவ்விருவர் கொள்கை யும் பொருத்தமுடைத்தேயாம்.

## அபிமானம்

அபிமானம் அன்பு என்பன ஓரே பொருளைக் குறிக்கும் வடமொழி தென்மொழிச் சொற்கள். இனி அன்பு என்பது யாதோவெனின் அது குடத்தினுள் விளக்குப் போலும் உறையினுள் வாள்போலும் மனத்தின்கண் நிகழும் ஒரு வித நிகழ்ச்சி. 'நிகழ்ச்சி'யென்பது குறைதல் இளகுதல் எனப்பொருள்படும். அன்பின் உண்மையை அனுபவமாக அறியலாம் அல்லது வெளிப்படுங்காலறியலாம். அதனை யனுபவமாயறிதலாவது நாம் நீடித்த நாளாகப் பிரிந்திருக்கும் நம் உற்றார் ஒருவரைப் பார்க்கவேண்டுமென்று நம்மனத்திலுதிக்கும் பிரியம் நாம் அவர் மீது கொண்ட அன்பின் வழித்தென்றுணர்தலாம். அதனை வெளிப்படுங் காலறிதலாவது ''ஆர்வலர்புன்கணீர் பூசல்தரும்'' என்றபடி நமக்குரியார் ஒருவருக்குத் துன்பம் நேரிடுங்கால் நம்மால் தோன்றும் கண்ணீர் முதலிய குறிகளால் அறிதலாம். சுருக்கிச் சொல்லின் அன்பு என்பது தொடர்புடையார் மாட்டுத் துன்பம் கண்டவழி துக்கிக்கவும் சுகம் கண்டவழி சுகிக்கவுங் காரணமாக நிற்குமோர் அகநிகழ்ச்சியேயாம்.

## இயற்கைக் குணம்

சுதேசாபிமானமில்லாத மாந்தர் உலகினில் ஒருவருமே யிலர். ஒருவருக்குச் சுதேசாபிமானம் உண்டென்றும் மற்றொருவருக்குச் சுதேசாபிமான மில்லையென்றுங் கூறுதல் அவ்விருவரும் முறையே சுதேசத்தின்மீது கொண்டிருக்கும் அன்பின் மிகுதியையும் குறைவையும் குறித்தேயன்றி வேறன்று. பெற்ற பிள்ளையிடத்து அன்பிலார் உளரெனக் கூறினுங் கூறலாம். பெற்ற அன்னைபால் அன்பிலார் உளரெனக் கூறினுங் கூறலாம். சுதேசத்தின் மீது அன்பிலார் உளரெனக் கூறொணாது. என்னை? ஒருவருடைய சுதேசம் என்பது அவருடையவும் அவருடைய முன்னோ

ருடையவும் பிறப்புக்கும் வளர்ப்புக்கும் மற்றவற்றுக்கும் ஆதாரமாயிருப்பதாதலின் ஒருவர்க்கு நீடித்தநாள் பால் கொடுத்துவந்த ஒரு பசுவின்மீதும் வசிக்குமிடமாயிருந்த ஒரு கட்டிடத்தின் மீதும் அன்பிருப்பது பிரத்தியட்சானுபவம். அங்ஙனமிருந்தும் சுதேசாபிமானம் சிற்சிலரிடம் வெளிப்படக் காணவில்லையேயெனின் அவருக்கு மிக நெருங்கியுள்ள சில பொருள்களின்மீதுள்ள அபிமானத்தால் அது உள்ளடங்கிக் கிடக்கின்றது. இதனை ஒரு உதாரணமுகத்தால் விளக்குகின்றேன்.

மதுரை வாசி ஒருவர் இங்கிலாந்து தேசத்துக்குச் சென்று அங்குப் பலநாள் வசித்திருந்து பின்னர் இந்தியாவுக்கு வருகின்றார். அவர் வருங் கப்பல் இந்தியாவை அணுகுவதற்கு இரண்டு நாள் ஒரு நாளைக்குமுன்னம் அவர் இந்தியாவை நாளைக்கழித்துப்பார்ப்போம் நாளைப் பார்ப்போம் என ஒவ்வொரு நிமிஷமும் அதி ஆவலுடனிருப்பர். இந்தியாக்கரையைத் தூரத்திற்காணவே மிகுதியுஞ் சந்தோஷம் அடைவர். பின்னர் அவர் பம்பாய்த் துறைமுகத்திலிறங்கி ரயிலிற் பிரயாணமாகி வருங்கால் இந்தியாவைப் பார்க்கவேண்டுமென்றிருந்த ஆவல் நீங்கி சென்னை ராஜதானி எல்லையைப் பார்க்கவேண்டுமென்ற ஆவலைக்கொண்டு ஒவ்வொரு நிமிஷமும் அதன் எல்லை அணுகுவதை எதிர்பார்த்திருப்பர். சென்னை ராஜதானியை அடைந்த பின்னர் சென்னை ராஜதானியைப் பார்க்கவேண்டுமென்றிருந்த ஆவல் நீங்கி மதுரை ஜில்லா எல்லை அணுகுவதை ஆவலுடன் பார்த்திருப்பர். மதுரை ஜில்லா எல்லையை அடைந்த பின்னர் அந்த ஆவல் நீங்கி மதுரை நகர் அணுகுவதை ஆவலுடன் எதிர்பார்த்திருப்பர். இவ்வித அனுபவம் நம்மில் ஒவ்வொருவருக்கும் பிரத்தியட்சம். இதனால் மானிடராகப்பிறந்த ஒவ்வொருவருக்கும் சுதேசாபிமானம் இயற்கையிலேயே உண்டெனவும் ஆனால்

அவ்வபிமானம் அவரவர்க்கு நெருங்கிய மற்றொரு பொருளின்மீதுள்ள அபிமானத்தால் வெளிப்பட்டு விளங்குவதில்லை யெனவும் தெரிகின்றது.

## வெளிப்படுத்தும் சமயம்

சுதேசாபிமானம் ஒவ்வொருவருடைய மனத்திலும் உண்டென்பது உண்மையாயினும் சமயம் வாய்ந்துழி அதனை வெளிப்படுத்தி அதற்குரிய செயல்களைச் செய்யவேண்டும். அன்றேல் சுதேசாபிமானத்தால் யாரொருவருக்கும் யாதாமொரு பயனுமிலதாம். சுதேசாபிமானத்தை உபயோகப் படுத்தவேண்டுவது சுதேசத்தாருக்கு அன்னமின்மை, ஆடையின்மை, நோய் முதலிய இடுக்கண்கள் நேர்ந்தபோதும் தெய்வசிந்தனை, கல்வியறிவு, செல்வச் சிறப்பு முதலியன குன்றியபோதும், சுதேசத்தாருக்கு சுயார்ச்சிதம் இழக்கவும், அடிமைத்தனம் பெறவும் நேர்ந்தபோதுமேயாம். ஒருவர் பிறப்பதற்கு ஆதாரமாயிருந்தவள் அவருக்குத் தாயென்றால் அவரும் அவருடைய முன்னோரும் பிறப்பதற்கு ஆதாரமாயிருந்த தேசம் அவரைப்பெற்ற தாயினும் மேலென்பதற்குத் தடையென்னை? ஆகவே சுதேசத்தாருக்கு நேர்ந்த வறுமை, துன்பம், அடிமைத்தனம் முதலியவற்றை ஒவ்வொருவரும் அவரவரைப்பெற்ற தாய்க்கே வந்ததாகக் கொள்ளவேண்டும். பெற்ற தாய் உண்ண அன்னமில்லாமலும் உடுக்க வஸ்திரமில்லாமலும் அன்னியருக்கு அடிமைப்பட்டும் வருந்தப்பார்த்து மனஞ் சகித்திருக்கும் புத்திரனும் உலகின்கண் உண்டோ? சுதேசத்தார் சுதேசத் தாயின் பல அவயவங்களேயாவர். அவருடைய சில அவயவங்களுக்கு நேர்ந்த தீங்குகள் நாளடைவில் அவளுடைய மற்ற அவயவங்களாகிய மற்றவரையுந் தொடர்ந்து மற்றவரும் வருந்த நேரிடுமென்பதை நினைந்து வெள்ளம் வருமுன்னர் அணைகட்டிக்கொள்வது அறிவிற்சிறந்த மாந்

தரது கடமையாம். அன்றிச் சுதேசம் பூராவும் வறுமையாய் அல்லது அடிமை வாய்ப்பட நேருமானால் பின்னர் அதனை மீட்கவே வழியிராதாதலின் சமயம் கண்டுழி ஒவ்வொருவரும் அவரவர் சுதேசாபிமானத்தை வெளிப்படுத்தல் வேண்டும்.

## வெளிப்படுத்தும் மார்க்கம்

சுதேசத்தார்க்கு அன்னமின்மை, ஆடையின்மை, சுகமின்மை முதலிய வறுமை நேருங்கால் சுதேசாபிமானமுள்ள ஒவ்வொருவரும் அவரவராலியன்றவரை அன்னம், ஆடை, மருந்து முதலியவற்றை யுதவி அவ்வறுமைகளை நிவிர்த்திப்பதுடன் சுதேசத்தார் அவ்வறுமைகளைப் பின்னரும் அடையாது வாழும்படிக்கான செயல்களைத் தேர்ந்து செய்யவும் வேண்டும். சுதேசத்தில் கடவுள் ஞானம், கல்வியறிவு, பொருளுடைமை முதலிய குறைந்தபோது ஒவ்வொருவரும் அவரவராலியன்றவரை கடவுள் ஞானம், கல்வியறிவு, பொருள் முதலியவற்றைச் சுதேசத்தார்க்கு அளிக்கவேண்டும். பலர்கூடி அன்னசாலை, ஆடைசாலை, வைத்தியசாலை, ஞானசபை, பள்ளிக்கூடம், கைத்தொழிற்சாலை முதலியன ஏற்படுத்திச் சுதேச வறுமைகளைப் பின்னர் வராது நீக்கவும் வேண்டும். ஆனால் சுதேசத்தார் சுயார்ச்சிதம் இழந்து அன்னியர்க்கு அடிமைப்பட நேருமானால் அவ்வடிமைத் தனத்தினின்றும் அவரை நீக்கிச் சுயார்ச்சிதம் பெறுதற்குச் சுதேசத்தாரெல்லாரும் ஒன்றுகூடி ஒற்றுமையுடன் வேலைசெய்யவேண்டும். வறுமையினும் வியாதியினும் சகிக்கொணாக் கொடியது அடிமைத்தனமே. என்னை? ஒருவர் மற்றொருவர்க்கு அடிமையாக விருப்பின் அவர் மற்றவர்க்கு அடிமைத் தொழில் செய்வதையன்றி அவர் தம் சொந்த வறுமையாதிகளை நீக்கிக்கொள்ளுஞ் செயல்களைச் செய்ய வலியில்

லாராகவருந்துவராதலின் சுதேசாபிமானச் செயல்களெல்லா வற்றினும் மேம்பட்டதும் முக்கியமானதும் அவசியமாகச் செய்யவேண்டுவதும் சுதேசத்தார் அடிமைத்தனத்திலிருப் பின் அதனின்றும் அவரைக் கரையேற்றுதலேயாம். அடிமை என்ற பெயர் அவருக்கிருப்பதும் இல்லாததும் பொருட் டல்ல. அடிமைக்கொப்பந்தம் ஒவ்வொருவரும் அவரவர்க்கு நன்மையையுஞ் சுகத்தையுங் கொடுக்குஞ் செயல்களை அவரவர் சுயார்ச்சிதமாகச் செய்துகொள்ள வியலாத நிலையி லிருப்பதே அடிமைத்தனமாம்.

சுதேசத்தார் ஒன்று சேர்வதற்கும் ஒற்றுமையாக விருப்பதற்கும் முக்கிய தடைகள் ஜாதியபிமானம் மதாபி மானங்களே. உலகத்தில் தாழ்ந்த நிலைமையையடைந்த ஒவ்வொரு தேசத்தின் சரித்திரத்தையும் கவனிப்போ மாயின் சுதேசத்தாருக்குள் ஜாதிபேதம் மதபேதம் ஏற்பட்டுச் சுதேச ஒற்றுமையையும் பேதப்படுத்தி சுதேச நிலைமையையும் பேதப்படுத்தினதாகத் தெரியவரும். சுதேசத்தா ரெல்லோர்க்கும் பொதுவாயதோர் நன்மையைப் பயக்கும் செயல்களைச் செய்யவேண்டுங்கால் சுதேசத்தார் ஒவ்வொருவரும் அவரவர்க்குள் நிகழாநிற்கும் சொந்த வேற்றுமைகளைப் பாராட்டல் கூடாது. மேலும் ஜாதி என்பது தொழில் பற்றியே ஏற்படுத்தப்பட்டதென நூல்க ளெல்லாம் கூறுகின்றன. ஒவ்வொரு ஜாதிப் பெயரின் பொருளை உற்று நோக்குவோமாயின் ஜாதிகளெல்லாம் தொழில் பற்றியே உண்டானவை யென்பது நன்கு விளங் கும். இனி ஒவ்வொரு மதமும் ஒவ்வொருகாலத்தில் தோன்றிய ஒவ்வொரு பெரியவருடைய அறிவு விளக்கமே யன்றி வேறன்று. ஒருவர் அறிவுக்கு மற்றொருவர் அறிவு எல்லா விஷயங்களிலும் பொருத்தமுடையதாக விருக்குமா? சில விஷயங்களிற் பொருத்தமின்றித்தானே யிருக்கக்கூடும். அதுபற்றிச் சுதேசத்தாருக்குள் சகோதரவாஞ்சையைக்

குறைப்பது நியாயமாகுமா? சுதேசத்தின் நன்மையைக் கருதும் ஒவ்வொருவரும் அவரவர் ஜாதி மதாபிமானங்களை அவரவர் சொந்த விஷயங்களில் மாத்திரம் கவனித்துக் கொண்டு சுதேசப்பொதுவிஷயங்களிற் பாராட்டாது பலருமொன்று கூடி ஒரேமனத்துடன் சுதேச அடிமைத் தனத்தை நீக்கி சுயார்ச்சிதம்பெற வுழைக்கவேண்டும். சுதேசநன்மைக்காக ஒவ்வொருவரும் சமயம் வாய்ந்துழி அவரவர் உடல்பொருள் ஆவிகளைத் தத்தம்பண்ணவும் தயாராயிருக்கவேண்டும்.

## அடையும் பயன்

சுதேசம் சுகமாக வாழ நாமும் சுகமாக வாழ்வோம். மேலும் அன்னமில்லாமல் இறந்து படும் அல்லது வருந்தும் சுதேசத்தவருக்கு அன்னம் கிடைக்கும்படி செய்து அவர் களை மரணத்தின் அல்லது பசிவாயினின்று நிவிர்த்திப் போமாயின்,

**ஆற்றுவா ராற்றல் பசியாற்ற லப்பசியை**
**மாற்றுவா ராற்றலிற் பின்**

என்ற முதுமொழிப்படி தவத்தினது வலிக்கு மேற்பட்ட வலியை யெல்லாம் பெறுவோம். தவத்தின்வலியோ

**வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ**
**மீண்டு முயலப் படும்**

என்றபடி, தவத்தினர் எதனையெல்லாம் அடைய வேண்டு மென்று நினைப்பரோ அதனையெல்லாம் அந்த நிமிஷமே அடையும்படி செய்யும். பிறர்பசியை மாற்றுதல் அத்தவத் திற்கு மேம்பட்ட வலியைத் தருமென்றால் அதனால் நாம் அடையும் பயன்கள் இன்னவெனக் கூறவும் வேண்டுமா? இன்னும், அன்புடையவர்,

**அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்**
**தின்புற்றா ரெய்துஞ் சிறப்பு**

என்றபடி, அறம் பொருள் இன்பம் மூன்றையும் அடைந்து வீட்டையும் அடைவர் என்னின் சுதேச அன்பையுடையவர் அடையும் பயன்களை யாவர்தாம் எடுத்துக்கூற வல்லராவர்? சுதேசத்தின் வறுமையை நீக்குவதென்னில் நம்முடைய வறுமையையும் பின்னோர் வறுமையையும் நீக்கியவாறேயாம். வறுமையின் கொடுமையோ,

**இன்மையி னின்னாத தியாதெனி னின்மையி**
**னின்மையே யின்னாதது.**

**இன்மை யெனவொரு பாவி மறுமையு**
**மிம்மையு மின்றி வரும்**

**நெருப்பினுட் டுஞ்சலு மாகு நிரப்பினுள்**
**யாதொன்றுங் கண்பா டரிது**

என்று கூறப்பட்டுள்ளபடியால், சுதேசத்தின் வறுமையை நீக்குவதால் எத்தனையோ பேர்களுடைய இம்மை மறுமைத் துன்பங்களை எல்லாம் நீக்கி அவர்களுக்கு இம்மை மறுமைச் சுகங்களைக் கொடுக்கிறவராகின்றோம். சாதாரணமானதொரு பொருளை ஒருவர்க்களிப்பதால் இம்மையிற் புகழும் மறுமையிற் சுவர்க்கவின்பமும் முடிவில் முத்தியின்பமும் கிடைக்குமெனச் ஆன்றோர் பலருங் கூறியுள்ளார். ஆகச்சே இம்மையின்பங்களையும் மறுமையின்பங்களையும் சுதேசத் தாரெல்லோர்க்குங் கொடுப்பவர் இம்மைப்புகழையும் மறுமைச் சுவர்க்கவின்பத்தையும் பெற்று முடிவில் முத்திப்பேற்றையும் பெறுவரென்பது சத்தியமாதலால் மானிடராய்ப்பிறந்த ஒவ்வொருவரும் அவரவர் சுதேசத்திற்கு வறுமையாதிய நேர்ந்தபொழுது அவரவர் தாய்க்கும் அவரவர்க்கும் நேர்ந்ததாகக்கொண்டு

அவற்றை நீக்குதற்குரிய செயல்களை யெல்லாம் ஒன்று கூடி ஒற்றுமையுடன் செய்வாரெனப் பிரார்த்திக்கிறேன்.

★ ★

—விவேகபாநு, பிப்பிரவரி, 1906;

தொகுதி-5, புத்தகம் 2.

வந்தே மாதரம்

# சுதேச ஸ்டீமர் விக்ஞாபனம்

## 6

*சுதேசாபிமான சீலர்களே!*

*நமது சுதேசத் தாயானவள் பூர்வகாலந் தொடங்கி விலையுயர்ந்த நவரத்தினங்களையும், தங்கம் முதலிய லோகங்களையும் சகல விளைபொருள்களையும், கைத்தொழில்களையும், வியாபாரங்களையு முடையவளாய் மற்றத் தேசங்களினும் மேன்மையும் செல்வமும் மிக்க நிறைந்து நீடித்தகாலம் வாழ்ந்திருந்து பின்னர் அந்நிய நாட்டார் பிரவேசித்த காரணத்தால் சகல கைத்தொழில் களையும் வியாபாரங்களையுமிழந்து மிக்க வறுமையுற்றுப் பசியால் வருந்தி இறந்து கஷ்டப்படுவதைக் கண்ணுற்ற சர்வ இரக்ஷகராகிய கடவுளானவர் சென்ற 1905-ம் ஷு ஆகஸ்டுமீ 7உ முதல் நம் சுதேசத்தாயின் மீது கருணை கூர்ந்து "சுதேசக்கிளர்ச்சியை" யுண்டாக்கி நாம் நீடித்த நாளாக இழந்திருந்த ஒற்றுமையையும் ஊக்கத்தையும் கைத்தொழில்களையும் வியாபாரங்களையும் நம்மைக் கைக் கொள்ளும்படி செய்து நன்மை புரிந்து வருகின்றதை நாமெல்லோரும் அறிந்திருக்கின்றோம்.*

*நம் சுதேசம் க்ஷேமத்தையடைந்து முன்னாளின் மேலான நிலைமைக்கு வருவதற்கு சகல தொழில்களிலும் வியாபாரங்களிலும் மிக்க லாபத்தைக் கொடுப்பதான கப்பல்கள் நடாத்தும் தொழிலை நாம் கைக் கொள்வதே*

முக்கிய சாதனமாகும். தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் கப்பல்கள் நடத்துவதற்கு இரண்டு ஸ்டீமர்களும் இரண்டு ஸ்டீம் லாஞ்சுகளும் போதுமானவை: அவைகளை நாம் சொந்தமாக வாங்கி வேலை நடத்துவதற்கு (ஐந்து லக்ஷ) ரூபாய் மூலதனம் போதுமானது: அவ்வைந்து லக்ஷ ரூபாய் மூலதனத்துடன் கப்பல் நடாத்துந் தொழிலில் சகல செலவும் நீக்கி வருஷம் 1-க்கு 10 லக்ஷ ரூபா லாபங் கிடைக்கத்தக்கதா யிருக்கிறது. இவ்வளவு பெரிய லாபத்தைக் கொடுக்கத்தக்க தொழிலாவது வியாபாரமாவது வேறு கிடையாது. இத்தகைய தொழிலைச் சென்ற பல வருஷங்களாக அந்நிய நாட்டார்கள் கைப்பற்றிக் கொண்டு அதிற்கிடைக்கும் லாபத்தில் ஒரு சிறிதேனும் நம்மையடைய விடாமற் செய்து நம் தேசத்தையும் முக்கியமாக நம் தென்னாட்டையும் மிக்க வறுமைக்குள்படுத்தி விட்டார்கள்.

சகோதரர்களே!! இரண்டு ஸ்டீமர்களும் இரண்டு லாஞ்சுகளும் வாங்கி வேலை நடத்துவதற்கு வேண்டுமைந்து லக்ஷ ரூபாய் நம்மிடமில்லையா? நமக்குக்கப்பல்கள் நடாத்துந் திறமையில்லையா? நம்முன்னோர் கப்பல்கள் நடாத்துவதில் மற்ற நாட்டாருக்குப்பின்னடைந்து நின்றவரா? கப்பல்களில் ஏற்றுமதி, இறக்குமதியாகுஞ் சரக்குகள் நம்முடையவையன்றி வேறுண்டா? கப்பல்களில் பிரயாணமாகும் பிரயாணிகளில் ஏகதேசம் ஒன்று இரண்டு தவிர மற்றவர்கள் நம்மையன்றி வேறுளரா? ஒருவிதத்திலும் குறைவில்லாத நாம் தூத்துக்குடிக்கும் கொழும்புக்கு மாத்திரம் அன்று; ஆசியா, ஐரோப்பா முதலிய பல கண்டங்களிலுமுள்ள துறைமுகங்களுக்கெல்லாம் கப்பல்கள் நடாத்தும் செல்வமும் திறமையும் பூண்டுள்ளோம்.

நமது சுதேசத்தை அந்நிய நாட்டார் கைப்பற்றிக் கொண்டதற் கேதுவாயிருந்ததும் நம் சுதேசத்துப் பொருள்

களை யெல்லாம் அந்நிய நாட்டார் கொண்டுபோவதற் கேதுவாயிருந்ததும் நமக்கு மிக்கலாபத்தைத் தரக்கூடிய கைத்தொழிலில் வியாபாரங்களை யெல்லாம் அந்நியநாடு களுக்குக் கொண்டு போவதற்கேதுவாயிருந்ததும் அந்நிய நாட்டார் நம்தேசத்தின் மீது பிரவேசித்து நாம் நீடித்த நாளாகக் கைக்கொண்டிருந்த கப்பல் தொழிலை நம்மிட மிருந்து கைப்பற்றிக்கொண்ட தொன்றே யாதலால் நாம் அதி சீக்கிரமாகவும் அத்தியாவசியமாகவும் கைக் கொள்ளத் தக்கதும் கைக்கொள்ளவேண்டுவதுமான தொழில் கப்பல் கள் நடாத்துவதேயாமென்பது நம்மெல்லோருக்கும் பரிஷ் காரமாகத் தெரிந்ததே.

நமது சுதேசம் மற்றத்தேசங்களைப்பார்க்கிலும் மேலான நிலமைக்கு வருவதற்கு நாம் இவ்வுலகின்கண்ணுள்ள துறைமுகங்களுக்கெல்லாம் நமது சுதேசக்கப்பல்கள் போக்கு வரவாயிருக்கும்படி செய்ய வேண்டிய தவசியமா யிருக்கின்றது. ஆனாலும் நாம் பல வருஷங்களாக இழந்து விட்ட தொழில்களையெல்லாம் ஒவ்வொன்றாக மெள்ள மெள்ளக் கைக்கொள்ளவேண்டுமேயன்றி எல்லாவற்றையும் ஒருங்கே ஒரே காலத்தில் கைக்கொள்ள முடியாது. அதனால் தற்சமயம் தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் மற்றும் முக்கியமான துறைமுகங்களுக்கும் கப்பல்கள் நடாத்தி நாம் லாபமடையும் பொருட்டுத் தூத்துக்குடியில் (10,00,000) பத்து லட்சம் ரூபா மூலதனத்துடன் சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி ஸ்தாபிக்கப் பெற்று "மாங்கு சீட்டன்" என்னும் ஸ்டீமரை வாடகைக்கமர்த்தி அது நடைபெற்று வருகின்றது; சொந்த ஸ்டீமர்கள் சமீபகாலத் தில் வந்துவிடும். இதில் ஏழைகள் முதல் பெரும் பணக் காரர் வரையுள்ள சகல சுதேச சகோதரர்களும் பங்காளிக

ளாகச் சேர்ந்து லாபம் அடையும் பொருட்டுப் பங்கு 1-க்கு ரூபாய் 25 வீதம் 40000 பங்குகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆகையால் ஒவ்வொரு சுதேசாபிமானியும் இக் கம்பேனியில் பங்காளியாகி லாபத்தையடைந்து நமது சுதேசத்தை மேன்மையான நிலைமைக்குக் கொண்டுவரும் படிபிரார்த்திக்கிறேன்.

**தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் ஸ்டீமர்கள் நடத்துவதற்கு வேண்டும் மூலதனமும், அதன் வரும்படியும், செலவும், லாபமும்**

| | |
|---|---|
| 1250 நெட்டன்னுக்கு மேல் 1500 நெட்டன் வரையுள்ள ஸ்டீமர் 2க்குக் கிரையம் ரூ ... | 350000 |
| 40 நெட்டன்னுக்கு மேல் 69 நெட்டன் வரையுள்ள ஸ்டீம் லாஞ்சு 2-க்குக் கிரையம் ரூ ... | 50000 |
| ஸ்டீமர் வேலையை நடத்துவதற்கு மூல தனம் ரூ ... | 100000 |
| ஆக ரூ | 500000 |

**தூத்துக்குடி வரும்படி**

| | |
|---|---|
| நாள் 1-க்கு 3-வது வகுப்பு பிரயாணிகள் 400 வீதம் வருஷம் 1-க்குப் பிரயாணிகள் 1,44,000க்கு நபர் 1-க்கு ரூ $2\frac{1}{2}$ வீதம் ... | 360000 |
| நாள் 1-க்கு 2-வது வகுப்புப் பிரயாணிகள் 10 வீதம் வருஷம் 1-க்கு 3600 பிரயாணிகளுக்கு நபர் 1-க்கு ரூ $7\frac{1}{2}$ வீதம் | 27000 |

நாள் 1-க்கு 1-வது வகுப்புப் பிரயாணிகள் 5 வீதம் வருஷம் 1-க்கு 1800 பிரயாணிகளுக்கு நபர் 1-க்கு ரூ 15 வீதம் ரூ 27000

நாள் 1-க்கு 75 மாடுகள் வீதம் வருஷம் 1-க்கு 27000 மாடுகளுக்கு மாடு 1-க்கு ரூ 2 வீதம் ... ரூ 54000

நாள் 1-க்கு 400 ஆடுகள் வீதம் வருஷம் 1-க்கு 1,44,000 ஆடுகளுக்கு ஆடு 1-க்கு அணா 5 வீதம் ... ரூ 45000

நாள் 1க்கு (ரயில்மார்க்கம் வந்து நேரே கொழும்புக்குப் போகிறவைகளையும் சேர்த்து) 6000 மூடைகள் வீதம் வருஷம் 1க்கு 2160000 மூடைகளுக்குச் சராசரி அணா 4 வீதம் ... ரூ 540000

## கொழும்பு வரும்படி

நாள் 1-க்கு 3-வது வகுப்புப் பிரயாணிகள் 144000-க்கு நபர் 1-க்கு ரூ 2½ வீதம் ... ... ரூ 360000

நாள் 1-க்கு 2-வது வகுப்புப் பிரயாணிகள் 10 வீதம் வருஷம் 1-க்கு 3600 பிரயாணிகளுக்கு நபர் 1-க்கு ரூ 7½ வீதம் ரூ 27000

நாள் 1-க்கு 1-வது வகுப்புப் பிரயாணிகள் 5 வீதம் வருஷம் 1-க்கு 1800 பிரயாணிகளுக்கு நபர் 1-க்கு ரூ 15 வீதம் ரூ 27000

| | |
|---|---|
| நாள்1-க்கு 200 மூடை வீதம் வருஷம்1க்கு மூடைகள் 72000க்குச் சராசரி மூடை 1க்கு அணா 4 வீதம் ரூ | 18000 |
| ஆக மொத்தம் இரண்டு துறைமுகங்களிலும் வரும்படி ரூ | 14,85,000 |

## செலவு

| | |
|---|---|
| காப்டன் இஞ்சினியர் முதலிய பெரிய உத்தியோகஸ்தர்களின் சம்பளம் வருஷம் 1-க்கு ... | 33600 |
| டெக்கின் 'குறு'வாகிய சிறிய வேலைக்காரரின் சம்பளம் வருஷம் 1-க்கு ... ... ... | 10720 |
| இஞ்சின் சம்பந்தமான வேலைக்காரரின் சம்பளம் வருஷம் 1-க்கு ... ... ... | 12000 |
| சலூன் (1வது 2-வது வகுப்பு பிரயாணிகளின்) வேலைக்காரர் சம்பளம் வருஷம் 1-க்கு ரூ ... ... | 4080 |
| கப்பல் உத்தியோகஸ்தர்களுடைய சாப்பாட்டுச் செலவு வருஷம் 1-க்கு ரூ ... ... | 13200 |
| கப்பல் சில்லரை வேலைக்காரர்களின் சாப்பாட்டுச் செலவு வருஷம் 1-க்கு ரூ ... | 26400 |
| நிலக்கரிச் செலவு வருஷம் 1-க்கு ரூ ... | 164000 |
| கப்பல் வேலைக்காரர்களுக்கும் பிரயாணிகளுக்கும் தண்ணீர் செலவு வருஷம் 1-க்கு ரூ ... | 4080 |
| தூத்துக்குடியிலும் கொழும்பிலும் பைலட்டுக்கூலி நங்கூர வாடகை தீப வாடகை முதலியன வருஷம் 1-க்கு ரூ ... | 48000 |

| | |
|---|---|
| சரக்குகள் ஏற்றும் இறக்கும் வேலைக் காரர்களாகிய ஸ்டீவ்டோரின் சம்பளம் வருஷம் 1-க்கு ரூ ... | 12000 |
| காப்டன் இஞ்சினியர் முதலியவர்களின் ஆபீஸ் செலவு வருஷம் 1-க்கு ரூ ... | 720 |
| ஸ்டீம்லாஞ்சுகளுக்கு நிலக்கரி, தண்ணீர், வேலைக்காரரின் சம்பளம் செலவு வருஷம் 1-க்கு ரூ ... | 12000 |
| தூத்துக்குடி ஸ்டீமர் ஆபீஸ் சிற்பந்திச் சம்பளச் செலவு வருஷம் 1-க்கு ரூ ... | 8000 |
| கொழும்பு ஸ்டீமர் ஆபீஸ் சிற்பந்திச் சம்பளச் சிலவு ரூ | 6000 |
| இலங்கையிலும் இந்தியாவிலும் பத்தி ரிகை விளம்பரச் சிலவு ரூ ... | 2400 |
| ஸ்டீமர்கள் லாஞ்சுகள் ரிப்பேர்ச் செலவு | 24000 |
| ஸ்டீமர்கள் லாஞ்சுகள் இன்ஸ்யூர்ச் செலவு ... | 24000 |
| சில்லரைச் செலவு ... | 79800 |
| ஆக மொத்தம் செலவு ரூ | 485000 |
| செலவு நீக்கி லாபம் ரூ | 1000000 |

தூத்துக்குடி
4—10—06.

வ.உ. சிதம்பரம்பிள்ளை.

—விவேகபாநு, ஆகஸ்டு, செப்டம்பர், அக்டோபர், நவம்பர், 1906

தொகுதி-5, புத்தகம்-8, 9, 10, 11.

# மனிதனும் அறிவும்

## 7

**மனித னெனப்படு மனத்தையு முடம்பையும்**
**புனிதமெய் நெறிகளிற் போக்குநல் லறிவே.**

மனிதன் எல்லாப் பொருள்களினும் சிறந்தவன். மனிதனது சிறப்பை அவன் புண்ணியம் பாவம், நன்மை தீமை, நன்னெறி தீநெறி முதலியவற்றைப் பகுத்தறிந்து, தீயனவற்றை விலக்கி, நல்லனவற்றைக்கொள்ளும் அறிவை உடையவனா யிருத்தலே விளக்கும். மனிதன் எல்லா உயிர்களினும் பெரியவன். மனிதனது பெருமை எவரானும் அளவிடப்பட முடியாதது. இவ்வுலகின்கண் ணுள்ள அரிய பெரிய நகர்கள், அரண்கள், கோயில்கள், கோபுரங்கள் முதலியவற்றை ஆக்கியவன் மனிதனே. இவ்வுலகின்கண் நிகழும் இனிய பாஷைகள், அறங்கள் சமயங்கள், நூல்கள் முதலியவற்றை ஆக்கியவனும் மனிதனே. பூமியின் அகலம், நீளம், கனம் முதலியவற்றை யும், சமுத்திரத்தின் அகலம், நீளம், ஆழம் முதலியவற்றை யும் அவற்றினுள்ள எண்ணிறந்த பொருள்களையும், அப்பொருள்களின் குணங்களையும் கண்டுபிடித்தவன் மனிதனே. சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள், முதலிய வற்றையும், அவற்றின் அகலம், நீளம், கனம் முதலிய வற்றையும், அவற்றின் போக்கு வரவுகளையும், அப்போக்கு வரவுகளால் பல உலகங்கட்கு நேரிடும் மாறு பாடுகளையும் கண்டு கணித்தவனும் மனிதனே. நீராவிச்

சக்தியைக் கொண்டு, நிலத்தின் மீது தேர் முதலியவற்றை யும் நீரின் மீது கப்பல் முதலியவற்றையும் நடத்துகின்ற வன் மனிதனே. இத்தேர் முதலியனவும் கப்பல் முதலியன வும் செல்லும் இடங்கட்கும் செல்லமாட்டாத இடங் கட்கும் ஆகாயமார்க்கமாகப் புட்பகவிமான முதலியவற்றை நடத்திவந்தவனும் மனிதனே. மின் சக்தி மூலமாகத் தூரத்துச் சமாசாரங்களை விரைவில் அறிகின்றவன் மனிதனே. இச்சக்தி செல்லுதற்குப் பொருந்தாத உலகங் களினும், மனிதன் முதலியோரின் உடம்பினுள்ளும் மனத் தினுள்ளும் நிகழ்ந்தனவற்றை ஞான திருஷ்டியால் இமைக்கும் முன்னர் அறிந்து வந்தவனும் மனிதனே. பெரிய பெரிய தேயங்களை ஆள்கின்றவன் மனிதனே. பூமண்டலம் முழுவதையும் ஆண்டு வந்தவனும் மனிதனே. இன்னும் சொல்லற்கும் நினைத்தற்கும் கூடிய பெரிய செயல்களை யெல்லாம் செய்தவனும், செய்கின்றவனும், செய்ய நிற்பவனும் மனிதனே. மனிதன் எல்லாப் பொருள் களினும் எல்லா உயிர்களினும் அரியவன். மனிதனது அருமை, அவனே தேவனாகின்றதானும், அவனே பல சமயத்தவரால் கடவுளின் அவதார புருஷனாகவும், கடவு ளாகவும் வணங்கப் படுகின்றதானும் விளங்கும்.

இத்தகைய சிறப்பும் பெருமையும் அருமையும் வாய்ந்த மனிதன் செய்யவேண்டிய கடமைகள் சிலவுள. அவற்று ளெல்லாம் தலையாயதும், அவற்றிற் கெல்லாம் ஆதார மாயதும், அவற்றை யெல்லாம் அளிப்பதும் மனிதன் தன்னை அறியும் அறிவே. நாம் 'மனிதன்' என்று சொல்லும் பொருளின்கண் 'அறிவு' என்னும் ஒரு பொருளும், 'மனம்' என்னும் ஒரு பொருளும், 'உடம்பு' என்னும் ஒரு பொருளும் ஆகிய மூன்றும் விளங்கக் காண்கிறோம். அவற்றில் 'உடம்பு' என்பது எலும்பு, நரம்பு, தசை, இரத்தம், முதலியவற்றின் சேர்க்கைப்

பிண்டமாய், மனமும் அறிவும் தங்குதற்கு ஒருகளனாய், உடம்பின் புறத்திலுள்ள பொருள்களுடன் மனம் சம்பந்தப் படுவதற்குரிய பொறிவாயில்களைக் கொண்டு நிற்கும் ஒரு கருவி. இக்கருவிக்கும் மற்றைய கருவிகட்குப் வேற்றுமை என்னெனின் அவற்றில் ஒவ்வொன்றும் தன்தன் தொழில்களைச் செய்வதல்லது மற்றைய கருவி களில் எதனுடைய தொழிலையும் செய்யமாட்டாது. அன்றியும் அவற்றுள் ஒரு கருவியால் மற்றொரு கருவியைக் கையாட முடியாது. இக்கருவி தனக்குக் குறிக்கப் பட்ட தொழில்களையெல்லாம் செய்வதுடன் மற்றைய எல்லாக் கருவிகளுடைய தொழில்களையும் செய்யவல்லது. அன்றியும் இஃது மற்றை எல்லாக் கருவிகளையும் தனித் தனியாகவும் ஒழுங்காகவும் கையாடும் வலியுள்ளது. 'மனம்' என்பது நினைத்தல், அறிதல், மறத்தல், ஆக்கல், அளித் தல், அழித்தல் முதலியவற்றைச் செய்வதாய், அறிவை முதலாகக்கொண்டு உடம்பின்கண் தங்கி, அதன் பொறிவா யில் மூலமாக அதனையும், அதன் அகத்தினும் புறத்தினு முள்ள பொருள்களையும் தொழில்படுத்தும் ஒரு சூட்சும சக்தி. இச்சக்திக்கும் மற்றைய சக்திகட்கும் வேற்றுமை என்னெனின், அவையெல்லாம் ஸ்தூலப் பொருள்களில் நின்று வெளிப்படுவது; அன்றியும் அவை ஏரியின் நீர் போலச் செலவாகச் செலவாகக் குறைவுபடுவது. இம் மனோசக்தி மிக மிகச் சூட்சுமமான அறிவில் நின்று வெளிப்படுவது. அன்றியும் இஃது ஊற்றின் நீர்போலச் செலவாகச் செலவாகப் பெருகிக் கொண்டிருப்பது. "அறிவு" என்பது மனத்துக்கும் உடம்புக்கும் முதலாக நின்று மனத்தையும் உடம்பையும் தீ நெறிகளிற் செல்ல விடாது விலக்கி நன்னெறிகளிற் செலுத்தும் சுயம்புப் பொருள். அறிவு மனத்தொடுநின்று மனித அறங்களைச் செய்யும் பொழுது 'மனிதன்' என்னும் பெயரையும், இடம்,

பால் முதலியவற்றைப்பற்றி, 'யான்', 'நீ', 'அவன்', 'அது', 'தான்' முதலிய பெயர்களையும் பெறுகின்றது. 'மனிதன்' என்னும் பொருட்கண், அறிவு, மனம், உடம்பு என்னும் மூன்றனுள்ளும் படாத எப்பொருளும் இல்லை.

அறிவு மனத்தோடும் உடம்போடும் சம்பந்தப்பட்டதற்குரிய காரணம், இவற்றுள் ஒன்றுக்கொன்றுள்ள சம்பந்தம், மனிதன் முதலிய பெயர்களின் வரலாறு, இவைகளையெல்லாம் பின்வரும் உவமையானும் உய்த்துணர்க. அ என்னும் ஒருவன் ஸ்தலயாத்திரை செய்ய நினைக்கின்றான். அதுபோல அறிவு அறத்தைச் செய்ய நினைத்தது அ என்பவன் அவ்வியாத்திரையைச் செய்து முடித்தற்கு மிக வேகமுள்ள ஒரு குதிரையையும் ஒரு வச்சிரத் தேரையும் சேகரித்தான். அது போல அறிவு அவ்வறத்தைச் செய்து முடித்தற்கு மகாவலியுள்ள ஒரு மனத்தையும் அருமையான ஒரு உடம்பையும் சேகரித்தது. அ என்பவன் தேர் குதிரையைப் பின்பற்றிக் குதிரையுடன் ஒத்துச் செல்லும்படி, குதிரையைத் தேரோடு சேர்த்துக் கட்டினான். அது போல அறிவானது உடம்பு மனத்தைப் பின்பற்றி மனத்துடன் ஒத்துச் செல்லும்படி மனத்தை உடம்போடு சேர்த்துக்கட்டிற்று. அ என்பவன் தானே தேரை நடத்தக் கருதிக் குதிரையின் கடிவாளத்தைக் கைக் கொண்டு தேரின் கண் அமர்ந்தான். அதுபோல அறிவு தானே உடம்பை நடத்தக் கருதி மனத்தையாளும் சக்தியாகிய கடிவாளத்தைக் கைக்கொண்டு உடம்பின்கண் அமர்ந்தது. அ என்பவன் குதிரையோடு தேரை நடாத்தியதால் 'சாரதி' என்னும் பெயரைக் கொண்டான். அதுபோல அறிவு மனத்தோடு உடம்பை நடாத்தியதால், 'மனிதன்' என்னும் பெயரைக் கொண்டது. அ என்பவன் தனது மக்களால் 'தந்தை' எனவும், தனது மருமக்களால் 'மாமன்' எனவும், தனது குடிகளால் 'அரசன்' எனவும்

சொல்லப்பட்டான். அது போல அறிவு தன்மை யிடத்தில் 'யான்', 'நான்', 'யாம்', 'நாம்', எனவும், முன்னிலையிடத்தில் 'நீ', 'நீர்', 'நீங்கள்', எனவும், படர்க்கை யிடத்தில் 'அவன்', 'அவள்', 'அவர்', 'அது', 'தான்' எனவும் சொல்லப்பட்டது. 'சாரதி' என்பவனிடத்து அ, குதிரை, தேர் இம் மூன்றினுள்ளும் சம்பந்தப்படாத எப்பொருளும் இல்லை. அதுபோல மனிதன் என்பவனிடத்து அறிவு, மனம், உடம்பு இம்மூன்றினுள்ளும் சம்பந்தப்படாத எப்பொருளும் இல்லை. அ என்பவன் தான் விரும்பிய யாத்திரையைச் செய்து முடிக்கும் முன்னர் கவனமின்றிக் குதிரையின் கடிவாளத்தைச் சற்று நழுவவிடுவானாயின் அது தன் போக்கில் ஓடித் தீநெறிகளில் பட்டுத் தானும் கெட்டுத் தேரையும் யாத்திரையையும் கெடுத்துவிடும். அது போல அறிவு தான் விரும்பிய அறத்தைச் செய்து முடிக்கும் முன்னர் கவனமின்றி மனத்தை ஆளுந் தொழிலைச் சற்று நழுவவிடுமாயின் மனம் தன் போக்கில் ஓடித் தீ நெறிகளில் பட்டுத் தானும் கெட்டு உடம்பையும் அறத்தையும் கெடுத்துவிடும். அ என்பவன் தான் குறித்த யாத்திரையின் முடிவுவரை கவனத்துடன் குதிரையைத் தனது யாத்திரை நெறிகளில் செலுத்தி வருவானாயின் விரைவில் ஸ்தல யாத்திரையை முடித்துந் தனது வீட்டை அடைந்து சுகம் பெறுவான். அதுபோல அறிவு தான் குறித்த அறத்தின் முடிவுவரை கவனத்துடன் மனத்தைத் தனது அறநெறிகளில் செலுத்தி வருமாயின் விரைவில் மனித அறத்தை முடித்துத் தனது வீட்டை அடைந்து சுகம் பெறும்.

**சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ**
**நன்றின்பா லுய்ப்ப தறிவு.**

ஞானபாநு, ஏப்ரல், 1913.
தொகுதி-1, பகுதி-1.

# மனமும் உடம்பும்

# 8

**மனமறி வினது வழிவலி யாகு**
**மனமெனு நினைப்பின் வழிதனு வுடம்பே**

உயிர் அல்லது ஆன்மா என்று சொல்லப்படுகிற அறிவினது வலியே நினைத்தற் றொழிலைச் செய்யும் மனமென்று ஒரு சாரார் கூறுவர். அவ்வறிவே நினைக்குந் தொழிலைச் செய்யும்போது மனமென்ற பெயரைப் பெறு கிறதென்று கூறுவர் மற்றொரு சாரார். நினைத்தற்றொழி லைச் செய்யும் மனம் அறிவினது வலியென்றாலும், அறிவு நினைத்தற் றொழிலைச் செய்யும்போது மனமென்ற பெயரைப் பெறுகிறதென்றாலும் பொருள் ஒன்றே, அறிவு வலியன்றி வேறில்லையாகலான். தீயும் அதன் வலியாகிய சூடும் ஒரே பொருளன்றோ? என்னை? தீயில்லாமல் சூடில்லை; சூடில்லாமல் தீயில்லை. பொறிகட்குப் புலப் படும் தீயும் சூடும் ஒன்றென்றால், பொறிகளுக்குப் புலப் படாத அறிவும் மனமும் ஒன்றென்றல் சொல்லாமலே விளங்கத்தக்கது: தீயும் அதன் சூடும் ஒரேபொருளென்றா லும், தீ கண்ணிற்குப் புலப்படுவது, சூடு மெய்க்குப் புலப் படுவது. அப்படியே அறிவும் அதன் மனமும் ஒரே பொருளென்றாலும் அறிவு அறிவது, மனம் நினைப்பது. தீயாக நோக்கும் போது அதில் சூடு அடங்கியிருக்கிறது; சூடாக நோக்கும்போது அதில் தீ அடங்கியிருக்கிறது. அங்ஙனமே அறிவாக நோக்கும்போது அதில் மனம்

அடங்கியிருக்கிறது; மனமாக நோக்கும்போது அதில் அறிவு அடங்கியிருக்கிறது. தீ ஒளிருங்கால் தொழிலைச் செய்கிற. தென்பது எவ்வளவு பொய்யோ அவ்வளவு பொய்யே அறிவு அறியுங்கால் தொழிலைச் செய்கிறதென்பது. தீயிடத்தில் சூடு வந்ததற்குக் காரணம் வினாவுதல் எப்படியோ அப்படியே அறிவிடத்தில் நினைப்பு வந்த தற்குக் காரணம் வினாவுதல். தீ சுடுவது அதன் இயற்கை; அறிவு நினைப்பது அதன் இயற்கை. தீ ஒரு பருப் பொருளை (பொறிகட்குப் புலப்படும் பொருளை) நிலைக் களனாகக் கொண்டல்லது ஒளிராது, சுடாது. அதுபோல அறிவு ஒரு பருப்பொருளை நிலைக்களனாகக் கொண் டல்லது அறியாது, நினையாது. தீ திரி முதலியவற்றை நிலைக்களனாகக் கொண்டே ஒளிரும், சுடும். அப்படியே அறிவு, உடம்பு முதலியவற்றை நிலைக்களனாகக் கொண்டே அறியும், நினைக்கும். திரிமுதலிய பருப் பொருள்களைச் சாராது தீ எப்படி ஒளிராதோ சுடாதோ அப்படியே உடம்பு முதலிய பருப் பொருள்களைச் சாராது அறிவு அறியாது, நினையாது. தீயின் ஒளிக்கும் சூட்டுக்கும் திரி முதலியவற்றின் சேர்க்கை எப்படி இன்றியமையா ததோ அப்படியே அறிவின் அறிவு (அறிவு-தொழிற் பெயர்)க்கும் நினைப்பிற்கும் உடம்பு முதலியவற்றின் சேர்க்கை இன்றியமையாதது. அறிவு அறிவானேன் நினைப் பானேன் என்பது தீ ஒளிர்வானேன் சுடுவானேன் என்பதை யொக்கும். தீயுள்ள இடத்தில் சூடுண்டு; சூடுள்ள இடத் தில் தீயுண்டு. அறிவுள்ள இடத்தில் நினைப்புண்டு; நினைப் புள்ள இடத்தில் அறிவுண்டு.

உடம்பு பருப் பொருள்; மனம் (பொறிகளுக்குப் புலப் படாத) நுண்பொருள்; அறிவு (மனத்திற்கும் புலப்படாத) அதிநுண் பொருள். அறிவு மனமெல்லாம் வியாபித் துள்ளது; மனம் உடம்பெல்லாம் வியாபித்துள்ளது. அறிவு

உயிர்; மனம் அதன் நினைப்பு; உடம்பு அதன் நடிப்பு. மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளும் உடம்பின் வாயில்கள். கை, கால் முதலிய கருமேந்திரியங்கள் ஐந்தும் உடம்பின் உறுப்புக்கள். மயிர், தோல், நரம்பு, என்பு, தசை, இரத்தம், வாயு முதலியன உடம்பின் பகுதிப் பொருள்கள். அறிவு மனத்துடன் கூடியே அறியும். மனம் அறிவுடன் கூடியே நினைக்கும். மனத்தின் வழியே உடம்பு செல்லும்; உடம்பில் நின்றே மனம் நினைக்கும். அறிவும் மனமும் நாயகனும் நாயகியும் போன்றவை. மனமும் உடம்பும் அரசனும் அடிமையும் போன்றவை. நாயகன் வழியில் நாயகி செல்வது இயற்கை; நாயகி வழியில் நாயகன் செல்வது இயற்கைக்குமாறு. அரசன் வழியில் அடிமை செல்வது இயற்கை; அடிமை வழியில் அரசன் செல்வது இயற்கைக்கு மாறு. அது போல மனத்தின் வழியில் உடம்பு செல்வது இயற்கை, உடம்பின் வழியில் மனம் செல்வது இயற்கைக்கு மாறு. இயற்கையை யொட்டி நிகழ்வனவெல்லாம் இன்பத்தை விளைக்கும், இயற்கைக்கு மாறாக நிகழ்வனவெல்லாம் துன்பத்தை விளைக்கும். ஆதலால் அறிவு காட்டுவனவற்றை மனம் நினைக்க வேண்டும்; அறிவாற் காட்டப்பட்டு மனத்தால் நினைக்கப்பட்டவற்றை உடம்பு செய்யவேண்டும். இதற்கு மாறாக உடம்பின் போக்கிலே மனத்தைச் செல்ல விட்டும், மனத்தின் போக்கிலே தாம் (அறிவு) சென்றும் மனிதரிற் பெரும்பாலார் மறங்களைச் செய்து துன்பமுறுகின்றனர். அறிவு அறங்களைக் காட்டும். அறிவு காட்டும் அறங்களையே மனம் நினைக்கும் படி அதனை ஆளவேண்டும். இவ்வாறு அறிவு காட்டும் அறங்களையே மனம் நினைத்தும், உடம்பு செய்தும் வருமாயின் மனிதரெல்லாம் இன்பத்தையே அடைவரென்பது திண்ணம். இப்பேற்றை அடைவதற்கு அறிஞர் இயற்றியுள்ள அறநூற்பொருள்களை அறிவு

அறிய வேண்டும்: அறநூல்களிற் கூறியுள்ள பொருள்களை எல்லாம் மனம் உள்ள வேண்டும்; மனம் உள்ளிய அறங் களை எல்லாம் உடம்பு செய்ய வேண்டும். அறங்களை உள்ளவும், செய்யவும் மனம் நல்ல நிலைமையிலும், உடம்பு ஆரோக்கிய நிலைமையிலும் இருக்க வேண்டும். மனம் நல்ல நிலைமையில் இருப்பதற்குத் தீயோரையும் தீயனவற்றையும் அறவே விலக்கி, நல்லோரையும் நல்லன வற்றையும் மேன்மேலும் சேரவேண்டும். உடம்பு ஆரோக்கிய நிலைமையில் இருப்பதற்குத் தீயனவற்றை முற்றும் விலக்கி (ஆரோக்கியத்திற் கொத்த) நல்ல (உணவு முதலிய)னவற்றையே பசித்த பின்னர் அளவறிந்து உட்கொள்ளல் வேண்டும்.

**''உள்ளுவ தெல்லா முயர்வுள்ளல்.'' ''மாறல்ல துய்க்க துவரப் பசித்து.''**

*ஞானபாநு, மே, 1913;*
*தொகுதி-1, பகுதி-2*

# வினையும் விதியும்

## 9

**வினைநல் வினைதீ வினையென விரண்டே**
**வினையின் விளைவே விதியென வருமே**

மனம், நா, உடம்பு இம்மூன்றன் தொழிலுக்கும் வினை யென்று பெயர். அதாவது, நினைத்தலும், சொல்லலும், செய்தலும் வினையாம். நினைக்க வேண்டியதை நினையாது விடுதலும், சொல்ல வேண்டியதைச் சொல்லாது விடுதலும், செய்ய வேண்டியதைச் செய்யாது விடுதலும் வினையென்றே கொள்ளப்படும். ஒவ்வொரு வினையும் அதனதன் நற்பயனை நோக்கி நல்வினை யெனவும், தீப்பயனை நோக்கித் தீவினை யெனவும் சொல்லப்படும். நற்பயன் பொருள். அது நிலையுள்ள பொருள், நிலையற்ற பொருள் என இரு வகைப்படும். நிலையுள்ள பொருள் மெய்ப்பொருள்; நிலையற்ற பொருள் உலகப் பொருள். தீப்பயன் வறுமை. அது நிலை யுள்ள வறுமை, நிலையற்ற வறுமை என இருவகைப்படும். நிலையுள்ள வறுமை மெய்ப்பொருளின்மை; நிலையற்ற வறுமை உலகப்பொருளின்மை. நிலையுள்ள பொரு ளையோ நிலையற்ற பொருளையோ தரும் வினை நல்வினை யெனவும், நிலையுள்ள வறுமையையோ நிலையற்ற வறுமையையோ தரும் வினை தீவினை யெனவும் அறிக.

நினைப்பும், சொல்லும், செயலும் முதிர்ச்சியடைந்து அதனதன் பயனை அளிக்கும் பொழுது விதியென்னும்

பெயரைப் பெறுகின்றது. நினைப்பை வித்தென்றும் சொல்லை மலரென்றும், செயலைக் காயென்றும், விதியைக் கனியென்றும், இன்பதுன்பங்களை நற்சுவை தீச்சுவைக ளென்றும் சொல்லலாம். வித்தில்லாமல், மலராவது, காயாவது, கனியாவது வராததுபோல நினைப்பில்லாமல் சொல்லாவது, செயலாவது, விதியாவது வராது. ஆனால் மலரில்லாமலும், காயில்லாமலும், ஏகதேசம் கனிவருதல் போன்று சொல்லில்லாமலும், செயலில்லாமலும், ஏகதேசம் விதிவரக் கூடும். வித்தில்லாமல் ஒருபோதும் கனி வராததுபோல நினைப்பில்லாமல் ஒருபோதும் விதிவராது. மலர், காய், கனி, இம்மூன்றற்கும் வித்து எப்படி மூலகாரணமோ அப்படியே சொல், செயல், விதி இம்மூன்றற்கும் நினைப்பு மூல காரணம். நினைப்பு நல்லதாயின் சொல்லும், செயலும், விதியும் நல்லதாகும். நினைப்புத் தீயதாயின் சொல்லும், செயலும், விதியும் தீயதாகும். நல்வினை பொருளைத் தருவதுபோல நல்விதி இன்பத்தைத் தரும். அது நிலையுள்ள இன்பம் நிலையற்ற இன்பம் என இருவகைப்படும். நிலையுள்ள இன்பம் மெய்ப்பொருளால் வரும் இன்பம்; நிலையற்ற இன்பம் உலகப் பொருளால் வரும் இன்பம். தீவினை வறுமையைத் தருவதுபோலத் தீவிதி துன்பத்தைத் தரும். அது நிலையுள்ள துன்பம் நிலையற்ற துன்பம் என இருவகைப்படும். நிலையுள்ள துன்பம் மெய்ப் பொருளின்மையால் வரும் துன்பம்; நிலையற்ற துன்பம் உலகப் பொருளின்மையால் வருந் துன்பம். நிலையுள்ள இன்பத்தையோ நிலையற்ற இன்பத்தையோ தரும், விதி நல்விதியெனவும், நிலையுள்ள துன்பத்தையோ நிலையற்ற துன்பத்தையோ தரும் விதி தீவிதி யெனவும் அறிக.

உலகத்திலுள்ள மனிதரெல்லாம் துன்பத்தை விடுத்து இன்பத்தைக் கொள்ள அவாவுகின்றனர். துன்பத்தை விடுதற்குத் தீவிதியை உய்தல் வேண்டும். இன்பத்தை

அடைவதற்கு நல்விதியை எய்தல் வேண்டும். தீவினையைச் செய்யாதிருப்பின் தீவிதி அழிந்தேபோகும், வரவில்லாத முதல் உண்ண உண்ணக் குறைந்து அழிதல் போல. நல்வினையைச் செய்யச் செய்ய நல்விதி வளர்ந்து கொண்டேயிருக்கும், ஈட்ட ஈட்டப் பொருள் வளர்தல் போல. தீவினையைச் செய்பவர் நல்விதியை அடையவே முடியாது, எட்டி வித்தை விதைப்பவர் மாங்கனியை அடைய முடியாததுபோல. நல்வினையைச் செய்பவர் தீவிதியை அடையவே முடியாது, மாவித்தை விதைப்பவர் எட்டிக் கனியை அடைய முடியாதது போல. எட்டி வித்து மண் முதலியவற்றின் சேர்க்கையால், முளைத்து, வளர்ந்து எட்டி மலரையும், எட்டிக் காயையும், எட்டிக் கனியையும் தருதல் போல தீநினைப்பு மெய்ப்பொருளின் சேர்க்கை யால் தடித்து, முதிர்ந்து, தீச்சொல்லையும், தீச்செயலை யும், தீவிதியையும் தருகின்றது. மா வித்து மண் முதலிய வற்றின் சேர்க்கையால் முளைத்து, வளர்ந்து, மாமலரையும் மாங்காயையும், மாங்கனியையும் தருதல்போல நல்நினைப்பு மெய்ப் பொருளின் சேர்க்கையால் தடித்து, முதிர்ந்து, நற் சொல்லையும், நற் செயலையும், நல் விதியையும் தரு கின்றது. தீ நினைப்பை நீக்கி நல் நினைப்பைக் கொள்ளும் சிறந்த அறிவையும் வலியையும் உடையரா யிருத்தலின், தத்தம் தீவிதியையும் நல்விதியையும் உண்டு பண்ணுபவர் மனிதரே.

இன்று நல்வினைகளைச் செய்து கொண்டிருக்கின்ற சிலர் துன்பத்தை அநுபவித்துக் கொண்டிருக்கவும், இன்று தீவினைகளைச் செய்து கொண்டிருக்கின்ற சிலர் இன்பத்தை அநுபவித்துக் கொண்டிருக்கவும் நாம் காண் கிறோம். என்னை? உலகிலுள்ள ஒவ்வொருவரும் இன்று பழைய வினைகளின் பயன்களை அநுபவித்துக்கொண்டும்,

புதிய வினைகளைச் செய்துகொண்டும் இருக்கின்றனர். இன்று அநுபவிக்கிற பயன்களைத் தருகின்ற பழைய வினைகளைப் பிராரத்துவம் என்றும், இன்று செய்கிற புதிய வினைகளை ஆகாமியம் என்றும் ஆன்றோர் கூறுவர். இன்று நல்வினைகளைச் செய்து கொண்டிருக்கிறவர் முந்திய தீவினைகளின் பயன்களை அநுபவித்துக் கொண்டுமிருக்கின்றனர். இன்று தீவினைகளைச் செய்து கொண்டிருக்கிறவர் முந்திய நல்வினைகளின் பயன்களை அநுபவித்துக் கொண்டுமிருக்கின்றனர். இன்று நல்வினைகளைச் செய்து கொண்டிருக்கிறவர் நாளை இன்பத்தை அநுபவிப்பர். இன்று தீவினைகளைச் செய்துகொண்டிருக்கிறவர் நாளைத் துன்பத்தை அநுபவிப்பர். இக்காலத்தில் நல்வினைகளைச் செய்து கொண்டிருக்கிறவர் முற்காலத்திலும் நல்வினைகளைச் செய்து கொண்டிருந்தார் என்று கோடலும், இக்காலத்தில் தீவினைகளைச் செய்து கொண்டிருக்கிறவர் முற்காலத்திலும் தீவினைகளைச் செய்து கொண்டிருந்தார் என்று கோடலும் பிழையேயாம்.

மனம் எப்பொழுதும் நினைத்துக்கொண்டும், நா எப்பொழுதும் சொல்லிக்கொண்டும், உடம்பு எப்பொழுதும் செய்து கொண்டும் இருப்பது இயற்கை. மனம் நினையாமலும், நா சொல்லாமலும், உடம்பு செய்யாமலும் இருப்பது இயற்கைக்கு மாறு. மனம் தீய நினைப்புக்களை நினைக்கவும், நா தீய சொற்களைச் சொல்லவும், உடம்பு தீய செயல்களைச் செய்யவும் விடுதல் மடமை. மனம் நல்ல நினைப்புக்களை நினைக்கவும், நா நல்ல சொற்களைச் சொல்லவும், உடம்பு நல்ல செயல்களைச் செய்யவும் விடுதல் அறிவு. இப்பொழுது அனுபவிக்கும் துன்பங்கள் முன் செய்த தீவினைகளின் பயன்கள். இப்பொழுது அநுபவிக்கும் இன்பங்கள் முன் செய்த நல்வினைகளின் பயன்கள். துன்பங்களைக் கொள்ள விரும்பாதவர் தீவினைகளை

அறவே விடல் வேண்டும். இன்பங்களைக் கொள்ள விரும்புபவர் நல்வினைகளை இடைவிடாது செய்தல் வேண்டும். முன் செய்த தீவினைகளின் பயன்களாகிய துன்பங்களை அநுபவிக்கிறபோது அழுவதும், முன் செய்த நல்வினைகளின் பயன்களாகிய இன்பங்களை அநுபவிக்கும்போது மகிழ்வதும் அறிவில்லாரது செயல்கள். முன் செய்த நல்வினைகளின் பயன்களாகிய இன்பங்களை அநுபவிக்கும்போது மகிழாமையும், முன் செய்த தீவினைகளின் பயன்களாகிய துன்பங்களை அநுபவிக்கும்போது அழாமையும் அறிவுடையாரது செயல்கள்.

**நன்றாங்கா னல்லவாக் காண்பவ ரன்றாங்கா**
**லல்லற் படுவ் தெவன்.**

—ஞானபாநு, ஜூன், 1913;
தொகுதி-1, பகுதி-3.

# தமிழ் எழுத்துக்கள்

**10**

சென்ற சில வருஷங்களாகச் சில அறிவாளிகள் நம் தமிழ்ப் பாஷையில் சில எழுத்துக்கள் குறைவாயிருக்கின்றன வென்றும் அக்குறையை நிவிர்த்திக்கத்தக்க பிற பாஷை எழுத்துக்களேனும் பிறசில குறிகளேனும் நம் தமிழ்ப்பாஷை எழுத்துக்களோடு சேர்க்கப்பட வேண்டு மென்றும் கூறிவருகின்றார்கள். ஆனால், அவர்களில் ஒருவரும் அவை சேர்க்கப்படுதல் நம் தமிழ்ப்பாஷைக்காவது அதன் வளர்ச்சிக்காவது இன்றியமையாததென்று காட்டத் தக்க காரணம் ஒன்றையும் இதுகாறும் கூறிலர். இச் சேர்க்கை நம் தமிழ்ப்பாஷைக்கு இன்றியமையாததென்று காட்டக் கருதி நமது நண்பர் ஸ்ரீ. சி. சுப்பிரமணிய பாரதியவர்கள் சென்ற ஆடி மாதத்தில் வெளிவந்த நமது "ஞானபாநு"வில் "தமிழில் எழுத்துக்குறை" என்னும் தலைப்பெயரோடு ஒரு நிருபம் வரைந்துள்ளார்கள். அந்நிருபத்தில் மேற்கண்ட சேர்க்கையைச் செய்ய வேண்டு மென்பதற்காகக் கூறப்பட்டுள்ள காரணம் ஒன்றே. அஃதாவது, பிறபாஷைகளின் மனிதப் பெயர், நகரப்பெயர் முதலியவற்றிற் சிலவற்றை அப்பாஷையாளர் உச்சரிக்கும் சப்தத்தில் நாம் உச்சரிக்குமாறு செய்யத்தக்க சில எழுத்துக்கள் நமது தமிழ்ப் பாஷையில் இல்லையென்பதே நமது நண்பரவர்கள் தமது நிருபத்தின் ரு-வது பகுதியில் "ஸம்ஸ்க்ருதச் சொற்களை ஸம்ஸ்க்ருத வழக்கப்படி நாம்

உச்சரிக்க வேண்டிய அவசியமில்லை யாதலால், நமக்கு அந்த எழுத்துக்கள் வேண்டுவதில்லை யென்று சிலர் ஆக்ஷேபிக்கலாம். சரி - நியாயமென்று வைத்துக்கொள் வோம்'' என்று கூறுகின்றார்கள். அச்சிலர் பிறபாஷை களின் மனிதப்பெயர், நகரப்பெயர், முதலியவற்றையும் அவ்வப்பாஷைகளின் வழக்கப்படி நாம் உச்சரிக்கவேண்டிய அவசியமில்லையாதலால், நமக்கு அந்த எழுத்துக்கள் வேண்டுவதில்லையென்று கூறுகின்றனர். இக்கூற்றையும் நமது நண்பரவர்கள் "சரி, நியாயமென்று வைத்துக் கொள் வோம்'' என்று அங்கீகரிக்கக் கடமைப்பட்டுள்ளார்கள், முந்திய ஆக்ஷேபமும் பிந்திய கூற்றும் வேறல்ல வாதலான். அவ்வாறு நமது நண்பரவர்கள் அங்கீகரிப்பார்களாயின் நமது தமிழ்ப்பாஷை எழுத்துக்களோடு பிற சில பாஷை எழுத்துக்களையேனும் பிற சில குறிகளையேனும் சேர்த்தல் இன்றியமையாத தென்பதைக் காட்டத்தக்க காரணம் ஒன்றும் நமது நண்பரவர்கள் நிரூபத்தில் கூறப் படவில்லை யென்பது அதனைப் பார்த்த மாத்திரத்தில் விளங்கும். அவ்வின்றியமையாமையைக் காட்டத்தக்க காரணம் ஒன்றேனும் நமது நண்பரவர்களாலாவது அவர் களைப் போன்ற வேறு பாஷா திருத்தக்காரர்களாலாவது கூறப்படுமாயின் அப்போது நமது தமிழ்ப்பாஷை எழுத்துக் களோடு பிறசில பாஷை எழுத்துக்களைச் சேர்ப்பதா பிற சில குறிகளைச் சேர்ப்பதா என்னும் விஷயத்தைப் பற்றிச் சிந்திக்கவும் தீர்மானிக்கவும் நாம் முன் வரக்கடமைப்பட் டுள்ளோம். நிற்க.

"சுதேசமித்திரனைச் சென்ற 15 வருஷங்களாகப் படித்து வருகிற ஓர் அய்யங்கார் நமது நிதானக் கட்சித் தலைவருடைய 'Gokhale' என்ற பெயரை 'கோக்கலே' என்று உச்சரித்தது நமது நண்பரவர்களுக்குத் தப்பாகத் தோன்றியதும், நமது ஸ்ரீ அரவிந்தரவர்களின் தமிழ் உபாத்

தியாயர் ஒரு வங்காளியின் Birendranath Datta Gupta என்ற பெயரைத் தமிஷர் 'பிரேந்திரநாத தத்த குப்தர்' என்று தான் வாசிப்பரென்று கூறியது நமது அரவிந்த ரவர்களுக்குச் சிரிப்பை உண்டு பண்ணியதும் நமது சமஸ்கிருதப் பண்டிதர்களும் வங்காளிப் பண்டிதர்களும் 'பழனி' 'கிழவி' என்னும் தமிழ்ச் சொற்களை 'பளனி' 'கிளவி' எனவும், 'அறம்' 'மறம்' என்னும் தமிழ்ச்சொற்களை 'அரம்' 'மரம்' எனவும், 'மன்றம்' 'கன்று' என்னும் தமிழ்ச் சொற்களை 'மந்ரம்' 'கந்ரு' எனவும், 'Forlces' 'Fourth' என்னும் ஆங்கிலச்சொற்களை போர்ப்ஸ், போர்த் எனவும் 'Zeal' 'Zenith' என்னும் ஆங்கிலச் சொற்களை 'ஜீல்' 'ஜெனித்' எனவும் உச்சரிக்குங்கால் நாம் தப்பென்று கூறுவதையும் நமது ஆங்கில நண்பர்கள் சிரிப்பதையும் போன்றனவேயன்றி வேறல்ல. தெய்வபாஷை யென்றும் பூரணபாஷையென்றும் பல பாஷைகளுக்கும் தாய்ப்பாஷையென்றும் சொல்லப்படுகிற ஸம்ஸ்கிருத பாஷை எழுத்துக்களோடும் பல புதுமைகளையும் திருத்தங்களையுங் கொண்டுள்ள பாஷையென்று சொல்லப்படுகிற வங்காளிப் பாஷை எழுத்துக்களோடும் ழ, ற, ன, F, Z என்னும் எழுத்துக்களையாவது அவற்றின் ஒலிகளைக் குறிக்குங் குறிகளையாவது சேர்ப்பதற்கு நமது நண்பரவர்களும் அரவிந்தரவர்களும் முயற்சித்து வெற்றி பெறுவாரர்களாயின் அவர்கள் நமது தமிழ் மக்களுக்கு ஒப்பற்ற வழிகாட்டிகளாவார்கள்; பின்னர் நமது தமிழ்மக்கள் அவர்களைப் பின்பற்றத் துணிவார்கள்.

இதுகாறும் தமிழ்ப்பாஷை எழுத்துக்களில் குறையுளது அல்லது தமிழ்ப்பாஷையில் குறையுளது என்று கூறியவர்களில் ஒருவரும் தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பூரணமாகக் கற்றுணர்ந்தவராகவாவது சமஸ்கிருத சம்பந்தமில்லாதவராகவாவது சம்ஸ்கிருத பாஷையில் மேற்

சொல்லிய திருத்தங்களையோ வேறு திருத்தங்களையோ செய்ய வேண்டுமென்று கூறியவராகவாவது காணப்படவில்லை யென்றும், அவர்கள் நம் தமிழ்ப்பாஷையைத் திருத்த முற்படுகின்றார்களோ வருத்த முற்படுகின்றார்களோ என்றும் நம் தமிழ் மக்களிற் சிலர் ஐயமுறுகின்றனர். அவருடைய அவ்வையத்தை நிவிர்த்திப்பதற்காகவாவது நம் தமிழ்ப் பாஷையில் திருத்தம் செய்யவேண்டுமென்று கூற முன்வருபவர்கள் தமிழ் இலக்கணங்களுக்கெல்லாம் மூலமென்று சொல்லப்படத் தக்கதாயுள்ள தொல்காப்பியம் ஒன்றையும் தமிழ் இலக்கியங்களுளெல்லாம் சிறந்தவையென்று சொல்லப்படத் தக்கனவாயுள்ள 'சீவக சிந்தாமணி 'சிலப்பதிகாரம்' 'மணிமேகலை' 'திருக்குறள்' 'கலிங்கத்துப்பரணி' 'கலித்தொகை' 'திருக்கோவையார்' முதலியவற்றில் ஒரு சிலவற்றையுமாவது பூரணமாகக் கற்கவேண்டுவது இன்றியமையாதது. இது நிற்க.

ஒரு பாஷைச் சொற்களை அப்பாஷை எழுத்துக்களாலேயே எழுதப்படுதல் நன்றென்றும் பிறபாஷை எழுத்துக்களால் எழுதப்படுதல் தீதென்றும் சில அறிஞர் கூறுகின்றனர். அவ்வாறு அவர் கூறுவதற்குரிய காரணங்களிலொன்று ஒரு பாஷைச் சொற்கள் மற்றொருபாஷை எழுத்துக்களால் எழுதப்படுமானால் நாளடைவில் உலகிலுள்ள பல பாஷைச்சொற்களும் பிறபாஷைச் சொற்களோடு கலந்து எவையெவை என்னென்ன பாஷைச் சொற்களென்று தெரியாமற் போகுமென்பது. மற்றொன்று ஒவ்வொரு பாஷைக்கும் புதிதுபுதிதாக இலக்கணங்களும் அகராதிகளும் எழுத நேருமென்பது. இன்னொன்று ஒவ்வொருபாஷை அகராதியும் இலக்கணமும் உலகத்திலுள்ள பல பாஷைகளின் பல சொற்களையும் கொள்ள நேருவதுடன் பல பாஷைகளில் பலவாறு உச்சரிக்கப்படும்

சொற்களெல்லாம் பலமுறை எழுதப் பெற நேருமென்பது. இன்னுமொன்று கடைசியாக உலகத்திலுள்ள சகல பாஷைகளின் சகல சொற்களையும் கொண்டுள்ள அகராதிகளும் இலக்கணங்களும் ஒவ்வொரு பாஷையிலும் எழுதப்படவும் அவற்றை ஒருவரும் கற்க முடியாமற் போகவும் நேருமென்பது. வேறு சில அறிஞர் பலபாஷைச் சொற்கள் பல் சுவைப்பொருள்களுக்கு நிகராமெனவும், சிலர் சில சுவைப் பொருள்களை விரும்பாததுபோல சில பாஷையினர் பிற சில பாஷைச் சொற்களை விரும்பாரெனவும், சில சுவைப் பொருள்களைச் சிலர் முழுப் பொருள்களாகவும் சிலர் பொடிகளாகவும் சிலர் திராவகங்களாகவும் உபயோகிக்க விரும்புவதுபோல சில பாஷைச்சொற்களைச் சிலப்பாஷையினர் முழுச் சொற்களாகவும் சில பாஷையினர் சிதை சொற்களாகவும் சிலபாஷையினர் முற்றுமுரு மாற்றப் பட்ட சொற்களாகவும் உபயோகிக்க விரும்புவரெனவும், பல் பாஷைச் சொற்களையும் பல பாஷையினரும் எடுத்தாள வேண்டுமென்பது பல சுவைப் பொருள்களையும் பல மனிதரும் உபயோகிக்க வேண்டு மென்பதை ஒக்குமெனவும், பிற பாஷைச் சொற்களை முழுச்சொற்களாகவே ஒரு பாஷையினர் எடுத்தாளவேண்டுமென்பது சில சுவைப் பொருள்களை முழுப் பொருள்களாகவே எல்லோரும் உபயோகிக்க வேண்டு மென்பதை நிகர்க்குமெனவும், ஒவ்வொருவரும் அவரவர் இஷ்டப்படி (பிறரை வருத்தாதவாறு) நினைக்கவும் பேசவும் செய்யவும் விடுதலே சுதந்தர இலக்கணமென்பது போல ஒவ்வொரு பாஷையாசிரியரும் விதித்துள்ளபடியே அவ்வப்பாஷையினர் பிறபாஷைச் சொற்களை உபயோகித்துக் கொள்ளுமாறு விடுதலே சுதந்தர இலக்கணமெனவும் கூறுகின்றனர். இரு வேறு பாஷையினர் அவ்விருவருமறிந்த ஒரு பாஷை மூலமாகவே ஒருவரோடொருவர் சம்பாஷிப்பராதலால் ஒரு பாஷையின் சொற்களை

அப்பாஷையினர் உச்சரிப்பதுபோல மற்றொருபாஷையினர் உச்சரித்தலின்றியமையாத தன்றென்பர் வேறு சில அறிஞர். உலகத்திலுள்ள சகல பாஷைகளின் சகல சப்தங்களையும் தெரிந்தெடுத்து எந்தெந்தப் பாஷையில் எந்தெந்த சப்தங்களில்லையோ அந்தந்த சப்தங்களைக் குறிப்பதற்குச் சில எழுத்துக்கள் அல்லது குறிகள் ஏற்படுத்தி அவற்றை அந்நியபாஷையினரோடு எவ்வித சம்பந்தமாவது வைத்துக்கொள்ள விரும்புகின்றவர் மாத்திரம் கற்றல் ஆவசியகமென்பர் சிலர். அவ்வாறு அந்நிய பாஷைசப்தங்களை எடுத்தாள விரும்புவோர் அவ்வச்சப்தங்களைக் குறிக்கும் அவ்வப்பாஷை எழுத்துக்களையே எடுத்தாளுதல் நன்மையென்றும் அவற்றிற்குப் புதிய குறிகள் ஏற்படுத்துதல் தீமையென்றும் கூறுவர் வேறு சிலர். நம் தமிழ்ப்புலவரோ தமது இனிய பாஷையானது யாவராலும் எளிதாகக் கற்கப் படத்தக்கவாறு முப்பது எழுத்துக்களுக்குள் அமைந்திருக்கின்றதென்றும், வேறு பாஷை எழுத்துக்களை இதன் எழுத்துக்களோடு சேர்த்து இதன் எழுத்தெண்ணிக்கையை அதிகமாக்கி இதனைக் கற்பதற்குக் கஷ்டமடையுமாறு செய்தல் கூடாதென்றும், அந்நியபாஷையினரோடு சம்பந்தம் வைத்துக் கொள்ள விரும்பும் அரசர் வணிகர் முதலியோர் மாத்திரம் மேற்குறித்தவாறு தமிழ்ப்பாஷையில் இல்லாத பிற பாஷைச் சப்தங்களைக்குறிக்கும் அவ்வப்பாஷை எழுத்துக் களைக் கற்றாளவேண்டு மென்றும் கூறுகின்றனர். இப் புலவரிற் சிலர் ஞ, ஞே, ஞ, ஞே, என்னும் எழுத்துக் களும் முறையே றா, றோ, னா, னோ, என்று எழுதப் பட்டுத் தமிழ்ப்பாஷையைக் கற்றாளுதலை இன்னும் எளிதாக்கவேண்டுமென்று விரும்புகின்றனர்.

இதுகாறும் கூறப்பட்டுள்ளவற்றையும் இவைபோன்ற பிறவற்றையும் நமது நண்பரவர்கள் சிந்தித்துத், தமிழ்ப்

பாஷை எழுத்துக்களிற் பிறபாஷை எழுத்துக்களையோ அவற்றின் சப்தத்தைக் கொடுக்கும் குறிகளையோ சேர்ப்பதும், தமிழ்நாட்டுக் கிராமங்களில் உழவுத் தொழில் செய்து ஊரைவிட்டு வெளியேறா திருக்கும் தமிழ்மக்களும் பிற பாஷையினரின் சம்பந்தம் வேண்டாத தமிழ்மக்களும் அவற்றைக் கற்க வேண்டுவதும் ஆவசியகம்தானா என்பதைத் தீர்மானித்து அதனைத் தக்க காரணங்களோடு நமது "ஞானபாநு" மூலமாக வெளியிடுவார்களாக. ★★

—ஞானபாநு, செப்டம்பர், 1915;
தொகுதி-3, பகுதி—6.

# தமிழ்

## 11

சென்ற புரட்டாசி மாதம் 16-ந்தேதி வெளிவந்த நமது 'சுதேசமித்திரனில்' 'தமிழ்ப் பாஷையும் சுதேச மித்திரனும்' என்னும் தலைப்பெயரோடு "பாரத புத்ரன்" என்னும் நண்பர் எழுதியிருக்கிற நிருபத்தைப் பற்றிய எனது அபிப்பிராயங்களை வெளியிட வேண்டுமென்று நம் தமிழபிமானிகளிற் சிலர் என்னை வேண்டுகின்றமையால் எனது அபிப்பிராயங்களை இப்பத்திரிகை வாயிலாக வெளி யிடுகின்றேன்.

'பாரத புத்ரன்' எழுதிய நிருபத்தின் முதல் உறுப்பில் (பாராவில்) "தமிழ் இலக்கியங்களிலெல்லாம் தலைமை வாய்ந்துள்ள திருக்குறளிலுங்கூட சுத்தம் சமஸ்கிருதச் சொற்கள் 50-க்கு மேலிருக்க இருபதாம் நூற்றாண்டி லிருக்கும் நம்மால் தனித்தமிழில் லௌகிக சம்பந்தமாயாவது ஒரு பத்திரிகையை நடத்த முடியும் என்பது கனவிலும் கருத வொண்ணாத ஒரு விஷயமாம்" என்னும் வாக்கியம் காணப்படுகின்றது. தமிழ் இலக்கண இலக்கியங்களிற் சமஸ்கிருதச் சொற்களிற் (சொற்களென்று சொல்லப்படுப வற்றிற் சிலவும் இலக்கண இலக்கியங்களில் தமிழ்ச் சொற் களிற் சொல்லப்படுபவற்றிற்) சிலவும் கலந்திருப்பது உண்மையே. ஆனால், கிண்டி ஸ்ரீமான் கார்த்திகேய முதலியார் விருதை ஸ்ரீலஸ்ரீ சிவஞான யோகிகள் முதலி யோர் சமஸ்கிருத பாஷைச் சொற்களும் நூல்களும்

தமிழ்ப் பாஷைச் சொற்களிலிருந்தும் நூல்களிலிருந்துமே வந்தன வென்று கூறுகின்றனர். சமஸ்கிருத பண்டிதர்களிற் சிலர் தமிழ்ப்பாஷைச் சொற்களும் நூல்களும் சமஸ்கிருத பாஷைச் சொற்களிலிருந்தும் ,நூல்களிலிருந்துமே வந்தன வென்று கூறுகின்றனர். ஆங்கிலங்கற்ற தமிழ், சமஸ்கிருத பண்டிதர்களிற் பலர் தமிழ்ப்பாஷையும் சமஸ்கிருத பாஷையும் வெவ்வேறு பாஷைகளென்றும் இவ்விரண்டு பாஷையினர்களும் நீடித்தகாலமாக ஒருவரையொருவர் அடுத்து வாழ்ந்து வந்தமையால் ஒரு பாஷைச் சொற்கள் மற்றொரு பாஷையிற் கலந்தனவென்றும் கூறுகின்றனர். இம்முத்திறத்தார் கூற்றுக்களும் எம்மட்டும் உண்மையென்று தீர்மானிக்கப்படும்வரையில் நம்மவர்கள் அறிவதற்கு இன்றியமையாத அளவு தமிழ்ப்பாஷையில் சமஸ்கிருதச் சொற்களையும் (சொற்களென்று சொல்லப் படுபவற்றையும்) கலந்து பத்திரிகை நடாத்துவதையும், நூல்களும் எழுதுவதையும் எவரும் ஆட்சேபிக்க மாட்டார். ஆட்சேபித்தல் தகுதியுமன்று.

"பாரத புத்ரன்" எழுதிய நிருபத்தின் இரண்டாவது உறுப்பில் "இக்காலத்துச் செயல்களும் எண்ணங்களும் வஸ்துக்களும் 3000 வருடங்களுக்கு முன் இருந்ததில்லை. ஆகவே அவைகளுக்குத் தமிழில் பதங்கள் கிடையா. ஆகையால் நாம் பிறதேசத்தார் கூறும் சொற்களையே உபயோகிக்க வேண்டியிருக்கிறது. நாளாவட்டத்தில் அவை தமிழ்ப் பதங்களாய் விடுகின்றன என்னும் வாக்கியங்கள் காணப்படுகின்றன. அவைகளுக்குத் தமிழில் பதங்கள் கிடையா" என்பது உண்மையென்றே வைத்துக் கொள்ளினும் அவைகளுக்குத் தக்க மொழிகளை, அல்லது தொடர்மொழிகளை, நாம் தமிழில் ஆக்கிக் கொள்ளலாம். நாம் ஆக்கும் மொழிகள் அல்லது தொடர்மொழி நம்மவர்களுக்கு அர்த்தமாகா வென்று தோன்றினால் அவற்றின் பக்கங்களில் அவர்க

ளுக்கு அர்த்தமாகக் கூடிப்பிற பாஷை மொழிகளை நாம் உபயோகிக்கலாம். நாம் இவ்வாறு செய்வதால் நம் தமிழ்ப் பாஷைக்கும் நம் தமிழ் மக்களுக்கும் ஒரு பெரிய நன்மை செய்தவர்களாவோம், எவ்வாறெனின், பிறபாஷை மொழிகளுக்குச் சரியான தமிழ்மொழிகளை உற்பத்தி செய்து நம் தமிழ்ப்பாஷையை விருத்தி செய்கின்றோம். நம்மவர்களுக்குப் பிறபாஷை மொழிகளையும் கற்பிக்கின்றோம். நாம் ஆக்கும் மொழிகளையும் தொடர்மொழிகளையும் நம் தமிழ் மக்கள் நாளடைவில் அறிந்து கொள்வார்கள். 'பிற பாஷைச் சொற்கள் நாளா வட்டத்தில் தமிழ் பதங்களாய் விடு' மாறு நாம் இடம் கொடுத்தால் நன்றன்று. ஏனெனின் அவை தமிழ்ப் பதங் களான பின் அவற்றை நம் தமிழ் அகராதியிலும் இலக் கணத்திலும் சேர்த்துப் பொருள் உரைக்கவும் இலக்கணம் கூறவும் நேரிடும். ஒவ்வொரு பாஷையாளரும் தத்தம் பாஷையில் பிற பாஷைச் சொற்களை வரையறையின்றிச் சேர்த்துக் கொண்டே போவாராயின் நாளடைவில் உலகத் தின் கண் நிலவும் எல்லாப் பாஷைச் சொற்களும் ஒவ்வொரு பாஷையகராதியிலும் இலக்கணத்திலும் நுழைந்து அவற்றைக் கற்பது அசாத்தியமாக முடியும்.

'பாரத புத்ரன்' எழுதிய நிருபத்தின் மூன்றாம் உறுப்பிலும் நான்காம் உறுப்பிலும் ஜனங்களுக்கு பார்லி மெண்ட், கவர்னர், காபினெட் என்று சொன்னால் அவர்கள் எளிதில் உணர்ந்து கொள்வார்களே ஒழிய மகாமந்திரிசபை, மாகாணபதி, மந்திராலயம் என்று சொன்னால் அவர்கள் தெரிந்து கொள்ள மாட்டார்கள். கொஞ்ச நாட்கள் கழிந்த பின் சாதாரண வழக்கில் இருந்து வரும் இங்கிலீஷ் பதங்களைச் சொன்னால்தான் ஜனங்கள் அவைகளின் கருத்தைக் கிரகித்துக் கொள்வார்கள். அவை களின் தமிழ்ச்சொற்களை சொன்னால் அவர்களுக்கு இவை

கிரீக் பாஷையைப் போலத் தானிருக்கும்'' என்னும் வாக்கியங்கள் காணப்படுகின்றன. மா மந்திரசபை, மாகாணபதி, மந்திராலயம் என்று சொன்னால் ஜனங்கள் தெரிந்து கொள்ள மாட்டார்கள் என்பது உண்மை என்றாலும் மகாமந்திரசபை (பார்லிமெண்ட்), மாகாணபதி (கவர்னர்), மந்திராலயம் (காபினெட்) என்று சொன்னால் ஜனங்கள் அறிந்து கொள்வதில் ஏதேனும் தடையுண்டோ? இவ்வாறாகப் பிற பாஷைச் சொற்களை உபயோகிக்க நேரிடும் இடங்களெல்லாம் அவற்றின் தமிழ்மொழி பெயர்ப்புச் சொற்களையும் அவற்றின் பக்கங்களில் அப்பிற பாஷைச் சொற்களையும் சில மாதங்கள் அல்லது வருடங்கள் நாம் உபயோகித்து வருவோமானால் பின்னர் நாம் அப்பிற பாஷைச் சொற்களின்றி நம் பாஷைச் சொற்களை மாத்திரம் எழுதும் போதும் அவற்றை நம் ஜனங்கள் தெரிந்து கொள்வார்கள். ஆங்கிலம் கற்ற நம் தமிழ்ச் சகோதரர்களிற் பலருக்கும் தமிழ்ப்பாஷை இப்பொழுதே 'கிரீக்' பாஷையாய் விட்டதைக் கண்டுதானே நம் தேசாபிமானிகளிற் சிலர் ஆங்கிலமொழிகளைத் தமிழில் உபயோகித்தல் தகாதென்று கூச்சலிடத் தொடங்கியிருக்கின்றனர் ''பாரத புத்ரன்'' அவர்களே நம் பாரத தேசத்துப் பாஷைச் சொற்கள் போலத் தோன்றுமாறு செய்தற்கு நீங்கள் உண்மையாக விரும்புகின்றீர்களா? இப்பொழுது நம் தமிழ் நாட்டில் வழங்கி வருகின்றனவென்று நீங்கள் சொல்லுகின்ற துலுக்குப் பதங்களுக்கும் சரியான தமிழ்ப் பதங்களைச் சிருஷ்டித்தளிப்பது உங்களைப் போன்ற பாரத புத்திரர்களுடைய கடமையன்றோ?

''பாரத புத்ரன்'' எழுதிய நிருபத்தின் ஐந்தாவது உறுப்பின் தொடக்கத்திற் சொல்லப்பட்டுள்ள விஷயங்களை நம்மவரில் ஒருவரும் மறுக்கமாட்டார். ஆனால் அதன் முடிவில் கூறியுள்ளபடி ''குறித்த பொருளைச் சரியான

படி குறிப்பிக்க நம் பாஷையில் பதங்களில்லை''யென்று தமிழ்ப்பாஷை இலக்கண இலக்கியங்களைக் கற்றவர் எவரும் கூறார். யான் தமிழ் இலக்கண இலக்கியங்களில் ஒரு சிலவே கற்றுள்ளேன். அவ்வாறிருந்தும் யான் அறிந்துள்ள எந்தப் பாஷையின் எந்த மொழியையும் நம் தமிழ் மக்களில் எவரும் எளிதில் அறியுமாறு (சமஸ்கிருத சொற்களின் கலப்பேயில்லாத) தனித்தமிழில் மொழிபெயர்த்துக் கொடுக்கத் தக்க திறமையை யுடையேனென்றால், என்னினும் அதிகமாகத் தமிழ் இலக்கண இலக்கியங்களையும் கற்றுள்ளவர்கள் அவ்வாறு செய்யத்தக்க திறமையை யுடையவர்களா யிருப்பார்களென்பதை யான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

நமது 'பாரத புத்ரன்' எழுதிய நிரூபத்தில் பாஷை நடையைப் பார்த்தால் அவர் எந்தப் பாஷையின் எந்தச் சொல்லையும் நம் தமிழரில் எவரும் அறியுமாறு மொழி பெயர்த்துக் கொடுக்கும் வல்லமையுடையவர் என்பது நன்கு தெரிகின்றது. பிழை செய்வது மனிதற்கு இயற்கை. நமது பிழைகளெல்லாம் நமது மேம்பாட்டுக்குப் படிகளே யில்லாது நமக்குத் தாழ்வைத் தருவனவல்ல. ஆதலால் நாம் இதுமுன் செய்த பிழைகளைப் பிழைகளல்லனவென்று நாட்ட முயல்வது நமக்கும் நமது தேச நன்மைக்கும் பொருத்தமான செயலன்று; நமது தமிழ்ப்பாஷையும் சமஸ்கிருத பாஷையும் மற்றைப் பாஷைகளைப் போலச் சொற்களில் குறைவுடையன வல்லவென்பது பல பாஷைப் பண்டிதர்களுக்கும் ஒப்ப முடிந்தொன்று ஆதலால் ஆங்கிலேயர் பிறபாஷைச் சொற்களைத் தமது ''ஆங்கிலோ ஸாக்ஸன்'' பாஷையிற் சேர்த்துக் கொண்டது போல நாம் பிற பாஷைச் சொற்களை நமது தமிழ்ப் பாஷையிற் சேர்க்க வேண்டிய அவசியமில்லை.

"பாரத புத்ரன்" அவர்களே! "சுற்றி நடைபெறுகிற சக்திகளுக்கு அவ்வக் காலத்துக் கொத்தபடி அமைந்து கொள்ளுகிறவன் மனிதனாவானா? அத்தகைய மனிதனைச் சமூகம் அனைத்தும், காலத்துக்குத் தக்கவாறு திரிகின்ற வன் என்று நிந்திப்பதை நீங்கள் கேட்டதில்லையா?" "உலகத்தோ டொட்ட ஒழுகல் பல கற்றும் கல்லார் அறிவி லாதார்" என்னும் திருக்குறளின் அர்த்தம் நீங்கள் கொண்டதன்று. நம்மைச் சுற்றியுள்ள பலர் தீய செயல் களையே செய்வாராயின் அவற்றை நாமும் செய்தல் தகுதியாகுமா? அவ்வாறு நாம் செய்ய வேண்டுமென்று திருவள்ளுவர் கூறுவாரா? "உலகமென்ப துயர்ந்தோர் மாட்டு" என்பதை நீங்கள் மறந்து விட்டீர்களா?"

'உலகத்தோடொட்ட ஒழுகல்' என்பதற்கு, எக்காலத் தும் எல்லாரும் தகுதியான செயல்களென்று மதிக்கத்தக்க செயல்களையே செய்யும் பெரியாரோடு பொருந்த நடத்தல் என்பது பொருள். இப்பொருளைத் தவிர வேறு எப்பொரு ளும் அக்குறளுக்குக் கூறலாகாது. இராஜதந்திர ஒழுக் கத்தையும் ஆபத்திலிருந்து நீங்க முயல்கின்றவன் ஒழுக் கத்தையும் இங்கு நாம் கருதுதல் கூடாது. திருஷ்டாந்தமாக இப்பொழுது நம் இராஜாங்கத்தார் தமிழ்ப் பாஷையில் ஆங்கிலச் சொற்களைக் கலந்து எழுதுகின்றவர்களுக்கு இன்னின்ன நன்மைகள் செய்யப்படும் அல்லது ஆங்கிலச் சொற்களைக் கலக்காமல் தமிழ் எழுதுகின்றவர்க்கு இன்னின்ன சிட்சைகள் விதிக்கப்படும் என்னும் ஒரு விதியை ஏற்படுத்துவாராயின், அல்லது அந்த நன்மைகள் அடையவோ அல்லது அச்சிட்சைகளின்று நீங்கவோ கருதுகின்ற மனிதர் தமிழில் ஆங்கிலச் சொற்களைக் கலந்து எழுதுவாராயின் அவர் செயலைப் பிழையென்று நாம் கூறுதல் தகுதியன்று. ஆனாலும் அத்தகைய செயலினர் பெரியாரோடு பொருந்த நடந்தவரென்று நம் போன்றவ

ரால் மதிக்கப்படுதற்குரிய தகுதியுடையவராக மாட்டார்.

'பாரத புத்திரன்' எழுதிய நிருபத்தின் ஏழாவது உறுப்பிற் கண்ட யுத்த சம்பந்தமான பதங்களுக்கும் விஞ்ஞான சாஸ்திர சம்பந்தமான சொற்களுக்கும் சரியான தமிழ்மொழிகளை நாம் சிருஷ்டித்துக் கொள்ளலாமாதலால் அவற்றிற்கும் நாம் ஆங்கில மொழிகளை உபயோகிக்க வேண்டிய ஆவசியகம் இல்லை. ''பாரத புத்திரன்'' எழுதிய நிருபத்தின் எட்டாம் உறுப்பில் நம் தமிழ்ப்புலவர்கள் சம்ஸ்கிருதச் சொற்களை உபயோகித்தலைப் பற்றிக் கூறுகிறார். சமஸ்கிருதச் சொற்களும், தமிழ்ச் சொற்களும் ஒரு பாஷைச் சொற்களேயென்று சமஸ்கிருதப் பண்டிதர் களில் ஒரு திறத்தாரும் தமிழ்ப் பண்டிதர்களில் ஒரு திறத்தாரும் கூறுகின்றமையால் அச்சொற்களை அப் பண்டிதர்கள் உபயோகித்தலைப் பற்றிக் குறை கூறுதல் தகுதியன்று. அவ்விரு பாஷைகளும் வெவ்வேறு பாஷை களென்று கருதுகின்றவர்கள் முதலில் தமிழ்ப்பாஷையில் ஆங்கிலச் சொற்கள் முதலியவற்றைக் கலந்து எழுதுவதை நம்மவர்கள் நிறுத்துமாறு செய்து பின்னர் (தற்காலத்தில் என்போன்றோர் ஆங்கிலச் சொற்களை உபயோகிக்க வேண்டிய இடங்களில் அவற்றின் தமிழ் மொழிபெயர்ப்புச் சொற்களையும் அவற்றின் பக்கங்களில் அவற்றிற்குரிய ஆங்கிலச் சொற்களையும் உபயோகித்து வருதல் போல) சமஸ்கிருதச் சொற்களை உபயோகிக்க நேரும் இடங்களில் அவற்றின் தமிழ் மொழிபெயர்ப்புச் சொற்களையும் அவற்றின் பக்கங்களில் அவற்றிற்குரிய சமஸ்கிருதச் சொற்களையும் உபயோகித்து, தற்காலம் நம் தமிழ் நாட்டில் வழங்கிவரும் சமஸ்கிருதச் சொற்களுக்கெல்லாம்

சரியான தமிழ்ச் சொற்களை நம் தமிழ் மக்களுக்குக் கற்பித்து நாளடைவில் சமஸ்கிருதச் சொற்களைத் தமிழி லிருந்து வேரோடு களைந்துவிடக் கருதியுள்ளார்கள். இவர்கள் ஒரு பாஷையிற் பிற பாஷைச் சொற்களைக் கலத்தல் அவ்வொரு பாஷைக்குத் தீங்கு இழைத்ததாகு மென்று கருதுகின்றார்கள். இலக்கண இலக்கியங்கள் இல்லாத பாஷைகளிற் கூட வேறு பாஷைச் சொற்களை மொழிபெயர்த்தல் கூடுமென்றால் சமஸ்கிருதச் சொற் களைத் தமிழில் மொழி பெயர்த்தல் கூடுமென்பது சொல்லாமலே விளங்கத்தக்கது.

"பாரத புத்திரன்" எழுதிய நிரூபத்தின் ஒன்பதாம் உறுப்பு "ஞானபாநு"வில் ஆங்கில மொழிகள் உபயோகிக் கப்பட்டமையைப் பற்றிக் கூறுகின்றது. ஒரு சில மாதங் களுக்கு முன்னர்தான் "ஞானபாநு" தமிழ்ப் பாஷையில் ஆங்கிலச் சொற்களைக் கலந்து எழுதுவதால் சில வருஷங் களுக்குப் பின்னர் நம் தமிழ்ப்பாஷை நம் தமிழ் மக்களுக்கு "கிரீக்" பாஷையைப் போலத் தோன்ற நேரிடுமென்று அறிந்தது. அஃது அவ்வறிவை அடைந்த நாள் முதல் ஆங்கிலச் சொற்களை உபயோகித்தலை நிறுத்தி "தாமின்புறுவதுலகின் புறக்கண்டு காமுறுவர் கற்றறிந் தார்" என்றபடி மற்ற பத்திரிகைகளும் ஆங்கில மொழிகளை உபயோகித்தல் கூடாதென்று கூறி வருகின்றது. அது தன் கண்ணிலிருந்து தூலத்தை நீக்கிய பின்னரே, தன் சகோதரரது கண்களிலுள்ள தூலங்களை நீக்குவதற்கு முற்பட்டிருக்கிறது. ஆதலால் நாம் அதனைக் குறை கூறாது, அதற்கு நன்றியறிதலுள்ளவர்களா யிருக்கக் கடமைப்பட்டுள்ளோம். "பாரத புத்ரன்" எழுதிய நிரூபத்தின் பத்தாம் உறுப்பு "ஞான பாநு" சமஸ்கிருத மொழிகளை உபயோகித்து வருகிறதைப் பற்றிக் கூறுகின்றது.

"ஞானபாநு" சமஸ்கிருதச் சொற்களைத் தமிழ்ப் பத்திரிகைகள் உபயோகித்தல் கூடாதென்று இன்னும் கூறத் தொடங்கவில்லை. அவ்வாறு அது கூறுமாயின் பின்னர் சமஸ்கிருத மொழிகளை உபயோகிக்காதென்றே யான் நம்புகிறேன். பதினோராம் உறுப்பு இறந்து போன ஒரு தமிழபிமானியின் செயலைப் பற்றிக் கூறுகின்றது. பொதுவாக இறந்துபோன மனிதர்களைப் பற்றி உயர்வாகக் கூறுவதைத் தவிர வேறு ஒன்றையும் கூறாது விடுதலே உத்தமம். ஆனால், அத்தமிழபிமானி தம் பெயரைத் தமிழ்ச் சொற்களால் ஆக்க நினைத்த செயலோ என் போன்றோரால் மிகப் பாராட்டத் தக்கது. பல காரியங்களின் நிமித்தமாகப் பல பாஷையினரோடு பல வகைச் சம்பந்தங்களை வைத்துக் கொண்டிருக்கிற யானும் நமது நண்பர் ஸ்ரீ. சி சுப்பிரமணியபாரதி அந்நிய பாஷைச் சொற்களைத் தமிழில் எழுதுவதற்குக் கண்டுள்ள புதிய முறையின் வெளிவரவை எதிர் நோக்கியிருக்கின்றேன்.

—சுதேசமித்திரன்
29. 10. 1915

# தமிழ் நூல்கள்

## 12

தமிழ் என்பது நாவிற்கும் செவிக்கும் உள்ளத்திற்கும் இனிமையைப் பயக்கும் ஒரு பாஷை. அதுதான் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என மூவகைப்படும். இயற்றமிழாவது உலக வழக்கில் இயலும் தமிழ்ச் செய்யுளும் வசனமுமாம். இசைத்தமிழாவது பண், தாளம் முதலியவற்றோடு கூடி நடக்கும் தமிழ்ச் செய்யுளாம். நாடகத் தமிழாவது நடித்தலொடு கூடி நடக்கும் அவ்விருவகைத் தமிழுமாம். நூல் என்பது பஞ்சின் நூல் போல நேரிதான ஒழுக்கத்தைக் காட்டும் ஒரு கருவி. அதுதான் எண்ணூல் எனவும், எழுத்து நூல் எனவும் இருவகைப்படும். எண்ணூலாவது கணித நூலாம். எழுத்து நூலாவது இலக்கிய இலக்கணங்களாம். கணிதம், கணக்கு, எண் என்பன ஒரு பொருளைக் குறிச் சொற்கள். கணித நூல் எண் சுவடி, குழி பெருக்கம் முதலிய கணக்கு நூல்களாம். இலக்கியம், இலக்ஷியம், இலக்கு, குறி என்பன ஒரு பொருளைக் குறிக்குஞ் சொற்கள். ஈண்டு, இலக்கியமென்பது இலக்ஷயத்தையுடைய நூல்களைக் குறித்து நின்றது. நூல்களின் இலக்ஷியம் நான்காகும். அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன. இந்நான்கில் ஒன்றையேனும் ஒன்றிற்கு மேற்பட்டவற்றையேனும் இலக்ஷியமாகக் கொண்டு கூறப்படுவனவெல்லாம் இலக்கியமாகும். இந்நான்கில் ஒன்றையேனும் இலக்கியமாகக் கொள்ளாது

வெறுங் காலப்போக்கு முதலியவற்றின் நிமித்தமாகக் கூறப்படுவனவெல்லாம் இலக்கியமாகா; நூலுமாகா; சிற்பம், ஜோதிடம், முதலியவற்றைக் கூறுவன இலக்கிய மாகாவோவெனின், அவை அறமும் பொருளும் இன்பமும் செய்தற்குத் துணையாமாதலால் அவையும் இலக்கியமாம். இலக்கணம், இலக்ஷிணம், இயல்பு, தன்மை என்பன ஒரே பொருளைக் குறிக்கும் சொற்கள். ஈண்டு இலக்கண மென்பது இலக்ஷணத்தைக் கூறும் நூல்களைக் குறித்து நின்றது. இலக்ஷணமாவது அறம், பொருள், இன்பம், வீடு என்னும் இலக்ஷியங்களையுடைய நூல்களாகிய இலக்கியத் தின் இயல்பாம். எழுத்து, சொல் முதலியவற்றைக் கூறுவன இலக்கணமாகாவோவெனின் அவை இலக்கியத் தின் பொருள்களை நன்கு அறிதற்குத் துணையாமாக லால் அவையும் இலக்கணமாம். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் பொருள்கள் நான்கில், இன்பம் அகத்தின் கண் நிகழ்வதால் அதனை அகப் பொருளென்றும், மற்றை மூன்றும் புறத்தின் கண் நிகழ்வதால் அவற்றைப் புறப் பொருளென்றும் பிரித்து, அகப்பொருளைக் கூறும் இலக்கிய இலக்கணங்களை அகப்பொருளிலக்கிய விலக்கண மெனவும், புறப்பொருள்களைக் கூறும் இலக்கிய இலக்கணங்களைப் புறப்பொருளிலக்கிய விலக்கணமென வும், தமிழாசிரியர் கூறுவர். அவ்விலக்கிய விலக்கணங்கள் எண்ணிறந்தன. இவற்றுள் எண்ணை இறந்தனவெல்லாம் இராஜாங்க மாறுதல் முதலியவற்றால் இறந்தொழிந்தன. எண்ணுள் அடங்குவனவே எஞ்சி நின்றன. இவ்வெஞ் சியவற்றுள்ளும், காலவாய்ப்பட்டன பல; செல்லுக்கிரை யாயின சில; ஒளிந்து கிடப்பன ஒரு சில; வெளிப்பட்டன வேறொரு சில; அச்சாயின அவற்றுளுஞ் சில; இத்தகையப் பெருமையும், சிறுமையும் வாய்ந்த தமிழ் இலக்கியு

இலக்கணங்களுள் எழில்மிக்க சிலவற்றை ஈண்டு எடுத்துக் கூறுகின்றேன்.

## இலக்கியம்

அரிச்சுவடி: தமிழ் எழுத்துக்களின் வரி வடிவத்தை இதில் காணலாம். உயிரெழுத்துப் பன்னிரெண்டும், ஆயுதம் ஒன்றும், மெய்யெழுத்துப் பதினெட்டும், உயிர் மெய்யெழுத்து இருநூற்றுப் பதினாலும் எழுதப்பட்டுள் ளன. இதனைத் தமிழ் நெடுங்கணக்கென்றும் கூறுவர். இஃது அச்சிடப்பட்டுள்ளது.

ஆத்திச்சூடி: இஃது ஒளவையார் என்ற ஓர் அம்மையார் அருளிச் செய்தது; அரிச்சுவடியிலுள்ள எழுத்து வரிசைப்பட உயிரெழுத்துக்களில் ஒவ்வொன்றையும் முதலெழுத்தாகவும், அகரம் ஏறிய மெய்யெழுத்துக்களில் மொழிக்கு முதலில் வரும் ஒவ்வொன்றையும் முதலெழுத் தாகவும், மொழிக்கு முதலில் வராத ஒவ்வொன்றையும் ஆயுதத்தையும் இரண்டாம் எழுத்தாகவும் மற்றை உயிர் மெய்யெழுத்துக்களில் மொழிக்கு முதலில் ஒவ்வொன்றை யும் முதல் எழுத்தாகவும் கொண்ட சீரோடு தொடங்கி இரண்டு சீர்களால் முடியும் சூத்திரங்களால் அருமையான ஒழுக்கங்களையும், நீதிகளையும் பேதிப்பது. "ஆத்திச் சூடி" என்று தொடங்கும் காப்புச் செய்யுளையும் "அறஞ் செய விரும்பு" என்பது முதல் "வைகறைத் துயிலெழு" என்பது இறுதியாகவுள்ள நூற்று நான்கு சூத்திரங்களை யும் கொண்டது. இச்சூத்திரங்களிற் பெரும்பாலன யாவரும் எளிதில் உணரத்தக்க செந்தமிழ் நடையில் அமைக்கப்பட்டுள்ளன. இதற்கு வசந்தராயர் முதலிய சிலர் உரை செய்திருக்கின்றனர். அவ்வுரைகளில் ஒன்றுடன் இந் நூல் அச்சிடப்பட்டுள்ளது.

கொன்றை வேந்தன் : இதுவும் அவ்வம்மையார் அருளிச் செய்தது. அரிச்சுவடியிலுள்ள எழுத்து வரிசைப்படி மொழிக்கு முதலில் வரும் உயிரெழுத்துக்களையும் பெரும்பான்மை மொழிக்கு முதலில் வரும் உயிர் மெய்யெழுத்துக்களையும், முதலெழுத்தாகக் கொண்ட சீரோடு தொடங்கிய நான்கு சீர்களால் முடியும் சூத்திரங்களால் ஒழுக்கங்களையும் நீதிகளையும் போதிப்பது. "கொன்றை வேந்தன்" என்று தொடங்கும் காப்புச் செய்யுளையும் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பது முதல் "வையந் தோறும் தெய்வம் தொழு" என்பது இறுதியாகவுள்ள எண்பத்தேழு சூத்திரங்களையும் கொண்டது. இச்சூத்திரங்களிற் பெரும்பாலன யாவரும் எளிதிலுணரத் தக்க செந்தமிழ் நடையில் அமைக்கப்பட்டுள்ளன. இதற்கும் வந்தராயர் முதலிய சிலர் உரை இயற்றியிருக்கின்றனர். இவ்வுரைகளில் ஒன்றுடன் இந்நூல் அச்சிடப் பட்டுள்ளது.

வெற்றி வேற்கை :— இஃது அதிவீரராம பாண்டியன் இயற்றியது. வெற்றி வேற்கை என்று தொடங்கும் பாயிரச் செய்யுளையும், "எழுத்தறிவித்தவன் இறைவனாகும்" என்பது முதல் "வாழிய நலனே வாழிய நலனே" என்பது இறுதியாகவுள்ள எண்பத்து நான்கு செய்யுள்களையும் கொண்டு ஒழுக்கங்களையும் நீதிகளையும் அறிவிப்பது. இந்நூலை நறுந்தொகை என்றும் கூறுவர். இஃது ஓர் உரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

வாக்குண்டாம் : இதுவும் மேற்கூறிய ஔவையார் அருளிச் செய்தது. வாக்குண்டாம் என்று தொடங்கும் காப்புச் செய்யுள் தவிர முப்பது இனிய வெண்பாக்களால் ஒழுக்கங்களையும் நீதிகளையும் உண்மைகளையும் மிகப் பொருத்தமான உவமானங்களோடு அறிவிப்பது. இந்

நூலை மூதுரை என்றும் கூறுவர். இது பழைய உரை ஒன்றுடன் அச்சிடப்பட்டுள்ளது.

நல்வழி : இஃது ஔவையார் என்ற மற்றோர் அம்மையாரால் இயற்றப்பட்டது. பாலும் தெளிதேனும் என்னும் காப்புச் செய்யுள் தவிர நாற்பது இனிய வெண்பாக்களைக் கொண்டு பல நல்லொழுக்கங்களையும் நீதிகளையும் பொருத்தமான உவமானங்களோடு உணர்த்துவது. இஃது ஓர் உரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

முதுமொழிக் காஞ்சி: இந்நூல் முதற்கொண்டு கூறப்படும் பதினெட்டு நூல்களும் பதினெண் கீழ்க்கணக்கு என்னும் தொகை நூலுள் அடங்கும். இந்நூலை இயற்றியவர் மதுரைக் கூடலூர் கிழார். இஃது ஒவ்வொன்றுக்கும் பப்பத்து சூத்திரங்களைக் கொண்ட சிறந்த பத்து, அறிவுப் பத்து, பழியாப்பத்து, துவ்வாப்பத்து, அல்லபத்து, எளிய பத்து, நல்கூர்ந்த பத்து, தண்டாப்பத்து என்று பகுக்கப் பட்டு, பல நீதிகளையும், உண்மைகளையும் உணர்த்துவது. ஒவ்வொரு பத்தின் முதலிலும் ''ஆர் கலியுகத்து மக்கட் கெல்லாம் ஓதலிற் சிறந்தன் றொழுக்கமுடைமை'' என்பது முதற் செய்யுளாகக் கூறப்படும். மற்றவையெல்லாம் நான்கு சீர்களைக் கொண்ட ஓர் அடிச் சூத்திரங்களாக அமைக்கப்பட்டுள்ளன. இஃது இக்காலவுரையொன்றுடன் அச்சிடப்பட்டுள்ளது.

இனியவை நாற்பது : இது மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ் சேந்தனார் இயற்றியது. காப்பு வெண்பா தவிர நாற்பது அழகிய வெண்பாக்களைக் கொண்டு இன்பத்தைத் தரும் நூற்றிருபத்தேழு விஷயங்களை உணர்த்துவது. பழையவுரையொன்றுடன் அச்சிடப் பட்டுள்ளது,

இன்னா நாற்பது : இது கபிலர் அருளிச் செய்தது. இதனையும் "இனியவை நாற்பது" இயற்றிய பூதஞ் சேந்தனாரே இயற்றினரென்று அவர் கூறுவர். அது தவறு. இது காப்புவெண்பா தவிர நாற்பது அழகிய வெண்பாக் களைக் கொண்டு துன்பத்தைத் தரும் பல தீய விஷயங் களை உணர்த்துவது; இக்காலத்தாரொருவர் உரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

கார் நாற்பது : இதன் ஆசிரியர் மதுரைக் கண்ணங் கூத்தனார். இதுவும் காப்பு வெண்பா தவிர நாற்பது வெண்பாக்களையுடையது; கார் காலத்திற்குள் திரும்பி வருவதாக வாக்களித்துச் சென்ற தலைவன் அங்ஙனம் வராமை கண்டு தலைவி பிரிவாற்றாமல் வருந்துவதைக் கூறுவது; பழையவுரை ஒன்றுடன் அச்சிடப்பட்டுள்ளது.

களவழி நாற்பது : இது பொய்கையார் என்ற ஒரு புலவர் இயற்றியது. காப்பு வெண்பா தவிர நாற்பது வெண்பாக்களையுடையது; சேரன் கணைக்காலிரும் பொறையைச் சோழன் செங்கணான் அமரில் வென்று சிறைப்படுத்தியபோது சேரன் கணைக்காலிரும்பொறை யைச் சிறை மீட்கும் பொருட்டுச் சோழனுடைய போர்க் களத்தைச் சிறப்பித்துப் பாடியது; புதியவுரையொன்றுடன் அச்சிடப்பட்டுள்ளது.

இன்னிலை : இது பொய்கையாழ்வார் அருளிச் செய்தது. அறப்பால், பொருட்பால், இன்பப்பால், வீட்டுப் பால் என்னும் நான்கு பகுதிகளாகப் பகுக்கப்பட்டு, நாற்பத்தைந்து வெண்பாக்களால் அறம் முதலிய நான்கு பொருள்களையும் நன்கு உணர்த்துவது; இக்காலவுரை யொன்றுடன் அச்சிடப்பட்டுள்ளது.

ஐந்திணையைம்பது : இது மாறன் பொறையனார் இயற்றியது. பாயிரவெண்பா தவிர ஐம்பது வெண்பாக்

களை உடையது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் அகத்திணையைந்தில் ஒவ்வொன்றையும் பப்பத்து வெண்பாக்களால் இனிது விளக்குவது; பழைய வுரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

ஐந்திணையெழுபது : இது மூவாதியர் இயற்றியது; மேற்கூறிய அகவொழுக்கம் ஐந்தில் ஒவ்வொன்றையும் பதினான்கு பதினான்கு வெண்பாக்களால் நன்கு விளக்குவது; பழையவுரையொன்றையுடையது; ஏட்டுப் பிரதியில் இருக்கின்றது.

திணைமொழியைம்பது : இது கண்ணஞ் சேந்தனார் இயற்றியது. அகத்திணை ஐந்தில் ஒவ்வொன்றையும் பப்பத்து வெண்பாக்களால் நன்கு விளக்குவது. பழைய உரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

திணை மாலை நூற்றைம்பது : இது கணிமேதாவியார் இயற்றியது. அகத்திணை ஒவ்வொன்றையும் முப்பது முப்பது வெண்பாக்களால் நன்கு விளக்குவது, பழைய வுரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

திரிகடுகம் : இது நல்லாதனார் இயற்றியது. காப்பு வெண்பா தவிர ஒரு நூறு வெண்பாக்களையுடையது. ஒவ்வொரு வெண்பாவிலும் மூன்று விஷயங்களைக் கூறுவது. புதியவுரையொன்றுடன் அச்சிடப்பட்டுள்ளது.

நான்மணிக்கடிகை : இது விளம்பிநாகனார் இயற்றியது. காப்பு வெண்பா தவிர நூற்று மூன்று வெண்பாக்களையுடையது. ஒவ்வொரு வெண்பாவிலும் நான்கு விஷயங்களைக் கூறுவது; புதியவுரை யொன்றுடன் அச்சிடப்பட்டுள்ளது.

சிறுபஞ்சமூலம் : இது காரியாசான் இயற்றியது; சிறப்புப் பாயிர வெண்பா, கடவுள் வாழ்த்து வெண்பா

தவிர நூற்றுமூன்று வெண்பாக்களையுடையது; ஒவ்வொரு வெண்பாவிலும் ஐயைந்து விஷயங்களைக் கூறுவது; இக்காலத்து உரையொன்றுடன் அச்சிடப்பட்டுள்ளது.

ஏலாதி : இதனை இயற்றியவர் கணி மேதையார்; சிறப்புப் பாயிர வெண்பா, கடவுள் வணக்க வெண்பா, தவிர, எண்பது வெண்பாக்களை யுடையது; ஒவ்வொரு வெண்பாவிலும் அவ்வாறு விஷயங்களைக் கூறுவது; இக்காலத்து உரையொன்றுடன் அச்சிடப்பட்டுள்ளது.

ஆசாரக்கோவை : இதனை இயற்றியவர் பெருவாயின் முள்ளியார். இது தற்சிறப்புப் பாயிர வெண்பாவோடு நூற்றொரு வெண்பாக்களையுடையது. பெரும்பாலும் இல் வாழ்வாரது ஒழுக்கங்களைக்கூறுவது. வடநூலொன்றைத் தழுவி இயற்றப் பெற்றது. பழையவுரையொடு புதிய வுரையும் சேர்த்து அச்சிடப்பட்டுள்ளது.

நாலடி : இது தமிழ் முனிவர் பலரால் பாடப்பட்ட நானூறு வெண்பாக்களையும், கடவுள் வணக்க வெண் பாவையுமுடையது; ஒவ்வோர் அதிகாரத்திற்கும் பப்பத்து வெண்பா வீதம் நாற்பது அதிகாரங்களாக்கிப் பதிமூன்று அதிகாரங்களை அறத்துப் பாலாகவும், இருபத்தி நான்கு அதிகாரங்களைப் பொருட்பாலாகவும், மூன்று அதிகாரங் களைக் காமத்துப் பாலாகவும் பதுமனரால் பகுக்கப்பட் டது; திருவள்ளுவர் திருக்குறட்பாக்களிலும் மிக இனிமை யான சில பாக்களைக் கொண்டது; அழகிய உவமானங் களோடு நாற்பொருளையும் மிகத் தெளிவாகக் கூறுவது; பலரால் உரையெழுதப் பெற்றது. ஓர் உரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

பழமொழி : இதனை இயற்றியவர் முன்றுறையரைய னார், தற்சிறப்புப் பாயிர வெண்பா தவிர நானூறு

வெண்பாக்களையுடையது. ஒவ்வொரு வெண்பாவிலும் ஒவ்வொரு பழமொழியை அமைத்து அருமையான பல நீதிகளை எடுத்துக் கூறுவது; பொருட் சிறப்பில் ஒப்புயர்வற்றதென யாவராலும் சொல்லப்படும் திருவள்ளுவர் திருக்குறளுக்கு இரண்டாவதாக நிற்குந் தகுதியுடையது; பழையவுரையொடு புதியவுரையும் சேர்த்து அச்சிடப்பட்டுள்ளது.

முப்பால் : இது திருக்குறள் முதலிய பல பெயர்களால் வழங்கப் படுவது. பொய்யாமொழிப் புலவரென்று வழங்கும் திருவள்ளுவர் அருளிச் செய்தது. தமிழ் மறைகளில் ஒன்றாவது. அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பால்களாகப் பகுக்கப்பட்டு ஒவ்வோர் அதிகாரத்திற்கும் பப்பத்து குறள் (இரண்டடி) வெண்பாக்களையுடைய நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களால் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பொருள்களையும் மிகத் தெளிவாக உணர்த்தும் ஒப்புயர்வற்றதொரு சிறந்த நூல். இந்திய ஐரோப்பிய பாஷைகள் பலவற்றில் மொழிபெயர்க்கப் பட்டது. புகழ் பெற்ற உரையாசிரியர் உரையெழுதப் பெற்றது. முப்பாலும் பரிமேலழகருரையொடும், அறத்துப்பால் மணக்குடவருரையொடும் அச்சிடப் பட்டுள்ளன.

அறநெறிச்சாரம் : இது முனைப்பாடியார் இயற்றியது தெய்வ வணக்கம் முதலியவற்றில் வெண்பா நான்கு தவிர இரு நூற்றிரண்டு அழகிய வெண்பாக்களையுடையது. பல ஒழுக்கங்களையும் நீதிகளையும் தக்க உவமானங்களுடன் நன்கு விளக்குவது. பழைய உரை ஒன்று உண்டெனக் கூறப்படுவது. மூலம் அச்சிடப்பட்டுள்ளது.

திருமுருகாற்றுப்படை : இது முதற் கூறப்படும் பத்து நூல்களும் பத்துப்பாட்டு என்னும் தொகை நூலுள் அடங்குவன. இதனை இயற்றியவர் நக்கீரனார். இது

முந்நூற்றுப் பதினேழு அடிகளுடைய அகவற்பா; வீடு பேறு பெற்றான் ஒருவன் அப்பேற்றை அடைய விரும்பு வான் ஒருவனை முருகக் கடவுள்பால் வழிப்படுத்தியதான விஷயத்தைக் கொண்டு அக் கடவுள் திருப்பரங்குன்றம் முதலிய அறுபடை வீடுகளிலும் எழுந்தருளியிருத்தலைப் பாராட்டிக் கூறுவது. இதுவும் பத்துப்பாட்டைச் சேர்ந்த மற்ற ஒன்பது நூல்களும் நச்சினார்க்கினியர் உரையுடன் அச்சிடப்பட்டுள்ளன.

பொருநராற்றுப்படை : இது முடத்தாமக் கண்ணியார் பாடியது. இருநூற்று நாற்பத்தெட்டு அடிகளையுடைய அகவற்பா. பரிசில் பெறக் கருதிய போர்க்களம் பாடுவோன் ஒருவனை, பரிசிற் பெற்றான் ஒருவன் சோழன் கரிகால் பெருவளத்தானிடத்தே வழிபடுத்தலை விஷயமாகக் கொண்டது. அக்கரிகாற் பெருவளத்தானது நாடு, நீதி, கொடை, வீரம் முதலியவற்றை அழகாகக் கூறுவது.

சிறுபாணாற்றுப்படை : இது நல்லூர் நத்தத்தனார் பாடியது. இருநூற்றுப் பத்தொன்பது அடிகளையுடைய அகவற்பா, பரிசில் பெறக் கருதிய பாணனொருவனைப் பரிசில் பெற்றான் ஒருவன் ஓய்மா நாட்டு நல்லியக் கோடனிடத்தே வழிப்படுத்தலை விஷயமாக கொண்டது. அந்நல்லியக் கோடனது நகர்களாகிய வேலூர் முதலிய வற்றின் இயல்பையும், அவனது அரண்மனையின் சிறப்பு முதலியவற்றையும், தமிழ்நாட்டு மூவேந்தருடைய இராஜ தானிகளாகிய வஞ்சி, உறந்தை, மதுரை என்னும் நகர் களின் இயல்பையும், பேகன் முதலிய கடை ஏழு வள்ளல் கள் இன்ன இன்ன கொடையாற் புகழ் பெற்றார் என்பதை யும் கூறுவது.

பெரும்பாணாற்றுப்படை: இது கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியது. ஐந்நூறு அடிகளையுடைய அகவற்பா, பரிசில் பெறக் கருதிய பாணன் ஒருவனைப் பரிசில் பெற்றான் ஒருவன் காஞ்சி நகரத்தை ஆண்டிருந்த தொண்டைமான் இளந்திரையனிடத்து வழிப்படுத்தலை விஷயமாகக் கொண்டது. அவ்விளந்திரையனது நாட்டிலுள்ள குறிஞ்சி முதலிய ஐந்நிலங்களின் இயல்புகளையும், அவற்றில் வாழ்வாரது தொழில் முதலியவற்றையும், அவனது வள்ளன்மை முதலியவற்றையும் கூறுவது.

முல்லைப் பாட்டு: இது காவிரிப் பூம்பட்டினத்து நப்பூதனார் பாடியது. ஒரு நூற்று மூன்று அடிகளையுடைய அகவற்பா. தலைவனது பிரிவை ஆற்றியிருந்த தலைவியிடத்து அவன் வந்ததைக் கண்டு தோழி முதலியோர் கூறுதலை விஷயமாகக் கொண்டது; தவித்திருக்கும் தலைவியின் இயல்பு கார்காலத்தின் தன்மை, தலைவனது வல்லமை முதலியவற்றைக் கூறுவது.

மதுரைக் காஞ்சி: இது மாங்குடி மருதனார் பாடியது; எழுநூற்றெண்பத்திரண்டு அடிகளையுடைய அகவற்பா; தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் வீடுபேறு அடையும் பொருட்டு உலக நிலையாமையை அவனுக்குச் செவியறிவுறுத்தலை விஷயமாகக் கொண்டது; அவனது முன்னோர் பெருமை, அவனது வீரம், அவனது ஐந்நில வளம், மதுரையின் அழகு முதலியவற்றைக் கூறுவது.

நெடுநல்வாடை: இது நக்கீரர் பாடியது. நூற்றெண்பத்தெட்டு அடிகளையுடைய அகவற்பா, போருக்குச் சென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் தலைவிக்கு அவன் பகையை வென்று விரைவில் வருவானாகவென்று

கொற்றவை (துர்க்கை)யை வழிபடுவாள் கூறுதலை விஷயமாகக் கொண்டது; கார்காலம், கூதிர் காலம் முதலியவற்றின் இயல்புகளையும், தவித்திருக்கும் தலைவி, படை வீட்டிலிருக்கும் தலைவன் முதலியோரின் இயல்புகளையும் கூறுவது.

குறிஞ்சிப் பாட்டு : இது கபிலர் அருளிச் செய்தது இருநூற்றுப்பத்தொரு அடிகளையுடைய அகவற்பா. தலைவியினது வேற்றுமை கண்டு வருந்திய செவிலியருக்குப் பாங்கி கூறுதலை விஷயமாகக் கொண்டது; மலைவளம். மலர்வகை, இல்லறம், கற்பு முதலியவற்றைக் கூறுவது.

பட்டினப் பாலை : இது கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடியது. முந்நூற்றொரு அடிகளையுடைய அகவற்பா. வேற்று நாட்டுக்குச் செல்லத் தொடங்கிய தலைவன் தனது தலைவியைப் பிரிந்து வாரேன் என்று தனது நெஞ்சிற்குக் கூறுதலை விஷயமாகவுடையது. காவிரிப் பூம்பட்டினம், சோழர் கரிகாற் பெருவளத்தான் வீரம், செங்கோல் முதலியவற்றைக் கூறுவது.

மலைபடுகடாம் : இது பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனார் பாடியது. ஐந்நூற்றெண்பத்து மூன்றடிகளையுடைய அகவற்பா. பரிசில் பெறக் கருதிய கூத்தன் ஒருவனைப் பரிசில் பெற்றான் ஒருவன் பல குன்றக் கோட்டத்துச் செங்கண் மாத்துவேள் நன்னன் சேய் நன்னனிடத்து வழிப்படுத்தலை விஷயமாகவுடையது. அந்நன்னனது மலை, காடு, சோலை முதலியவற்றின் வளங்களையும் அவனது பெருமை, வள்ளன்மை, ஆற்றல் முதலியவற்றையும் கூறுவது.

நற்றிணை : இது முதல் கூறப்படும் எட்டு நூல்களின் தொகுதியை ''எட்டுத் தொகை'' என்று கூறுவர் நற்றிணை கபிலர் முதலான நூற்றெழுபத்தைந்து புலவர்

கள் பாடிய, நானூறு ஆசிரியப்பாக்களையுடையது. அகப் பொருட் பகுதிகளைத் தெளிவாகக் கூறுவது. இதனைத் தொகுப்பித்தான் பாண்டியன் மாறன் வழுதி. இக்காலத்து உரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

குறுந்தொகை: இது திப்புத் தோளார் முதலான இருநூற்றெண்பது புலவர்கள் பாடிய நானூற்றிரண்டு குறிய ஆசிரியப் பாக்களையுடையது. அகப் பொருட் பகுதி களை நன்கு விளக்குவது. இதனைத் தொகுத்தோன், பூரிக்கோ. இதன் முதல் முந்நூற்றெண்பத்திரண்டு செய்யுள் களுக்குப் பேராசிரியரும் மற்றை இருபது செய்யுள்களுக்கு நச்சினார்க்கினியரும் உரை கண்டனர். அவ்வுரை இதுகாறும் வெளிப்படவில்லை. இந்நூல் புத்துரை ஒன்றுடன் அச்சிடப்பட்டுள்ளது.

ஐங்குறு நூறு: இஃது ஐந்நூறு ஆசிரியப்பாக்களை யுடையது. இதன் முதல் நூறு செய்யுள்களைச் செய்தவர் ஓரம்போகியார். இரண்டாம் நூறு செய்யுள்களைச் செய்தவர் அம்மூவனார். மூன்றாம் நூறு செய்யுள்களைச் செய்தவர் கபிலர். நான்காம் நூறு செய்யுள்களைச் செய்த வர் ஓதலாந்தையார். ஐந்தாம நூறு செய்தவர் பேயனார். இதனைத் தொகுத்தவர் கூடலூர்க் கிழார். இஃது பழைய வுரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

பதிற்றுப்பத்து: இது சேரநாட்டு வேந்தர் பதின்மரைச் சிறந்த தமிழ்ப் புலவர் பதின்மர் பப்பத்துப் பாக்களாகப் பாடிய நூறு அகவற்பாக்களையுடையது. தமிழ்நாட்டு நிலைமை, சேரரது வீரம், கொடை, அரசாட்சி முதலிய வற்றைக் கூறுவது. முதற் பத்துப்பாக்களும் இறுதிப் பத்துப் பாக்களும் தவிர மற்றை எண்பது பாக்களும் பழைய உரையுடன் அச்சிடப்பட்டுள்ளன.

பரிபாடல் : சிறந்த செந்தமிழ்ப்புலவர் சிலரால் பாடப் பெற்ற எழுபது பாடல்களையுடையது. திருமாலை எட்டுப் பாடல்களாலும், முருகக் கடவுளை முப்பத்தொரு பாடல்களாலும், காடு கிழானை ஒரு பாடலாலும், வையை யாற்றை இருபத்தாறு பாடல்களாலும், மதுரையை நான்கு பாக்களாலும் துதிப்பது, பரிமேலழகரால் உரை செய்யப் பெற்றது. இதுவரையில் கிடைத்த இருபத்து நான்கு பாடல்கள் உரையுடன் அச்சிடப்பட்டுள்ளன.

கலித்தொகை : இது நல்லந்துவனார் முதலிய ஐம்பெரும் புலவரால் பாடப்பெற்றது. நூற்றைம்பது கலிப்பாக்களையுடையது. முறையே பாலை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் அகத்திணை ஐந்தை யும் மிக அழகாக உணர்த்துவது. நச்சினார்கினியரால் உரை செய்யப் பெற்றது. அவ்வுரையுடன் அச்சிடப் பட்டுள்ளது.

அகநானூறு : இது மாமூலனார் முதலிய புலவர் பலர் இயற்றிய நானூறு அகவற்பாக்களையுடையது. அகப் பொருட் பகுதிகளை மிகத் தெளிவாகக் கூறுவது. இதனை தொகுத்தவர் மதுரை உருத்திர சன்மர். அகமெனவும், அகப்பாட்டெனவும், நெடுந்தொகையெனவும் வழங்குவர். இஃது பழைய உரையுடன் அச்சாகி வருகிறது.

புறநானூறு : இது முடிநாகராயர் முதலிய புலவர் பலர் இயற்றிய நானூறு அகவற் பாக்களையுடையது. புறப் பொருட் பகுதிகளை மிகத் தெளிவாக யுரைப்பது. புற மெனவும் புறப்பாட்டெனவும் வழங்குவது. உரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

கல்லாடம் : இது கல்லாடனார் இயற்றியது. காப்புச் செய்யுள்கள் இரண்டு தவிர ஒரு நூறு அகவற்பாக்களை

யுடையது. அகப்பொருட் பகுதிகளை மிகத் தெளிவாக உரைப்பது. உரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

சிந்தாமணி : இதனை இயற்றியவர் திருத்தக்கதேவர். இது முதற் கூறப்படும் ஐந்து நூல்களும் ஐம்பெருங் காப்பியம் எனப்படும். இது ஜீவகனது சரித்திரத்தை மிக அழகுபடக் கூறுவது. நச்சினார்க்கினியர் உரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

சிலப்பதிகாரம் : இது முத்தமிழிலக்கியமான ஒரு காவியம். இதனை இயற்றியவர் இளங்கோவடிகள். இது கோவலன் சரித்திரத்தை மிக அழகுபடக் கூறுவது. அடியார்க்கு நல்லார் உரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

மணிமேகலை : இது மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் இயற்றியது. கோவலன் மகள் மணிமேகலையென்பாள் துறவடைந்து தவம் பூண்டு புத்த தருமங்களைக் கேட்டதைப் பொருளாகவுடையது. அரும் பதவுரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

குண்டலகேசி : இது ஜைனர் பால் மறைந்தொழிந்த நூல்களுள் ஒன்று போலும். பல உரையாசிரியர்களால் உரை மேற்கோளாக எடுத்தாளப்பட்ட இதன் செய்யுள் களிற் சில அச்சிடப்பட்டிருக்கின்றன.

வளையாபதி : இதுவும் ஜைனர் பால் மறைந்தொழிந்த நூல்களுள் ஒன்று போலும். பல உரையாசிரியர்களால் உரை மேற்கோள்களாக எடுத்தாளப்பட்ட இதன் செய்யுள்களிற் சில அச்சிடப்பட்டிருக்கின்றன.

யசோதர காவியம் : இது முதற் கூறப்படும் ஐந்து நூல்களும் ஐஞ்சிறு காவியம் எனப்படும். இது ஜைன முனிவர் ஒருவரால் பாடப் பெற்றது. இதன் மூலம் அச்சிடப்பட்டுள்ளது.

சூளாமணி : இதனை இயற்றியவர் தோலா மொழித் தேவர். இது பயாபதி என்பவனைப் பற்றிய கதையைக் கூறும். இதன் மூலம் அச்சிடப்பட்டுள்ளது.

உதயண குமார காவியம் : இது இன்னும் அச்சிடப் படவில்லை. இதன் ஏட்டுப் பிரதிகள் ஜைனர் சிலரிடம் உண்டு.

நாககுமார காவியம் : இதுவும் இன்னும் அச்சிடப் படவில்லை. இதன் ஏட்டுப் பிரதி ஜைனர் சிலரிடம் உண்டு.

நீலகேசி : இதுவும் இன்னும் அச்சிடப்படவில்லை. இதன் ஏட்டுப் பிரதி ஜைனர் பலரிடம் உண்டு.

இரகுவம்மிசம் : இது யாழ்ப்பாண நல்லூர் அரச கேசரி இயற்றியது. வடமொழி இரகு வம்மிசத்தை முதனூ லாகவுடையது. இக்காவியத் தலைவர் இரகு பூபதியும் அவன் வழித் தோன்றல்களும். இஃது இரகு வம்மிசத்தினர் பலருடைய வரலாறுகளைக் கூறுவது. அச்சிடப்பட்டுள்ளது.

நைடதம் : இஃது அதிவீரராம பாண்டியன் இயற்றி யது. அழகிய விருத்தப் பாக்களால் அமைந்தது. இக் காவியத் தலைவன் நளன். இது நளனது சரித்திரத்தை இனிது கூறுவது. உரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

தேவாரம் : இது திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிச்செய்த திருப்பதிகம் பதினாயிரமும், திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச் செய்த நாற்பத்தொன்பதினாயிரமும், சுந்தர சுவாமிகள் அருளிச் செய்த திருப்பதிகம் முப்பத்தே ழாயிரமும் கொண்டது. தமிழ் மறை நான்கில் ஒன்றாயது. தமிழுடனே சைவ மதத்தைக் கற்க விரும்புவோரும் சிவப்

பேற்றை அடைய விரும்புவோரும் கொள்ளத் தக்கது. சிறந்ததோர் இசைத் தமிழ் நூலாக எண்ணப்படுவது. சம்பந்தர் பதிகங்களில் முந்நூற்றெண்பத்து நான்கும், திருநாவுக்கரசர் பதிகங்களில் முந்நூற்றுப் பதினொன்றும், சுந்தரர் பதிகங்களில் நூறும் அச்சிடப்பட்டுள்ளன.

திருவாசகம் : இது மாணிக்க வாசக சுவாமிகள் அருளிச் செய்தது. அறுபத்தொரு திருப்பதிகங்களை யுடையது. தமிழ் மறை நான்கில் ஒன்றாயது. தமிழுடனே சைவத்தைக் கற்க விரும்புவோரும், சிவப்பேற்றை அடைய விரும்புவோரும் கற்கத் தக்கது. அச்சிடப் பட்டுள்ளது.

திருக்கோவை : இதுவும் மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்தது. உலக இன்ப வாயிலாக வீட்டின்பத்தை உணர்த்துவது. "இயற்கைப் புணர்ச்சி முதல் பரத்தையிற் பிரிவு" ஈறாக இருபத்தைந்து பகுதிகளையுடையது. நச்சினார்க்கினியர் உரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

திருவிசைப்பா : இது திருமாளிகைத் தேவர் முதலிய நாயன்மார் ஒன்பதின்மர் அருளிச் செய்தது. இருபத்தைந்து திருப்பதிகங்களை உடையது. சிறந்ததோர் இசைத் தமிழ் நூலாக எண்ணப்படுவது. அச்சிடப்பட்டுள்ளது.

திருப்பல்லாண்டு : இது சேந்தனார் அருளிச் செய்தது. பரமசிவனைப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துவது. சிறந்ததோர் இசைத் தமிழ் நூலாக எண்ணப்படுவது. அச்சிடப்பட்டுள்ளது.

திருமந்திரம் : இது திருமூல நாயனார் அருளிச் செய்தது. ஒன்பது தந்திரங்களாகப் பிரிக்கப்பட்டு மூவாயிரம் பாக்களையுடையதாய்ச் சிறந்து விளங்கும் யோக ஞான நூல். அரும்பதவுரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

பதினொராந்திருமுறை : இது சிவனடியார் பன்னிருவர் பாடிய திருமுகப்பாசுரம் முதல் திருவேகாதச மாலை ஈறான நாற்பது பிரபந்தங்களையுடையது. அச்சிடப் பட்டுள்ளது.

பெரிய புராணம் : இது சேக்கிழார் நாயனார் இயற்றியது. திருத்தொண்டர் புராணமெனவும் வழங்கு வது. சிவனடியார் பலரது சரித்திரங்களை ஓர் ஆயிரத்துத் தொள்ளாயிரத்தொன்பது திருவிருத்தங்களால் கூறுவது. சரித்திரச் சுருக்கங்களுடன் அச்சிடப்பட்டுள்ளது.

திருப்புகழ் : இது முருகக் கடவுளது பக்தரான "அருணகிரிநாதர்" அருளிச் செய்தது. அம்முருகக் கடவுளது திருப்புகழைக் கூறுவது. பதினாறாயிரம் பாக்களையுடையது. இதிற் சில பாகம் அச்சிடப் பட்டுள்ளது.

நாலாயிரப் பிரபந்தம் : திருமால் அன்பில் ஆழ்ந்து தெய்வத்தன்மை யெய்திய 'பொய்கையாழ்வார்' முதலிய பன்னிரண்டு ஆழ்வார்கள் திருவாய் மலர்ந்தருளிய துதிப் பாக்களையுடையது. தமிழொடு வைஷ்ணவ மதத்தைக் கற்க விரும்புவோரும் விஷ்ணுப் பேற்றை அடைய விரும்பு வோரும் கற்கத்தக்கது. பிறமத நிந்தை செய்யாதது. தமிழ் மறைகளில் ஒன்றாயது. அச்சிடப்பட்டுள்ளது.

பெருந்தேவனார் பாரதம் : இது பெருந்தேவனார் இயற்றியது. இடையிடையே வசனங்களையுடைய வெண்பாக்களால் யாக்கப்பெற்றது. சிற்சில பாகம் அச்சிடப் பெற்றது. முழுவதும் ஏட்டுப் பிரதியிலுள்ளது.

வில்லிபுத்தூரார் பாரதம் : இது வில்லிபுத்தூரார் இயற்றியது. மொழிக் கதையில் சில பாகங்களை விடுத்துக் கடவுள் வாழ்த்து முதலியவற்றோடு நாலாயிரத்து

மூந்நூற்றறுபது விருத்தப் பாக்களால் செய்யப் பெற்றது. ஆதி பருவம் முதலாகச் சௌப்திக பருவம் ஈறாகக் கொண்டது. குருகுல மக்களில் துரியோதனராதியர்க்கும் தருமனாதியர்க்கும் நடந்த போர் முதலியவற்றைப் பெரும் பாகமாகக் கொண்டது. மூலம் தனித்தும், பல பருவங்கள் உரையோடும் அச்சிடப்பட்டுள்ளன.

பாரதம் பிற்பகுதி : இஃது அரங்கநாதக் கவிராயர் இயற்றியது. சௌப்திகப் பருவ முதல் சொர்க்க ரோகண பருவம் வரையிலுள்ளது. வில்லிபுத்தூரார் பாக்களைப் போன்ற இனிமையான பாக்களாலாயது. அச்சிடப்பட்டுள்ளது.

நல்லாப்பிள்ளை பாரதம் : இது நல்லாப்பிள்ளை என்ற புலவர் இயற்றியது. வில்லிபுத்தூரார் பாட்டுகளோடு அவர் விட்டுவிட்ட வடமொழிப் பாரதத்தைப் பாகங்களைப் பாடிச் சேர்க்கப்பட்டது. பதினோராயிரம் விருத்தப் பாக்களுக்கு மேற்கொண்டது. அச்சிடப் பட்டுள்ளது.

கம்பராமாயணம் : இது கவிச் சக்கரவர்த்தி என்னும் சிறப்புப் பெயர் பெற்ற கம்பர் இயற்றியது. வால்மீகி ராமாயணத்தை முதலாகக் கொண்டது. பாலகாண்டம் அயோத்தி காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்று ஆறு காண்டங்களாகப் பகுக்கப்பட்டுப் பன்னீராயிரம் விருத்தப் பாக்களால் இராமபிரான் கதையை மிக அழகாகக் கூறுவது. அச்சிடப்பட்டுள்ளது.

இராமாயணம் பிற்பகுதி : இது ஒட்டக்கூத்தர் பாடியது. கம்பர் விடுத்துவிட்ட உத்தரகாண்டத்தைக் கூறுவது. கம்பர் பாக்களைப் போன்ற இனிமையான விருத்தப்பாக்களால் அமைந்தது. அச்சிடப்பட்டுள்ளது.

திருவிளையாடற் புராணம் : இப்பெயரோடு விருத்தப் பாக்களில் வேம்பத்தூரார் ஒன்றும், பரஞ்சோதி முனிவர் ஒன்றும் இயற்றியுள்ளார். இரண்டும் ஆலவாய்க் கடவுளது திருவிளையாடல்களைக் கூறுவன. அச்சிடப் பட்டுள்ளன.

கந்த புராணம் : இது கச்சியப்ப சிவாசாரியார் இயற்றியது. வடமொழிக் கந்த புராணத்தை முதனூலாக வுடையது. முருகக் கடவுளது சரித்திரத்தை யுணர்த்துவது. உற்பத்தி காண்டம் முதலிய ஆறு காண்டங்களை யுடையது. பதினாயிரத்துக்கு மேற்பட்ட விருத்தப் பாக்களையுடையது. அச்சிடப்பட்டுள்ளது.

காஞ்சிப் புராணம் : இது ஆசிரியர் சிவஞான யோகிகள் இயற்றியது. வடமொழிக் காந்தத் துச்சவற் குமார சங்கிதையிலுள்ள காஞ்சி மான்மியத்தின் மொழிபெயர்ப்பு. சொற்சுவை, பொருட்சுவை நிறைந்தது. இயற்கை நவிற்சியணி நிரம்பித் ததும்புவது. அகத்திணையும், புறத்திணையும் துறைப்படுத்தியுரைப்பது. உரையுடன் அச்சிடப் பட்டுள்ளது.

திருத்தணிகைப் புராணம் : இது கச்சியப்ப முனிவர் இயற்றியது. காந்தத் துச்சவற் குமார சங்கிதையின் பிற் பகுதியிலுள்ள தணிகை மான்மியத்தின் மொழிபெயர்ப்பு. அகத்திணையும் புறத்திணையும் அகங்கொளப் போதிப்பது. முருகக் கடவுள் அருள் விளையாடலை அழகுபெற வுரைப் பது. அச்சிடப்பட்டுள்ளது.

பிரபுலிங்க லீலை : இதனை இயற்றியவர் சிவப்பிரகாச முனிவர். இஃது அல்லம தேவன் கதையினைக் கூறுவது. இனிய விருத்தப்பாக்களால் அமைந்தது. நாவிற்கும், செவிக்கும், உளத்திற்கும் இன்பம் பயப்பது. சொல்லணி

பொருளணி நிறைந்ததோர் நல்ல காவிய ரத்தினம். உரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

கைவல்லியம் : இது தாண்டவராய சுவாமிகள் இயற்றியது. வேதாந்த நூல்களிலெல்லாம் சிறந்தது. தத்துவ விளக்கப் படலம், சந்தேகம் தெளிதற் படலம் என்னும் இருபது படலங்கள் உடையது. இனிய விருத்தப் பாக்களால் அமைந்தது. உரையுடன் அச்சிடப் பட்டுள்ளது.

ஈசுவர கீதை : இது சிவபெருமான் சனற் குமாரன் முதலிய முனிவர்களுக்கு அருளிய வடமொழிக் கீதையின் மொழிபெயர்ப்பு. இதனைத் தமிழில் மொழிபெயர்த்து விருத்தப்பாக்களால் பாடியவர் தத்துவராயர். இஃது அச்சிடப்பட்டுள்ளது.

பகவத் கீதை : இது கண்ணபிரான் அருச்சனருக்கு அருளிச் செய்த வடமொழிக் கீதையின் மொழி பெயர்ப்பு. இனிய விருத்தப்பாக்களால் அமைந்தது. இதனைத் தமிழில் மொழி பெயர்த்துப் பாடியவர் சீபட்டர். அழகிய உரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

பிரம கீதை : இது முனிவர் கணங்களுக்குப் பிரமன் அருளிச் செய்த வடமொழிக் கீதையின் மொழிபெயர்ப்பு. ஐதரேயம் முதலிய ஒன்பது உபநிடதங்களின் பொருளை உபதேசிப்பது. வடமொழிக் கீதையிலும் மிக அழகாக அமைந்துள்ளது. இதனைத் தமிழிலும் மொழிபெயர்த்துப் பாடியவர் தத்துவராயர்.

பிரபோத சந்திரோதயம் : இது வேதாந்தப் பொருளை நாடக முறையில், பிரவர்த்தி எனவும், நிவர்த்தி எனவும் இரண்டு பாலாக வகுத்து மோகன், விவேகன் முதலிய நாடக பாத்திரங்களால் ஞானத்தைப் போதிப்பது,

சொற்சுவை, பொருட்சுவை நிரம்பியது. அச்சிடப் பட்டுள்ளது.

ஒழிவிலொடுக்கம் : இதனை அருளிச் செய்தவர் கண்ணுடைய வள்ளலார். இது வேதாந்தம், சித்தாந்தம் இரண்டையும் தம் முன் மாறுபடாதவாறு அவ்விரண்டின் பொருளையும் ஒருப்படுத்துரைப்பது. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கையும் நன்கு உபதேசிப் பது. உரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

மெய்கண்ட சாத்திரம் : இது திருவுந்தி திருக்களிற்றுப் பாடி, சிவஞானபோதம், சிவஞானசித்தி, இருபா இருபஃது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினா வெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சு விடு தூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்னும் பதினான்கு சித்த நூல்களையும் கொண்டது. தமிழின் இனிமையையும், சிறப்பையும் சிவஞானத்தின் உண்மையும் மேன்மையும் கண்டநுபவிக்க விரும்புவோர் கற்கத்தக்கவை இப்பதினான்கும்.

## இலக்கணம்

இலக்கண வினாவிடை : இது நல்லூர் ஆறுமுக நாவலர் செய்தது. எழுத்திலக்கணத்தையும் சொல்லிலக் கணத்தையும் வினாவும் விடையுமாகப் போதிப்பது. பெரிய இலக்கணங்களைக் கற்று எழுத்திலக்கணத்தையும் சொல்லிலக்கணத்தையும் அறிய மாட்டாதார் கற்கத் தக்கது. அச்சுப்பிரதி எங்கும் கிடைக்கும்.

நன்னூல் : இது பவணந்தி முனிவர் இயற்றியது. எழுத்தும், சொல்லும் உணர்த்துவது. இதனை நல்லிலக் கணமென்று இக்காலத்தில் பலர் கற்பிக்கின்றனர், கற்கும்

படி சொல்லுகின்றனர். கற்கின்றனர். ஆனால் இது பல இடங்களில் தொல்காப்பியத்தோடு முரண்படுகிறது. பல பல இலக்கணங்களை ஒன்று சேர்த்துச் சுருக்கச் சூத்தரிக்கப் பட்டு படிப்போருக்குத் தளர்ச்சியும், வெறுப்பும் உண்டாக் குவது. எழுத்தையும் சொல்லையும் பிழைபட உணர்த்திக் கற்போர் வாழ்நாள்களைக் கவர்ந்து, பொருள் முதலிய வற்றைப் போதிக்கும் பேரிலக்கணங்களை அவர் கையி லெடுக்காதவாறு செய்வது. தமிழ் மக்களால் கைவிடப்பட வேண்டுமென்று என் போன்றோர் கடவுளைப் பிரார்த்திக்கு மாறு செய்யும் தன்மையையுடையது. பழையவுரைகளுடன் அச்சிடப்பட்டுள்ளது.

நேமிநாதம் : இது குண வீரபண்டிதர் இயற்றியது. எழுத்தும் சொல்லும் உணர்த்துவது. தொண்ணூற்றேழு இனிய வெண்பாக்களால் எழுத்திலக்கணத்தையும் சொல் லிலக்கணத்தையும் மிகத் தெளிவாக உணர்த்துவது. பிறர் உதவியில்லாமலும் சிரமமில்லாமலும், எழுத்திலக்கணத் தையும், சொல்லிலக்கணத்தையும் கற்க விரும்புவோர் கைக்கொள்ளத் தக்கது. அழகியவுரையுடன் அச்சிடப் பட்டுள்ளது.

வீரசோழியம் : இதனை இயற்றியவர் புத்தமித்திரர். இஃது எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்தின் இலக்கணங்களையும் அழகாகக் கூறும் ஒரு சிறு நூல். ஒரு நூற்றுத் தொண்ணூறு இனிய கட்டளைக் கலித்துறைப் பாக்களால் ஆயது. இதிற் சொல்லப்பட்ட எழுத்திலக்கணங்களில் தள்ளத் தக்கது, ழகாரம் தன் முன் சில வல்லெழுத்து வருங்கால் டகரமாகவும், சில மெல் லெழுத்து வருங்கால் ணகரமாகவும் திரியும் என்ற விதி யொன்றே.

இலக்கணக் கொத்து : இது சுவாமிநாத தேசிகர் இயற்றியது. நுண்ணிய சொல்லிலக்கண விதிகள் சில வற்றைப் பெருகத் திரட்டி வடமொழி இலக்கண வழக் கொடு பொருத்திக் கூறுவது. அழகியவுரையுடன் அச்சிடப் பட்டுள்ளது.

இலக்கண விளக்கம் : இந்நூலும் உரையும் இயற்றிய ஆசிரியர் வைத்திய நாத தேசிகர். இஃது எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என மூன்றதிகாரங் களுடையது. இதில் எழுத்துச் சொற் பொருள் யாப்பணி யென்றுமைந்திலக்கணங்களும் கூறப்படும். வைத்தியநாத தேசிகர் இந்நூலைப் பெரும்பான்மையால் தொல்காப்பிய நன்னூற் சூத்திரங்கள் கொண்டும், தாமியற்றிய சூத்திரம் சில தலைப்பெய்தும் செய்தனர். இதனானே இஃதோர் புது நூலாயினும் பழைய இலக்கண நூற்றிரட்டென்றே கோடற்பாற்று. இது குட்டித் தொல்காப்பியமென்று கொள்ளும் சிறப்பு வாய்ந்தது. உரையுடன் அச்சிடப் பட்டுள்ளது.

அகப்பொருள் விளக்கம் : இதனை இயற்றியவர் நாற்கவிராய நம்பி. இஃது அகப் பொருளிலக்கணங்களைச் சுருக்கிக் கூறும் ஒரு நூல். அகத்திணையியல், களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல் என்னும் ஐந்து இயல் களையுடையது. அழகிய உரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

யாப்பருங்கலம் : இதனை இயற்றியவர் அமிர்த சாகரர். இது நூறு அழகிய சூத்திரங்களால் யாப்பிலக் கணத்தைத் தெளிவாகவும், விரிவாகவும் நன்கு விளக்குவது.

ஒப்புயர்வற்ற அழகியவுரையோடு பொருந்தியது. இவ்வுரை அழிந்து போன இலக்கண விலக்கியங்களிற்

சிலவற்றின் செய்யுள்களை மேற்கோளாகக் கொண்டுள்ளது. இம்மேற்கோள்கள் முற்காலத் தமிழ் மக்கள் எவ்வளவு மேம்பட்ட தமிழறிவையுடையவராயிருந்தன ரென்பதையும், எத்தகைய பெருமை வாய்ந்த தமிழ் நூல்களெல்லாம் அழிந்து போயினவென்பதையும், படிப்போர்க்குக் காட்டி கண்ணீரைக் கவரும் திறத்தது. இந்நூல் உரையுடன் அழகாக அச்சிடப்பட்டுள்ளது.

யாப்பருங்கலக்காரிகை : இதனை இயற்றியவர் 'அமுத சாகரர்'. இது சில கட்டளைக் கலித்துறைப் பாக்களால் யாப்பிலக்கணத்தைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் விளக்குவது. குண சாகரர் இயற்றிய மிக அழகிய உரையைக் கொண்டது. உரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

தண்டியலங்காரம் : இது 'தண்டி'யென்பவரால் இயற்றப்பெற்றது. அணி இலக்கணத்தை மிக இனிய சூத்திரங்களால் அழகுபடக் கூறுவது. பொருத்தமான உதாரணச் செய்யுள்களைக் கொண்ட உரையோடு பொருந்தியது. அச்சிடப்பட்டுள்ளது.

மாறனலங்காரம் : இதனை இயற்றியவர் இக்காலம் ஆழ்வார் திருநகரி என வழங்கும் திருக்குருகையின்கண் தோன்றிய பெருமாள் கவிராயர். இஃது அணியிலக்கணத்தை விரிவாகவும், தெளிவாகவும் விளக்குவது. அணியிலக்கண நூல்களுள் தலையாக நிற்கும் சிறப்பு வாய்ந்தது. அழகியவுரையுடன் அச்சிடப்பட்டுள்ளது.

தொல்காப்பியம் : இஃது அகத்தியனார் மாணாக்கர்களுள் முதல்வரும் தவசிரேஷ்டருமான தொல்காப்பியர் என்னும் சிறப்புப் பெயர் வாய்ந்த திரணதூமாக்கினியார் இயற்றியது. ஒவ்வொன்பது இயல்களைக் கொண்ட

எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்னும் மூன்றதிகாரங்களால் எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம் என்ற ஐந்தையும் உணர்த்துவது. இக்காலத்து வழங்கும் முத்தமிழ் இலக்கணங்களுக்கும் முதனூலாக நிற்பது. முற்காலத்து வழங்கிய அகத்தியம் என்னும் முத்தமிழ் இலக்கணத்திற்குச் சிறந்த வழி நூலாக விளங்குவது. இக்காலத்து வழங்கும் இலக்கணங்களையெல்லாம் கொண்டு நிற்பது. இலக்கியங்களில் வள்ளுவர் முப்பால் ஒப்புயர்வற்று விளங்குவது போல இலக்கணங்களில் ஒப்புயர்வற்று விளங்குவது. இக்காலத்துப் பேரளவிற் கேட்கப்படுவதும் உரை மேற்கோள்களாக எடுத்தாளப்பட்ட ஒரு சில சூத்திர வளவிற் காணப்படுவதுமான அகத்தியத்தின் அகத்தியத்தை உணரவிடாமற் செய்வது. விருப்போடு கற்கவும், கேட்கவும் பாடஞ் செய்யவும் தகுதியான செந்தமிழ்ச் சூத்திரப் பாக்களையுடையது. உரையாசிரியர் என்னும் சிறப்பு பெயர் வாய்ந்த இளம்பூரண வடிகளாலும், பேராசிரியராலும், நச்சினார்க்கினியராலும் மூன்றதிகாரங்களுக்கும், கல்லாடரால் எழுத்ததிகாரம், சொல்லதிகாரங்களுக்கும், சேனாவரையராற் சொல்லதிகாரத்திற்கும் உரைகள் செய்யப்பெற்ற மாட்சியுடையது. கற்கக் கற்க அறிவும் இன்பமும் பயப்பது. முதலிரண்டதிகாரங்களும் மூன்றாம் அதிகாரத்தின் சில இயல்களும் நச்சினார்க்கினியருரையொடும் மூன்றாம் அதிகாரத்தின் மற்றைய இயல்கள் பேராசிரியர் உரையொடும் அச்சிடப்பட்டுள்ளது. சொல்லதிகாரம் சேனாவரையருரையொடு அச்சிடப்பட்டுள்ளது. மூன்று அதிகாரங்களும் இளம்பூரண வடிகருரையோடு அச்சிடப்படுகின்றது.

| | |
|---|---|
| புத்தகம் | ...சுதேசமித்திரன்-நாளிதழ்-வருஷ அநுபந்தம் |
| கட்டுரைத் தலைப்பு | ...தமிழ் நூல்கள் |
| கட்டுரையாளர் | ...வ. உ. சிதம்பரம் பிள்ளை |
| ஆண்டு | ...1918 |
| பக்கம் | ...22 |

# திருவள்ளுவர் திருக்குறள்

## 13

### பாயிர ஆராய்ச்சி

'பாயிரம்' என்பது நூன்முகம். நூற்கு முகம்போன்று விளங்குதலால், அது நூன்முகம் எனப்பட்டது.

இக்காலத்து வழங்கும் திருவள்ளுவர் திருக்குறட் சுவடிகளிலெல்லாம் 'கடவுள் வாழ்த்து', 'வான்சிறப்பு', 'நீத்தார் பெருமை', 'அறன் வலியுறுத்தல்' என்னும் நான்கு அதிகாரங்களும் பாயிரமாகக் காணப்படுகின்றன. ஆனால் 'கடவுள் வாழ்த்து' முதலிய மூன்று அதிகாரங்களும் 'உரைகோளாளன்' முதலியோர்களால் கூறப்பெற்ற சிறப்புப் பாயிரம். அறன் வலியுறுத்தல் என்னும் அதிகாரம் ஒன்றே வள்ளுவரால் கூறப்பெற்ற பொதுப் பாயிரம். சென்னை அரசாங்கக் கீழ்நாட்டுப் (Oriental) புத்தகசாலையிலுள்ள மிக மிகப் பழையதான திருக்குறள் கையெழுத்துப் பிரதி யொன்றில் இப்பொழுது பாயிரத்தின் முதல் அதிகாரமாக நிற்பதும், பலரால் ஒப்புயர்வற்ற பாக்களையுடையதெனப் போற்றப்படுவதுமான 'கடவுள் வாழ்த்து' என்னும் அதிகாரத்தின் முடிவில் 'சிறப்புப் பாயிரம் முற்றிற்று' என்பது எழுதப்பட்டுள்ளது. அச் சொற்கள் 'கடவுள் வாழ்த்து' என்னும் அதிகாரம் வள்ளுவர் கூறிய பாயிரத்தில் சேர்ந்தது அன்று என்பதைக் காட்டுகின்றன.

காலப் பெருக்கத்தினால் 'அறன் வலியுறுத்தல்' என்னும் அதிகாரப் பெயருக்கு மேலேயிருத்தற் பாலதாகிய 'பாயிரம்' என்னும் தலைப்பெயர்ச் சொல் 'கடவுள் வாழ்த்து' என்னும் அதிகாரப் பெயருக்கு மேலே சென்றும், 'கடவுள் வாழ்த்து' அதிகாரப் பெயருக்கு மேலே இருத்தற் பாலதாகிய ''சிறப்புப் பாயிரம்'' என்னும் தலைப்பெயர்ச் சொல் ''பொன்பூத்த மகரந்த'' என்னும் தொடக்கத்துச் செய்யுளுக்கு மேலே சென்றும் இடம்மாறின. அம்மாற்றத்தால் 'அறன்வலியுறுத்தல்' என்னும் ஓர் அதிகாரத்தை மாத்திரம் கொண்ட பாயிரம் 'கடவுள் வாழ்த்து' முதலிய நான்கு அதிகாரங்களைப் பெற்றும் 'கடவுள் வாழ்த்து' முதலிய மூன்று அதிகாரங்களையும் கொண்ட சிறப்புப் பாயிரம் அம்மூன்று அதிகாரங்களை இழந்தும் மாறுதலுற்றன.

'அறன் வலியுறுத்தல்' என்னும் ஓர் அதிகாரமே வள்ளுவரால் கூறப்பெற்ற பாயிரம் எனவும், 'கடவுள் வாழ்த்து' முதலிய மூன்று அதிகாரங்களும் 'உரைகோளாளன்' முதலியோர்களாற் கூறப்பெற்ற சிறப்புப்பாயிரம் எனவும் கோடற்குக் காரணம் என்னெனின் கூறுதும்.

(1) அதிகாரம் ஒவ்வொன்றற்கும் ஒரு மொத்தத் தொகையான் பப்பத்துக் குறள்களாக அமைத்த ஆசிரியர், தமது நூற்கும் ஒரு தொகையான அதிகாரங்களாக அமைத்திருப்பரெனக் கோடலே தகுதி. 'கடவுள் வாழ்த்து' முதலிய மூன்று அதிகாரங்களைச் சேர்த்து எண்ணின், ஒரு மொத்தத் தொகையல்லாத நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களாக நூல் முடிகின்றது. அம்மூன்றையும் விடுத்து எண்ணின் ஒரு மொத்தத் தொகையான நூற்று முப்பது அதிகாரங்களாக நூல் முடிகின்றது. அம் முடிவு பற்றி 'கடவுள் வாழ்த்து' முதலிய மூன்று அதிகாரங்களும்

வள்ளுவரால் இயற்றப்பட்டன வல்லவென்று கொள்ளலே பொருந்தும்.

(2) துறவறவியலின்கண் 'துறவு' என்ற ஓர் அதிகாரமும் 'மெய்யுணர்தல்' என்ற ஓர் அதிகாரமும் அமைத்துக் கூறிய ஆசிரியர் பாயிரத்தின்கண் 'நீத்தார் பெருமை' என்னும் ஓர் அதிகாரமும் கடவுள் வாழ்த்து என்னும் ஓர் அதிகாரமும் அமைத்துக் கூறுதல் மிகையேயாம். வான் சிறப்புக் கூறுதல் வானையும் கடவுளாகக் கொண்டு வழிபடுவோர்க் கல்லது ஏனையோர்க்குப் பயனில் கூற்றாம். ஏனெனின், வான் சிறப்புக் கேட்டு ஏனையோர் செய்யத் தக்கதும், செய்யாது விடத்தக்கதும் இல்லையாகலான் என்க. 'மெய்யுணர்தல்' என்னும் அதிகாரக் குறள்களைக் கூறிய ஆசிரியர் வானையும் கடவுளாகக் கொண்டு வழிபடுவர் என்று சொல்லத் துணியார். 'மெய்யுணர்தல்' என்னும் அதிகாரத்திற் கூறப்பட்டுள்ள மதம் இன்னதென்று அறியும் ஆற்றலுடையார், மிகையான 'கடவுள் வாழ்த்து' என்னும் அதிகாரத்தையும், 'நீத்தார் பெருமை' என்னும் அதிகாரத்தையும், பயனில் கூற்றாம் 'வான் சிறப்பு' என்னும் அதிகாரத்தையும் வள்ளுவர் கூறியிரார் என்று கோடலே தகுதி.

(3) வள்ளுவர் இயற்றிய அறன்வலியுறுத்தல் முதலிய நூற்றுமுப்பது அதிகாரப்பாக்களின் சொற்சுவை, பொருட் சுவைகளை யுணர்ந்தோர் 'கடவுள் வாழ்த்து' முதலிய மூன்று அதிகாரப்பாக்கள் வள்ளுவரது வாக்கினின்றோ, மனத்தினின்றோ, வெளிப்பட்டவை யென்று கூறார். அச்சுவைகளை உணரும் ஆற்றலில்லார் ''கடவுள் வாழ்த்து'' முதலிய மூன்று அதிகாரப்பாக்களை மாத்திரமா, குறள்வெண்பா வடிவமாகக் காணப்படும் பாக்களனைத்தையும், வள்ளுவர் பாக்களென்றே சொல்லத் துணிவர்!

'கடவுள் வாழ்த்து' முதலிய மூன்று அதிகாரப் பாக்களின் சொற்சுவை யின்மையையும், பொருட்சுவை யின்மையையும் ஒரு சிறிது எடுத்துக் காட்டுதும். சுவையை யும் சுவையின்மையையும் உணரும் ஆற்றல் உடையார் காண்க. அவ்விரு சுவையின்மைகளைக் காணப்புகுவதற்கு முன்னர் அவ்வறிவினர் செய்யவேண்டுவது ஒன்று உண்டு. அஃதாவது 'இக்காலத்துத் தமிழ்ப் புலவர் பலரும், முற்காலத்துத் தமிழ்ப் புலவர் பலரும், நமக்குக் கிடைத் துள்ள திருக்குறளுரைகளின் ஆசிரியர்களிற் பலரும், "கடவுள் வாழ்த்து" முதலிய மூன்று அதிகாரங்களையும் திருக்குறட் பாயிரத்தின் உறுப்புக்களாகக் கொண்டிருக்க நாம் அம்மூன்று அதிகாரங்களும் வள்ளுவரால் இயற்றப் பட்டனவல்ல என்று கொள்வதும் சொல்வதும் அப்புலவர் களையும், உரையாசிரியர்களையும் அவமதித்தலாம்' என்னும் நினைப்புக் குப்பை தமது உள்ளத்தின்கண் கிடக்குமாயின், அவர்களெல்லாரினும் மிகப் பெரியாரான நம் வள்ளுவர் வெறும் வெள்ளைப் பாக்களையே கொண் டுள்ள அம்மூன்று அதிகாரங்களையும் இயற்றினாரென்று கூறுதல் நம் வள்ளுவரை அவமதித்தலாம் என்னும் கோட்பாடாகிய மண்வெட்டியால் வெட்டி அக்குப்பை யினைத் தமது உள்ளத்தினின்று வெளிப்படுத்திவிடல் வேண்டும். ஏனெனின், குப்பை நிறைந்துள்ள அரங்கு ஒன்று அதனைக் கொண்டுள்ள வரையில் நல்ல பொருள் ஒன்றைக்கொள்ள இயலாதாகலான் என்க.

சில புலவர்களும் உரையாசிரியர்கள் பலரும் 'கடவுள் வாழ்த்து' முதலிய மூன்று அதிகாரங்களும் திருக்குறளின் பாயிரத்தைச் சேர்ந்தவை யென்று கொண்டதற்கு ஆதாரம் திருக்குறளை வள்ளுவர் மதுரைத் தமிழ்ச் சங்கத் தில் அரங்கேற்றிய காலத்துக் கேட்டவர்களென்று சொல் லப்படுகிற புலவர்களில் நத்தத்தனார், சிறுமேதாவியார்,

எறிச்சலூர் மாடலனார், காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார், மதுரைப் பெருமருதனார் இவ்வைவர் பாடியனவென்று 'திருவள்ளுவமாலை'யிற் குறிக்கப்பட்டுள்ள பாக்களேயாம். இவ்வைவரும் திருவள்ளுவ மாலைப் பாக்களில் வேறு சிலவற்றைப் பாடிய புலவர்களும் வள்ளுவர் காலத்தினரல்லர்; பிற்காலத்தவர். இவ்வுண்மையைக் காலஞ்சென்று போன மெய்ப்புலவர் திரு. த. கனகசுந்தரம் பிள்ளையவர்கள் சென்னை உயர்தர நீதிமன்றத்தின் நீதிபதிகளில் ஒருவராயிருந்த கனம் சேஷகிரி அய்யர் அவர்கள் தலைமையின்கீழ் வாசித்த வியாசத்தில் தக்க ஆதாரங்களுடன் நிலைநாட்டியுள்ளார்கள். அவ்வியாசத்தைத் தேடியெடுத்து அச்சிட்டு வெளிப்படுத்துவதற்கு யான் முயன்று கொண்டிருக்கிறேன். அன்றியும், அவ்வைம் பெரும் புலவர் பாக்கள் திருக்குறள் அரங்கேறிய காலத்தில் பாடப்பட்டனவல்ல வென்பதும் தமிழ் நூல்களுக்கு அழிவு நேரிட்ட பிற்காலத்தில் திருக்குறளின் அதிகாரங்கள் முதலியவற்றின் தொகைகளை வரையறுத்துக் கூறக்கருதிப் பாடப்பட்டவை யென்பதும் அவற்றைப் படிப்போர்க்கு உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்கும். அப்பிற்காலத்துப் பாக்களைத் திருக்குறள் அரங்கேறிய காலத்துப் பாக்களென்று பிழைபட வெண்ணியே மேற்கூறிய உரையாசிரியர்களும் புலவர்களும் 'கடவுள் வாழ்த்து' முதலிய மூன்று அதிகாரங்களும் வள்ளுவர் பாயிரத்துட்பட்டவை யென்று கூறினர். அவர்களுள் அக்கூற்று 'திருவள்ளுவமாலை'யின் அப்பாக்கள் திருக்குறள் அரங்கேறிய காலத்திற்குப் பிற்காலத்தினவென்று கண்டமாத்திரத்திலே பிழையெனத் தள்ளற்பாலதாம்.

உரை ஆசிரியர்களிடத்துத் தமிழ்ப்புலவர்கள் கொண்டுள்ள அளவுகடந்த அன்பும் மதிப்பும் நூலாசிரியரிடத்து

அவர்கள் செலுத்தவேண்டிய அன்பையும் மதிப்பையும் அவர் அறியாமலே குறைக்கின்றன. வள்ளுவர் குறள் ஒன்றற்கு ஓர் உரையாசிரியர் உரைத்திருக்கும் ஓர் உரையின் பொருத்தமின்மையை எடுத்துக்காட்டின், "பெரியார் உரைத்த உரையைப் பிழையெனல் பெரும் பாவமன்றோ?" என்பர் தமிழ்ப் புலவர்களிற் பெரும் பாலார். மற்றைச் சிறுபாலாரோ நாவாலும் கையாலும் சண்டையிடுவர். எம். ஏ. பட்டமும் ஒரு கல்லூரியில் ("சுதேச பாஷா அத்தியக்ஷகர்" என்னும்) உயர்ந்த உத்தி யோகமும் பெற்றிருந்த தமிழ்ப்பண்டிதர் ஒருவர், திருக் குறளுரை யொன்றில் ஆங்காங்குக் காணப்படும் பொருத்த மின்மையைப்பற்றி என்னோடு பேச நேர்ந்தபோதெல் லாம் நான்கு பக்கங்களிலும் பார்த்து மனிதர் ஒருவரும் காணப்படாவிடில் மாத்திரம் அப்பொருத்த மின்மையை என் செவிக்குள் மெதுவான குரலில் சொல்லுவர். இத் தகைய பெரியாரே திருக்குறளுரை யொன்றன் பொருத்த மின்மையைப் பிறரிடம் சொல்வதற்கு இவ்வளவு அஞ்சுவ ரெனின், ஏனையோர் பாட்டைச் சொல்லவும் வேண்டுமா? ஒரு குறளின் உயர்ந்த கருத்தை விளக்காததும், இழிந்த கருத்தொன்றை எடுத்துக் கூறுவதுமான உரையொன்றை அக்குறளின் உண்மையான உரையென்று கொள்ளின், அவ் விழிந்த கருத்தையுடைய குறளை வள்ளுவர் இயற்றியுள் ளாரென அவரை அவமதிக்க நேருமென அறியத்தக்க ஆற்றல் இல்லாதவராயிருக்கின்றனர் பலர். ஒரு குறளின் பொருத்தமற்ற உரையைப் பொருத்தமற்றதென எடுத் துக் கூறலாகாதென வாதிக்கும் புலவர்கள் பல நூற் றாண்டுகளாக வள்ளுவர் பாக்களென மதிக்கப்பட்டுவரும் "கடவுள் வாழ்த்து" முதலிய மூன்று அதிகாரங்களும் அவருடையன வல்லவென்று சொல்ல விடுவரா? சொற் சுவையும் பொருட்சுவையும் இல்லாத அம்மூன்று அதி

காரப் பாக்களையும் வள்ளுவர் பாடினரென்று கூறுதல் அவ்வள்ளுவர் சொற்சுவையும் பொருட்சுவையும் இல்லாதாரெனக் கூறலோடொக்கு மென்பதை அவர் அறிந்திலர். இனி, அம்மூன்று அதிகாரங்களின் சொற்சுவையின்மை, பொருட்சுவையின்மைகளை ஆராய்வோம்.

ஒரு நூலின் தொடக்கத்தின்கண்ணே தோன்றும் கடவுள் வாழ்த்து "வழிபடு கடவுள் வாழ்த்து" எனவும், "ஏற்புடைக் கடவுள் வாழ்த்து" எனவும் இருவகைப் படும். "வழிபடு கடவுள் வாழ்த்து" என்பது நூலாசிரியன் இயற்றத் துணிந்த நூல் இனிது முடியுமாறு தான் வழிபடுங் கடவுளை வணங்குதல். "ஏற்புடைக் கடவுள் வாழ்த்து" என்பது நூலாசிரியன் இயற்றத் துணிந்த நூலை ஏற்போர் கடவுளை வாழ்த்துதற்காக நூலாசிரியனால் கூறப்படுவது.

"ஏற்புடைக் கடவுள் வாழ்த்து" என்பது நூலாசிரியன் இயற்றத் துணிந்த நூற்கு ஏற்புடைக் கடவுளை நூலாசிரியனே வாழ்த்தி வணங்குதல் என்று கூறலாகாதோ வெனின், ஆகாது. என்னை? நூலியற்றும் அறிவும் ஆற்றலுமுடையான் தான் வழிபடு கடவுளையன்றிப் பிறிதொரு கடவுள் உண்டெனக் கொள்ளான், வாழ்த்தான், வணங்கானாகலான்.

'கடவுள் வாழ்த்துக்' கூறியே நூலியற்றுதல் வழக்கு. அவ்வாறே நம் திருவள்ளுவரும் கடவுள் வாழ்த்துக் கூறியே தமது நூலை இயற்றியிருக்கின்றனர். திருக்குறட் பாயிரத்தின் முதலாவது அதிகாரமாக இப்போது காணப் படுகின்ற கடவுள் வாழ்த்து நம் திருவள்ளுவர் கூறியதே என்று பலர் கூறுகின்றனர். கடவுள் வாழ்த்துக் கூறி நூல் இயற்றும் வழக்குப் பிற்காலத்தது என்று தெரிகின்றது. தொல்காப்பியம் முதலிய தொன்னூல்களில் கடவுள்

வாழ்த்துக் காணப்படாமையானும், கடவுள் வாழ்த்துக் கூறியே நூல் இயற்ற வேண்டும் என்று விதிக்கப்படாமை யானும் இப்பிற்காலத்து வழக்குப்பற்றி இக் கடவுள் வாழ்த்துப் பாக்கள் திருவள்ளுவரால் இயற்றப்பட்டவை என்று கூறுதல் பொருந்தாது.

திருக்குறட் பாயிரத்தின் முதலாவது அதிகாரமாக இப் போது காணப்படுகின்ற "கடவுள் வாழ்த்துப்" பாக்கள் பத்தில் கடவுளுக்குக் கூறப்பட்டுள்ள இலக்கணங்களில் ஒன்றேனும் திருக்குறளின் 36-வது அதிகாரமாகக் காணப் படுகின்ற "மெய்யுணர்தல்" பாக்கள் பத்தில் கடவுளுக்குக் கூறப்பட்டுள்ள இலக்கணங்களில் ஒன்றற்கேனும் ஒத்ததா யில்லை. அதனைப் பின்னர்க் காட்டுதும். இக் கடவுள் வாழ்த்துப் பாக்களை "ஏற்புடைக் கடவுள் வாழ்த்துப் பாக்களாக நம் திருவள்ளுவர் கூறினார்" என்று கோடல் ஆகாதோவெனின், ஆகாது. என்னை? இவ்வுலகத்தில் வழங்கும் பல மதங்களில் எந்த மத நூலாகவும் திருக் குறளைத் திருவள்ளுவர் கூறிற்றிலர் என்பதனைப் புலவ ரெல்லாரும் ஒப்புக் கொள்ளுகிற படியால் ஏற்புடைக் கடவுள் வாழ்த்துக் கூறுவதற்கே காரணமில்லை யாகலான்.

"சத்துவம், இராசதம், தாமதம் என்னும் மூன்று குணங்களால் மூன்றாகிய அறம், பொருள், இன்பம் என்னும் உறுதிப் பொருள்களைக் கூறலுற்றார் அம்மூன்று பொருள்களால் மூவராகிய தேவரை வாழ்த்துதல் முறைமை யாகலின் அம்மூவர்க்கும் பொதுப்பட இக் கடவுள் வாழ்த்தினைத் திருவள்ளுவர் கூறினா"ரெனப் பரிமேலழகர் உரைத்திருப்பது அவர் புலமைத்திறமையுள் ஒன்றாகிய கற்பனைத் திறமையைக் காட்டுகின்றதேயன்றி உண்மையொன்றையும் நாட்டவில்லை. உரையாசிரியர் பலரும் புலவர் பலரும் கருதியது போலப் பரிமேலழகரும்

இக்கடவுள் வாழ்த்துப்பாக்கள் திருவள்ளுவரால் கூறப் பட்டவை என்று கருதியபடியால் அப்பாக்களின் தன்மையை உயர்ந்ததாகக் காட்டக் கருதி மேலே கண்டவாறு கற்பித் துரைத்தனர் என்று தெரிகின்றது.

முதற் குறள்

**அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே யுலகு.**

எழுத்தெல்லாம் அகர முதல என்பது உவமானம். உலகம் ஆதிபகவன் முதற்று என்பது உவமேயம். எழுத் தெல்லாம் அகர முதல என்பதற்குப் பொருள் எழுத்துக் களெல்லாம் அகரமாகிய எழுத்தை முதலாக உடையன என்பது. உலகம் ஆதி பகவன் முதற்று என்பதற்குப் பொருள் உலகம் ஆதி பகவனை முதலாக உடையது என்பது. இப் பொதுப்படையான பொருள் உரையாசிரிய ரெல்லாருக்கும் புலவரெல்லாருக்கும் ஒப்பமுடிந்த தொன்று.

எழுத்து "ஒலி எழுத்து" எனவும், "வரி எழுத்து" எனவும் இருவகைப்படும். வரி எழுத்து கண்ணினது காட்சிக்குப் புலப்படும் உருவெழுத்து. இக் குறட்பா ஆசிரியர் வரி எழுத்தைக் குறித்து அகரம் எனவும் எழுத்து எனவும் கூறினார் எனின், உவமேயத்திலும் கண்ணினது காட்சிக்குப் புலப்படும் உருவுலகத்தையும் உருக் கடவுளை யும் குறித்து ஆதிபகவன் எனவும் உலகு எனவும் கூறினார் என்றாவது அல்லது கண்ணினது காட்சிக்குப் புலப்படாத அருவுலகத்தையும் அருக் கடவுளையும் குறித்து உலகு எனவும் ஆதிபகவன் எனவும் கூறினார் என்றாவது கொள்ளல் வேண்டும். கண்ணினது காட்சிக்குப் புலப்படும் உருவுலகத்திற்குக் கண்ணினது காட்சிக்குப் புலப்படாத

அருக்கடவுள் முதல் என்று கூறினா ரென்றுரைப்பது மிகையே யாகும்.

இனி ஒலி எழுத்துச் செவியினது காட்சிக்குப் புலப் படுவதொன்று. இக்குறட்பா ஆசிரியர் ஒலி எழுத்தைக் குறித்து அகரம் எனவும் எழுத்து எனவும் கூறினார் எனின், உவமேயத்திலும் செவியினது காட்சிக்குப் புலப் படும் ஒலி உலகத்தையும் ஒலிக் கடவுளையும் குறித்து உலகு எனவும் ஆதிபகவன் எனவும் கூறினாரென்றாவது, அல்லது செவியினது காட்சிக்குப் புலப்படாத அருவுலகத் தையும் அருக்கடவுளையும் குறித்து உலகு எனவும் ஆதி பகவன் எனவும் கூறினாரென்றாவது கொள்ளல் வேண்டும். செவியினது காட்சிக்குப் புலப்படும் ஒலியுலகத் திற்குச் செவியினது காட்சிக்குப் புலப்படாத அருக்கடவுள் முதல் என்று கூறினார் என்றுரைப்பது மிகையே யாகும்.

உவமேயத்தில் காட்சிக்குப் புலப்படும் ஒரு வரி எழுத்து அல்லது ஒலி எழுத்து காட்சிக்குப் புலப்படும் மற்றைய வரி எழுத்துக்களுக்கு அல்லது ஒலி எழுத்துக் களுக்கு முதல் ஆதல்போலக் காட்சிக்குப் புலப்படும் உருவுலகத்திற்கு அல்லது ஒலியுலகத்திற்குக் காட்சிக்குப் புலப்படும் உருக்கடவுள் அல்லது ஒலிக்கடவுள் முதல் என்று உரைப்பதே குறளின் சொற்களுக்கு நேரிய பொருள் உரைத்தலாகும். அல்லாமல் உவமானத்திலுள்ள அகரச் சொற்கும் எழுத்துச் சொற்கும் காட்சிக்குப் புலப் படும் அகரம் எனவும் எழுத்து எனவும் உரைத்து, உவமேயத்திலுள்ள 'ஆதி பகவன்' என்னும் சொற்குக் காட்சிக்குப் புலப்படாத கடவுள் எனவும் 'உலகு' என்னும் சொற்குக் காட்சிக்குப் புலப்படும் உலகம் எனவும் உரைத் தல் சொற்குப் பொருள் உரைக்கும் முறையன்று. இவ்வாறு முறைபிறழ்ந்து பொருளுரைத்தாலன்றிப் பொருத்தமான

பொருள்தராத உவமானத்தையும் உவமேயத்தையும் நம் திருவள்ளுவர் கூறினார் என்பது அவர் புலவர் அன்று என்று கூறியதோடொக்கும். வரியெழுத்து அல்லது ஒலி எழுத்து என்ற ஒன்றையே குறித்து எழுத்து எனவும் அகரம் எனவும் கூறினார் எனின், அது குன்றக் கூறல் என்னுங் குற்றத்தின்பாற்படும். அக் குற்றத்தையுடைய தொரு பாவை நம் திருவள்ளுவர் கூறினாரென்றல் அவர் குற்றஞ்சான்ற புலவர் எனக்கூறியதோ டொக்கு மன்றோ? 'முதல்' என்னும் சொல் உவமானத் திற்கோ உவமேயத்திற்கோ அவ்வளவு பொருத்தமான சொல்லன்று. முதல் என்பதைப் பெயர்ச் சொல்லாக வழங் குங்கால் அது மற்றொரு பொருளை உண்டாக்கும் ஒரு பொருள் என்றே பொருள்படும். ''முதல் இலார்க்கு ஊதியம் இல்லை'' என்பது சான்று. அகரத்திலிருந்து மற்றைய எழுத்துகள் பிறக்கின்றனவா? கடவுளிலிருந்து உலகம் பிறக்கின்றதா? இல்லை. அகரம் மற்றைய எழுத்துக்களுக்கு ஆதாரம் எனலாம். அவ்வாறே கடவுள் உலகத்திற்கு ஆதாரம் எனலாம். அது பற்றியே நம் திருவள்ளுவர் மெய்யுணர்தல் என்னும் அதிகாரத்தில் ''சார்பு'' என்றனர்.

'எழுத்தெல்லாம்' என்பது தமிழ் எழுத்துக்கள் எல்லாவற்றையும் மட்டும் அடக்கி நிற்கின்றதா? அல்லது தமிழ் எழுத்துக்களெல்லாவற்றையும் ஆரிய எழுத்துக்க ளெல்லாவற்றையும் மட்டும் அடக்கி நிற்கின்றதா? அல்லது உலகத்தில் வழங்கும் மொழிகளில் எல்லாவற்றி னுடையவும் எழுத்துக்களெல்லாவற்றையும் அடக்கி நிற் கின்றதா? என்னும் ஒரு வினா எழுகின்றது. அது தமிழ் எழுத்துக்களெல்லாவற்றையும் அடக்கி நிற்கின்ற தென் றால், அச் சொல் அங்கு ஒருவாறு பொருந்தும் அப்பா

தமிழ்ப்பாவாகலான். அது தமிழ் எழுத்துக்களெல்லா வற்றையும் ஆரிய வெழுத்துக்களெல்லாவற்றையும் மட்டும் அடக்கி நிற்கின்றதென்றால், அச்சொல் ஆங்குப் பொருந் தாது. அது உலகத்தில் வழங்கும் மொழிகளெல்லாவற்றி னுடையவும் எழுத்துக்களெல்லாவற்றையும் அடக்கி நிற் கின்றதென்றால் அச் சொல் ஆங்குப் பொருந்தாது, அகரத்தை முதலாகக் கொள்ளாத மொழிகள் சில இவ் வுலகத்தில் வழங்குகின்றமையான். 'ஆதி', 'பகவன்' என்னும் சொற்கள் இரண்டும் ஆரியச் சொற்கள். ஒப்பு யர்வற்றதொரு நூலைத் தமிழ்மொழியிற் செய்யப் புகுந்த தமிழ்ப் புலவனான தமிழ் மகன் ஒருவன் தன் நூலின் முதற்பாவின் கண்ணே ஆரியச் சொற்கள் இரண்டைப் புகுத்தானென்றல் சைவ சமயத்தைப் போதிக்கப் புகுந்த சைவ ஒழுக்கமுடைய சைவ மகனொருவன் புலால் உண்டான் என்றலை யொக்கும்.

ஆதியும் பகவனும் தமிழ்ச் சொற்களே என்று கூறும் வாயடிக் கையடிக்காரருடன் போர்புரிய எனக்கு ஆற்ற லில்லை. தமது தாயாகிய ஆதியையும் தமது தந்தையாகிய பகவனையும் குறித்துச் செய்ந்நன்றி யறிதலாக அச் சொற்களைத் தமது முதற்பாவின்கண்ணே நுழைத்தனர் நம் திருவள்ளுவர் என்றல் அவர் ஆதி யென்னும் புலைச்சிக் கும் பகவன் என்னும் அந்தணனுக்கும் பிறந்தவர் என்னும் பொய்க் கதையை மெய்க் கதையெனக் கொள்ளும் புல்லறி வாளர்க்கே சாலும். மற்றைப் பேரறிவாளர்க்குச் சாலாது என விடுக்க. இப்பா இவ்விரண்டு சொற்களைக் கொண்டி ருத்தல் ஒன்றே இப்பா மேற்கூறிய பொய்க் கதையை மெய்யெனக் கொண்ட பிற்காலத்துப் புலவன் ஒருவனால் பாடப்பட்டதென்பதற்குப் போதிய சான்றா மென்பது எனது துணிவு. இனி உலகு என்னும் சொல்லையும் தனித்

தமிழ்ச் சொல்லென்று சொல்வதற்கு இடம் இல்லை. பிறப்பு என்னும் வாய்பாட்டுச் சொல் ஒற்றில்லாமல் வெண்பாவின் இறுதிச் சீராக முடிந்து வருவது வழக்காயினும், அவ்வாறு அச்சீரில் வெண்பா முடிவது அவ்வளவு சிறப்பன்று.

மேற் கூறியவாறு சொல்லினும் பொருளினும் இழுக்குகள் பலவற்றைக் கொண்டுள்ள இப்பாவை நம் திருவள்ளுவர் இயற்றினார் என்றால் அவரது புலமையையும் பெருமையையும் பழித்ததேயாகும். அப் பழிப்பினைச் செய்யத் துணிந்தாரே இப்பா அவருடைய தென்பர். ஏனையோர் இப்பாவை அவருடையதென்னார்.

**கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ**
**னற்றா டொழாஅ ரெனின்.**

இதன் பொருள் :—(மாந்தர் பல நூல்களையும்) கற்றறிந்ததனால் (அவருக்கு) உளதாய பயன் யாது, தூய அறிவினனது நல்ல தாள்களைத் தொழாராயின்? அதாவது, தூய அறிவினை உடையானது (உடைய கடவுளது) நல்ல தாள்களைத் தொழாரானால் (மாந்தர் பல நூல்களையும்) கற்றறிந்ததனால் (அவருக்கு) உளதாகிய பயன் யாது? (ஒன்றும் இல்லை.) என்பதாம்.

மெய்ப்பொருள் முதற்குறளில் 'ஆதிபகவன்' எனவும், இக்குறளில் 'வாலறிவன்' எனவும், இதற்குப் பின் வரும் எட்டுக் குறள்களிலும் முறையே 'மலர்மிசையேகினான்' 'வேண்டுதல் வேண்டாமை இலான்', 'இறைவன்' 'ஐந்தவித்தான்' 'உவமையில்லாதான்' 'அந்தணன்' 'எண்குணத்தான்' 'இறைவன்' எனவும் உயர்திணை ஆண்பாலாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால், அப்பொருள் ''மெய்யுணர்தல்'' என்னும் அதிகாரக் குறள் பத்திலும் அவ்வாறு

உயர்திணை ஆண்பாலாகக் கூறப்பட்டிலது; அஃறிணை ஒன்றன்பாலாகக் கூறப்பட்டுளது. திருவள்ளுவர் தொல்காப்பியத்தை இலக்கணமாகக் கொண்டவரென்பது புலவர் பலர்க்கும் ஒப்பமுடிந்ததொன்று.

'மக்க டேவர் நரக ருயர்திணை, மற்றுயி—ருள்ளவு மில்லவு மஃறிணை' என்னும் கோட்பாடு பிற்காலத்தே தோன்றியது. அன்றியும், தேவர் என்பது வானவரைக் குறிக்குமேயல்லாது மெய்ப்பொருளைக் குறிக்காது. அங்ஙனம் இருக்கவும், பின்னூலார்களிற் பலர் மெய்ப் பொருளை உயர்திணை ஆண்பால் சொற்களால் கூறியுள்ளனர். தொல்காப்பியமோ "உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே, அஃறிணை யென்மனா ரவரல பிறவே, ஆயிருதிணையி னிசைக்குமன் சொல்லே" எனக் கூறுகின்றது. மக்களைத் தவிர மற்றைப் பொருள்களைக் குறிக்கும் சொற்களெல்லாம் அஃறிணையாக ஒலிக்கும் என்னும் இவ் விலக்கணத்தைக் கைக்கொண்ட திருவள்ளுவர் மெய்ப் பொருளை உயர்திணை ஆண்பாலாகக் கூறுவரா? அவ்வாறு அவர் கூறினால் அஃது ஓர் இழுக்காகாதா? ஆதலால், மெய்ப்பொருளைத் திருவள்ளுவர் உயர்திணை ஆண்பாலாகக் கூறார் என்பதும், அப்பொருளை உயர்திணை ஆண்பாலாகக் கூறுகின்ற இவ்வதிகாரக் குறள்கள் பத்தையும் கூறியவர், மேற்கண்ட 'மக்கடேவர் நரகருயர்திணை' என்னும் கோட்பாட்டிற்குப் பின்தோன்றியவரே என்பதும் வெள்ளிடைமலை.

வாலறிவன் என்பதன் பொருள் தூய அறிவினை உடையவன் என்பதே. ஆகவே, தூய அறிவு ஒன்று, அதனை உடையவன் ஒருவன், அதனை உடைமையாகக் கொண்ட தொழில் ஒன்று என்ற இரு பொருளுண்மையும் ஒரு தொழிலுண்மையும் பெறப்படுகின்றன. இவ்

வுண்மைப்பேறு மெய்ப்பொருளொன்று தவிர வேறு பொருள் ஒன்றும் இல்லையென்னும் கொள்கைக்கு முரண்படுகின்றதன்றோ? திருக்குறள் பல சமயங்களையும் தழுவி ஒரு சமயத்தையும் கடியாது நிற்கும் பொதுச் சமய நூல் என்பது புலவர் பலர்க்கும் ஒப்ப முடிந்த தொன்றன்றோ? அவ்வாறாகவும், ஒரு சமயத்தைக் கடிந்து பொதுச்சமய நூல் என்ற பெயரை இழந்து நிற்கின்ற நூல் என்று பலரும் சொல்லும்படியாகக் கடவுளிலக்கணத்தை வள்ளுவர் மேற்கூறியவாறு கூறினர் என்றல் அவர் சிறப்பினைக் குறைத்தலாகாதா? அன்றியும், இப்பா மெய்ப்பொருளை மனித உருவகப்படுத்தி, அது தாள் முதலியவற்றை உடையதாகக் கூறுகின்றது. இவ்வாறு மனித உருவகம் செய்வதால் மெய்ப்பொருள் மனித உருவினை யுடையது என்று கொள்ளவோ அல்லது மனித உருவினையுடையதுதானோ என்று ஐயம் உறவோ செய்கின்றதன்றோ? இத்தகைய கொள்கை அல்லது ஐயம் மக்களுள் பரவும்படி மெய்ப்பொருளை நம் வள்ளுவப் பெரியார் மனித உருவகம் செய்வரா? செய்யார் என்பது ஒருதலை.

இக்குறட்பாவின் பொருள்தான் என்னை? கடவுளைத் தொழாதார் கல்வி கற்றதனால் பயன் ஒன்றும் அடைந்திலர் என்பதே, கல்வியின் பயன்களுள் கடவுளைத் தொழுதல் சிறந்ததொரு பயன் என்று சொல்லலாமே யன்றிக் கல்வியின் பயன் கடவுளைத் தொழுதல் ஒன்றே என்று எவ்வாறு சொல்லலாம்? உலக அறிவு, நல்லொழுக்கம் முதலியன கல்வியின் பயன்களல்லவா? கற்றானொருவன் கடவுளறிவு ஒன்று தவிர மற்றைய அறிவுகளெல்லாவற்றையும், நல்லொழுக்கங்களெல்லாவற்றையும் கைக்கொண்டு நிற்பனேல், அவன் கற்றதனால் யாதொரு

பயனையும் அடைந்திலன் எனக்கூறலாமா? ஒருவன் மறம் இஃது, அறம் இஃது என்று அறிந்து மறத்தை விடுத்து அறத்தைப் புரிந்து நிற்பனேல், அவன் கற்றதனால் யாதொரு பயனையும் அடைந்திலன் என்று கூறலாமா? ஒருவன் 'யான்' 'எனது' என்னும் செருக்கினை ஒழித்து மன்னுயிரெல்லாம் தன்னுயிரெனப் பேணி நிற்பனேல், அவன் கற்றதனால் யாதொரு பயனையும் அடைந்திலன் எனக் கூறலாமா? கல்வியும் அறிவும் ஒழுக்கமும் நிறைந்துள்ள சிலர் கடவுள் இல்லையெனவும், வேறு சிலர் கடவுள் உண்டோ இல்லையோ, அவ்வுண்மை யின்மைகளைப் பற்றி ஆராய்தலால் நாம் அடையும் பயன் ஒன்றும் இல்லை யெனவும் கூறுகின்றதுபற்றி அவரெல்லாம் கற்றதனால் யாதொரு பயனையும் அடைந்திலர் எனக் கூறலாமா?

மேற்கூறியனவெல்லாம் ஒரு புறம் கிடக்க; நூற் கல்வி மெய்யுணர்தலுக்கு இன்றியமையாததொன்றாகுமா? எம் மொழியின் எழுத்துக்களையும் அறியாதார் எத்துணைப் பேர் மெய்ஞ்ஞானிகளாய் விளங்கியிருக்கின்றனர்? நம் கண்ணப்ப நாயனார், இராமகிருட்டினப் பெரியார் முதலியவர்கள் எந்த நூல்களைக் கற்றுக் கடவுளைக் கண்டனர்? அடைந்தனர்? கடவுளைக் காண்டற்கு நூற்கல்வி ஒரு துணையாகும் என்று கூறலாமேயன்றி, இன்றியமையாததொன்றெனக் கூறுதற்கு இடமேயில்லை. இம்முதலாய பொருட்டுக்களால் பல நூல்களையும் கற்றுப் பலவகைகளிலும் மேம்பட்டார் ஒருவர் வினைவழியாலோ அல்லது வேறு காரணத்தாலோ கடவுளைத் தொழாராயின், அவர் அந்நூல்களைக் கற்றதனால் யாதொரு பயனும் அடைந்திலர் என்று கூறுவது அறிஞர் சிலரால் மறுக்கப்படத்தக்கதொன்றேயாம். "சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல் அச்சொல்லை, வெல்லுஞ்சொ லின்மையறிந்து" என்று

விதித்த நம் வள்ளுவர் இக்குறளைக் கூறினாரென்றல் பேதமையுட் பேதமையேயாகும்.

'வாலறிவன் நற்றாள்' என்றார், அவற்குத் தீத்தாள் ஒன்று உளதோ என்று சிலர் மயங்குமாறு. அம்மயக்கத்தை நீக்கக் கருதியே, 'நன்மையே பயக்கும் தாளாதலால் நற்றாளென்றார்' என்று உரையாசிரியர் சிலர் உரைக்கலாயினர். அவற்கு வேறாகத் தீமையென ஒருபொருள் உண்டென்பார் யாண்டுளர்? அன்பே அறத்திற்கும் மறத்திற்கும் சார்பு என்ற நம் வள்ளுவர் மெய்ப்பொருள் மறத்திற்கு வேறாயுளதென்று பொருள்பட 'நற்றாள்' என்று கூறுவரா? கூறார் என்பது பள்ளிச்சிறார்க்கும் தெள்ளென விளங்கும் ஓர் உண்மை.

கல்வியின் பயன் கடவுளைத் தொழுதல் என்று கூறவே, தொழுவான் வேறாயிருந்தே கடவுளைத் தொழுதல் வேண்டும் எனக் கூறினதாயிற்று. 'யான்' என்னும் செருக்கறுத்தான் கடவுளுக்கு வேறாக எங்ஙனம் இருத்தல் கூடும்? தொழுதல் கூடும்? இக்குறளின் கருத்துப்படி அச்செருக் கறுத்தானும் கல்வியின் பயனை அடையாதவன் என்று கூறப்படுதற் குரியனாகின்றான். "மெய்யுணர்தல்" என்னும் அதிகாரக்குறள்கள் பத்தில் ஒன்றிலேனும் 'தொழல்' என்னும் சொல் வழங்கப்படாமையும் நோக்குக. இவ்வகையாகப் பொருட்குற்றம் சொற்குற்றம் நிறைந்து நிற்கும் இக்குறட்பாவைத் தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் கூறினாரென்னும் கூற்று, தென்திசைக் கூற்றுபோலவே தோன்றுகின்றது.

மூன்றாம் குறள்

**மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடுவாழ் வார்.**

இதன் பொருள்:- பூமேல் நடந்தவனது (பூமேல் நடந்த கடவுளது) மாட்சிமைப்பட்ட அடிகளைச் சேர்ந்தவர்கள் நிலத்தின்மேல் நெடுங்காலம் வாழ்ந்திருப்பர் என்பதே.

மலர் என்பது பூ. மிசை என்பது மேல், "மேடுமேலு மிசையென மொழிவர்" என்பது பிங்கல நிகண்டாதலின். ஏகினான் என்பது சென்றான். ஆகவே, மலர் மிசை யேகினான் என்பதற்குப் பூமேல் நடந்தான் என்பதுதான் நேரிய பொருள். ஆனால், அப்பொருளினைக் கொள் ளின், 'பூமிசை நடந்தோன்' என்னும் பெயரினையுடைய அருக மதக்கடவுளையே இப்பாவாசிரியர் குறித்தனர் என்று கூற நேரும். அவ்வாறு ஒரு சமயக் கடவுளைக் குறித்தே பொதுமறையாசிரியர் கூறினாரென்று யாரே கூறத் துணிவர்?

'மலர்' என்பதற்கு 'மனமாகிய மலர்' என்று பரி மேலழகர் உரைத்துள்ளார். மலர் என்பதற்கு மனமாகிய மலர் என்றுரைக்க, நம் வள்ளுவருக்கு முந்திய இலக்கியம் யாதுளது? யான் கற்ற வரையிலும் கேட்டவரையிலும் யாதொன்றும் இலது. அவ்வாறிருக்கவும், மனமலரை மலர் என்று வள்ளுவர் கூறினார் என்றல் அவர் "குன்றக் கூறல்" என்னும் குற்றத்தை இப்பாவியற்றலிற் புரிந் தனர் என்று கூறலோடொக்கு மன்றோ?

'மலர் மிசை ஏகினான்' என்பதற்கு 'மலர்மேல் ஏகினான்' என்று பொருளுரைக்குங்கால், கடவுள் மலரின் கீழும் மற்றை நான்கு பக்கங்களிலும் உள்ளும் ஏகிலன் என்று சொல்ல நேருமே. அவ்வாறு சொல்வதற்குப் 'பூமேல் நடந்தோன்' என்னும் கடவுளைப்பற்றிய அருக மதத்தினராவது இசைவரா? இசையார். அதுபற்றித்தான் 'மிசை' என்பதற்குப் பரிமேலழகர் 'கண்' என்றுரைத் தனர்போலும். அதற்கு அப்பொருள் உரைப்பினும் கடவுள்

எதன்கண் ணிருந்து மலரின்கண் சென்றான்? என்றொரு வினா நிகழும். அதனைப்பற்றிப் பின்னர்க் கூறுவல். ஆகவே, 'மிசை' என்னும் சொல் ஈண்டுப் பொருத்தமற்ற தோர் சொல்லெனக் காண்க.

'ஏகினான்' என்பதற்குச் 'சென்றான்' என்பதே பொருள். பரிமேலழகரும் அச் சொற்கு அப்பொருளே உரைத்துள்ளார். ஆனால், "செலவினும் வரவினும் தரவினுங் கொடையினும், நிலை பெறத் தோன்று மந்நாற் சொல்லுந், தன்மை முன்னிலை படர்க்கை யென்னும், அம் மூவிடத்து முரிய வென்ப" எனவும். "அவற்றுள், தரு சொல் வருசொல் லாயிருகிளவியுந், தன்மை முன்னிலை யாயீரிடத்த" எனவும் வரும் தொல்காப்பியச் சொல்லதி காரச் சூத்திரங்களையும் "செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான், நல்விருந்து வானத் தவர்க்கு" என்னும் திருக்குறளையும் உற்று நோக்குவார்க்கு 'மலர் மிசை யேகினான்' என்று கூறுதலினும் 'மலர் மிசை வந்தவன்' என்று கூறுதலே மிகப் பொருத்தமுடைத்தென்று விளங்கும். 'செல்விருந்து' என்பதற்குத் 'தன்பால் நின்று பிறர்பால் செல்லும் விருந்து' என்பதும், 'வருவிருந்து' என்பதற்குப் 'பிறர்பால் நின்று தன்பால் வரும் விருந்து' என்பதுமே நேர்பொருள். "இருக்கை யெழலும் எதிர் செலவும் ஏனை, விடுப்ப ஒழிதலோ டின்ன" என்னும் நாலடியாரிற் காணும் 'எதிர்செலவு' என்பதன் கருத்து 'வரு விருந்தோம்பி' என்பதினும், 'ஏனை விடுப்ப ஒழிதல்' என்பதன் கருத்துச் 'செல்விருந்தோம்பி' என்பதிலும் அமைந்து கிடத்தலைக்காண்க.

இனி, 'ஏகினான்' என்பதை இடமயக்கம் எனக் கொண்டு 'வந்தவன்' எனப்பொருள் கொள்ளலாமெனினும்

எங்கிருந்து எங்கு வந்தான்என்று எழும் வினாவிற்கு யாது விடையிறுப்பது? கடவுள் எங்கும் உளன் என்னும் கோட்பாடு எல்லார்க்கும் ஒப்ப முடிந்ததொன்றாகலின், அவன் ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு ஏகினான் என்றல் பிழைபாடன்றோ?

'நற்றாள்' என்பதற்கு யான் கூறிய குற்றங்களெல்லாம் 'மாணடி' என்பதற்கும் உள. அக்குற்றங்களை அங்கு நோக்கிக் கொள்க.

'சேர்ந்தார்' என்பதற்கு 'அடைந்தார்' என்பதுதானே பொருள்? அச் சொற்கு அப்பொருள் உரைப்பின் 'மாணடி சேர்ந்தார் ...நீடு வாழ்வார்' என்பதற்குக் 'கடவுளடியை அடைந்தவர் (அவருக்கு வேறாக ஓர் உடலோடு கூடி) நெடுங்காலம் வாழ்ந்திருப்பர்' என்றுதானே பொருள் உரைக்கவேண்டும்? இது அறிவுக்குப் பொருத்த மில்லாத ஒரு மதக் கோட்பாட்டைக் குறிக்குமன்றோ? திருவள்ளுவர் அவ்வொரு மதக்கோட்பாட்டை இக்குறளில் கூறினாரென்றால் அவர் பொதுமறை இலக்கணத்திற்கு மாறுபடக் கூறினார் என்றலேயாம். இதனை யெல்லாம் கருதி இடர்ப்பட்டுத்தான் பரிமேலழகர் 'சேர்தல்' என்பதற்கு 'இடைவிடாது நினைத்தல்' என்றுபொருள் உரைத்தனர் போலும். அச் சொற்கு அப்பொருள் உரைத்தல் "வலிந்து பொருள் கோடல்" என்னும் குற்றத்தின்பாற் படுமன்றோ? அன்றியும் கடவுளடியை இடைவிடாது நினைத்துக் கொண்டிருப்பவர் அகம்பாவமுடைய அடியாளரேயல்லாமல் அகம்பாவமிழந்த முத்தராகார்.முத்தரும் நிலமிசை நீடுவாழ்தல்இல்லை.

'நிலமிசை' என்பதற்குப் 'புவியின்மேல்' என்பது பொருள். 'வாழ்தல்' என்பதற்கு 'உயிர் உடலோடு கூடி வாழ்தல்' என்பதே பொருள். அதற்குச் சான்று "வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை சாதல், அதற்கன்னள் நீங்கு

மிடத்து'' என்னும் திருக்குறள். பத்தராயினும் முத்தராயினும் உடலோடு கூடி நிலமிசை நீடுவாழ்தல் இல்லை. இனி, 'வாழ்தல்' என்பதற்கு 'உடலோடு கூடி வாழ்தல்' என்று பொருள் உரையாது, 'சிறப்பாக வாழ்ந்திருத்தல்' என்று பொருள் உரைப்பின், அதுவும் பொருந்தாது. என்னை? எவரும் நிலமிசை நீடுவாழ்தல் இல்லை யாகலான். இவ்விடர்ப்பாடுகளை யெல்லாம் கண்டுதான் பரிமேலழகர் 'நிலமிசை' என்பதற்கு 'வீட்டுலகின்கண்' என்றுரைத்தனர் போலும். அச்சொற்கு அப்பொருள் உரைப்பின் அதுவும் பொருந்தாது. முத்தர் கடவுளுக்கு வேறாகத் தனித்து வாழ்தல் இல்லையாகலான். அன்றியும், மன மலரை மலர் என்று கூறுதல் குன்றக் கூறல் என்னும் குற்றமாதல் போல, வீட்டுலகை நிலம் என்று கூறுதலும் குன்றக்கூறல் என்னும் குற்றமேயாம்.

'நீடு' என்பதற்கு நெடுங்காலம் என்பதுதானே பொருள்? இக் குறட்பாவைக் கூறியவர் நீடு என்ற சொல்லால் நெடுங்காலத்தை உணர்த்தக் கருதாது எக்காலத்தையும் உணர்த்தக் கருதினாரென்பது வெள் ளிடைமலை. என்னை? ஒருவர் ஓர் ஆண்டில் இறப்பினும், நூறு ஆண்டில் இறப்பினும், ஆயிரம் ஆண்டில் இறப்பி னும் அவர் இறப்பினையுற்றுப் பிறப்பினை அடைந்து கடவுளடி சேராதாரேயாவராகலான். 'எக்காலமும்' என்ற பொருள்படக் கூறக்கருதிய இப்பாவாசிரியர் 'நீடு' என்று கூறினரென்றால், ஒன்று அவர் அவ்விரு சொற் களுக்குமுள்ள பொருள் வேற்றுமையை அறிந்திலர் என்றாதல், அல்லது அவர் 'வாழ்' என்பதனை ஈற்றசை யாகக்கொண்டு முடியும் காய்ச்சீருக்குப் பொருத்தமாக எக்காலமும் என்று பொருள் தரும் 'நாளும்' என்பது போன்ற 'தேமா' அசைச் சொல்லையாவது அல்லது

'நீச்சலும்' என்பது போன்ற 'கூவிள' அசைச் சொல்லை யாவது கண்டிலர் என்றாதல் வேண்டும். இத்தகைய அறியாமையை அல்லது காணாமையை நம் வள்ளுவர்பால் ஏற்றவிரும்புவார் யாவர்?

'வாழ்வார்' என்னும் சொல் ஈண்டும் பொருத்த மில்லாதிருத்தலை முன்னர்க் காட்டியுள்ளேன். வாழ்வார் என்னும் சொல்லின் 'வாழ்' என்னும் முதலசையை முந்தின சீரின் ஈற்றசையாகச் சேராக்கால் வெண்பாத்தளை தட்டும் படியாக வெண்பாவியற்றல் போலிப் புலவரது செய்கை யாம். பிரித்து இரண்டுசீர்களிற் சேர்க்கப்பட வேண்டிய ஒரு சொல் திருக்குறளில் எந்தப் பாவிலேனும் வரக்காணின் அவ்வரவுக்குத் தக்கதோர் காரணம் இருக்குமென்றெண்ணி ஆராய்ந்து அதனைக் கண்டு கொள்க.

பொருளினும் சொல்லினும் இதுகாறும் கூறிய குற்றங் களையுடைய இக்குறட்பாவை நம்வள்ளுவர் கூறினார் என்றல் அவரைப் புலவரல்லர் என்று கூறியதோ டொக்கும்.

*தமிழ்ப்பொழில், 1929-30, 1930-31*
*துணர்,5 மலர், 6, 9-10, 11-12,*

# திருவள்ளுவர் திருக்குறள்

**14**

## பாயிர ஆராய்ச்சி

**வேண்டுதல்வேண் டாமை யிலானடி சேர்ந்தார்க்**
**கியாண்டு மிடும்பை யில.**

**இதன் பொருள் :—** வேண்டுதலும் வேண்டாமையும் இல்லாதானது (இல்லாத கடவுளது) அடிகளைச் சேர்ந்தவர்களுக்கு எவ்விடத்தும் துன்பங்கள் இலவாம் என்பதே.

'வேண்டுதல்' என்பதற்கு 'விரும்புதல்' எனவும், 'வேண்டாமை' என்பதற்கு 'வெறுத்தல்' எனவும் உரையாசிரியர்கள் பொருள் உரைத்துள்ளார்கள். வேண்டுதல் என்பதற்கு விரும்புதல் பொருளாயின், வேண்டாமை என்பதற்கு விரும்பாமை என்பதுதானே பொருள்? அது வெறுத்தல் என்று எவ்வாறு பொருள்படும்? விரும்பாமையும், வெறுத்தலும் ஒன்றாகுமா? விரும்புதல், விரும்பாமை, வெறுத்தல் இம்மூன்றும் உள்ளத்தின் மூவகைத் தன்மைகள். விரும்புதல்—அவாவுதல்; விரும்பாமை—அவாவாமை; வெறுத்தல்—காய்தல். விரும்பாமையாவது அவாவுதல் செய்யாதிருத்தல்; வெறுத்தலாவது அவாவுதற்கு எதிரான மனப்பான்மையைக் காட்டல். இவ்விரண்டும் ஒன்றாகா. விரும்புதல் தீது என்றால், வெறுத்தலும் தீதேயாம். விரும்பாமையோ தீதாகாது; நன்றேயாம். அது பற்றியே நம் திருவள்ளுவ நாயனாரும் "வேண்டாமை அன்ன விழுச்

செல்வம்' எனவும் 'அவாவில்லார்க் கில்லாகுந் துன்பம்" எனவும், "இன்பம் இடையறா தீண்டும் அவா வென்னுந் துன்பத்துட்டுன்பம் கெடின்" எனவும் கூறியுள்ளார்.

ஒரு பொருளை விரும்புங்கால் மற்றொரு பொருளை வெறுக்க நேரிடும். விரும்பாமையைக் கொண்டபோது விரும்புதலும், வெறுத்தலும் இல்லையாம். அது பற்றியே திருவள்ளுவர் வேண்டாமையை மட்டும் கூறி வெறுத் தலைக் கூறாது போந்தனர். வேண்டாமையை விழுச் செல்வம் என அவர் கூறியதற்குக் காரணமும் அஃதே.

வேண்டாமையை ஓரிடத்தில் உயர்த்திக் கூறிய திருவள்ளுவர் அதனை இங்குத் தாழ்த்திக் கூறுவரா? விருப்பையும் வெறுப்பையும் இங்குக் கூற விரும்பின், 'விருப்பு வெறுப்பிரண்டுமில்லான்' என்று கூறமாட்டார்? அவ்வாறு கூறத் தெரியாதார் கூற்றன்றோ, "வேண்டுதல் வேண்டாமையிலான்" என்பது? வேண்டுதல் 'வேண்' என்பதை முதற் சீராகக் கொண்டாலல்லாமல் யாரே கூறுவர்?

இனி, விருப்பு, வெறுப்பு இல்லாதிருத்தல் கடவுளது இலக்கணமா? கடவுள் ஒரு கண்டப் பொருளாய் ஓர் இடத்தும், மற்றைப் பொருள்கள் பல கண்டப் பொருள் களாய் வெவ்வேறு இடங்களிலும் உள்ளபோதன்றோ கடவுளுக்கு விருப்பும் வெறுப்பும் உளவாதல் கூடும்? கடவுள் ஓர் அகண்டப் பொருளாய்த் தமக்கு வேறாக ஒரு பொருளும் இல்லாது விளங்குங்கால், அவருக்கு விருப்பு, வெறுப்பு உளவாதல் எங்ஙனம்? அவை கடவுள்பால் உளவாதலே நிகழாதபோது, அவை இல்லாதான் என்று கூறுதல் பொருத்தமா? விருப்பு வெறுப்பு இல்லாதான் துறவியேயாவன். என்னை? அவை அவன்பால் முன்னர் இருந்து பின்னர் இல்லாது போனபடியால் இதனால்

'வேண்டுதல் வேண்டாமையிலான்'' என்பது முற்றத் துறந்த ஒரு முனிவனையே கடவுளெனக் கொண்டு வணங்கும் ஒரு மதத்தினது கூற்றென்பது வெள்ளிடை மலை.

கடவுளுக்கு அடிகள் உள்ளன போலவும், அவற்றை அன்பர்கள் சேர்தல் போலவும் கூறுதலினது ஒவ்வாத் தன்மையை மூன்றாம் குறளின்கீழ்க் காட்டியுள்ளேன். அஃது இக்குறட்கும் அவ்வாறு கூறும் இவ்வதிகாரத்தின் ஏனைய குறள்களுக்கும் பொருந்தும்.

'யாண்டும்' என்பதற்கு 'எவ்விடத்தும்' அல்லது 'எக்காலத்தும்' என்பதுதான் ஈண்டு உரைக்கத்தக்க பொருள். கடவுளைச் சேர்ந்த முத்தர் கடவுளோடு கலந்து நிற்றலன்றி வேறாக நிற்றல் உண்டோ? அவர் தேசகாலங் களைக் கடந்து நிற்கும் கடவுளோடு ஐக்கியமான பின்னர், அவருக்கு எவ்விடத்தும் அல்லது எக்காலத்தும் துன்பங்கள் இல என்று சொல்லுதல் கடவுளோடு கலந்த முத்தர் கடவுளை விட்டுச் சிலகாலம் பிரிந்திருந்தாலும் சிலகாலம் வேறு இடங்களுக்குச் செல்லுதல் நேருமென்று நினைத் தற்கு இடம் தருமன்றோ? அவ்வாறு நினைத்தற்கு இடம் தரும்படியாகப் பாவியற்றல் போலிப்புலவரது செய்கையே யாகும். நம் மெய்ப்புலவரது செயலென்று கூறுதல் ஒரு பெரும் பாவமாகும்.

''இல'' என்று பன்மையில் பயனிலை நிற்பதால், 'இடும்பை' என்ற எழுவாய்க்கு 'இடும்பைகள்' எனப் பொருளுரைக்க வேண்டுவதாயிற்று. (சில அல்லது பல) இடும்பைகள் இல என்று கூறுங்கால், ஓர் இடும்பை உளதோ என்றொரு வினா எழக்கூடுமே! 'இடும்பை இல

அல்லது இடும்பை இலது' என்று கூறினால் அவ்வினாவின் எழுச்சிக்கும் இடம் இல்லாமற் போகுமன்றோ?

இவ்வாறு சொல்லினும் பொருளினும் பிழைபாடுள்ள இப்பாவினை நம் திருவள்ளுவர் கூறினார் என்றல் அவரது பெருமையைக் குறைத்துக் கூறுதலேயாகும்.

## ஐந்தாம் குறள்

**இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்**
**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.**

இக்குறட்குத் தடை விடைகள் எழாத வண்ணம் பொருளுரைத்தல் எவ்வுரையாசிரியர்க்கும் முடியாதென்று சொல்லும் தன்மையில் இக்குறள் அமைந்துள்ளது. ஆதலால் இக்குறளின் உரையினைக் கொண்டு இக்குறளின் பொருட் பொருத்தமின்மையை எடுத்துக்காட்டி இக் குறட்குக் குற்றங் கூறுங்கால் உரையாசிரியரின் கல்வித்திறமையை யான் குறைத்துக் கூறியதாக எண்ண லாகாது.

இக்குறட்குப் **பரிமேலழகருரை :** மயக்கத்தைப் பற்றி வரும் நல்வினை தீவினையென்னும் இரண்டு வினையும் உளவாகா, இறைவனது மெய்ம்மை சேர்ந்த புகழை விரும்பினோரிடத்து.

**மணக்குடவருரை :** மயக்கத்தைச் சேர்ந்த நல்வினை தீவினையென்னும் இரண்டு வினைகளும் சேரா; தலைவனதாகிய மெய்ப்பொருள் சேர்ந்த புகழ்ச்சிச் சொற்களைப் பொருந்தினார் மாட்டு.

**நச்சருரை :** அஞ்ஞானம் பற்றி எழா நின்ற இரு வினைகளும் மெய்த்தன்மை வாய்ந்த சிவபிரானது திருப் புகழைப் பாராட்டுவாரிடத்துச் சேரா,

**தாமத்தருரை :** அஞ்ஞானத்தால் உண்டாகும் நல்வினை தீவினையென்னும் இரண்டு வினைகளும் சேர மாட்டா, மெய்த்தன்மை பொருந்திய கடவுளுடைய புகழை விரும்பி (த் தோத்திரம் பண்ணி)னாரிடத்து.

**தருமருரை :** (தம் அறியாமையாகின்ற) இருள் காரணமாக வந்து இயைகின்ற (நல்வினைகளும் தீவினை களும்என்னும்) இரண்டு வினைகளும் சேரா; அவ்விறை வனாற் பெற்ற உபதேசப் பொருளோடு பொருந்திய புகழ் தங்கி நின்றவரிடத்து.

**வீரமா முனிவருரை :** கடவுளாகிய மெய்ப் பொருளை அடைந்தான் என்கிற புகழை விரும்பினவரிடத்திலே (இச்சைகள் பண்ணுவிக்கிற) மயக்கத்தினால் வருகிற நல்வினை தீவினைக் கலப்புகள் உண்டாகா. (நல்வினையே உண்டாகும்.)

இவ்வறுவர் உரைகளும் இக்குறளாகிய வெள்ளரிப் பழத்திற்கு இவ்வறுவரும் கட்டிய இருப்புப் பூண்களாம். இவ்வறுவரும் கட்டிய இருப்புப் பூண்களாலும் இக்குறள் உடைபடாது நிற்கும் ஆற்றல் இலது. அஞ்ஞானம், அறியாமை, மயக்கம் என்பவையெல்லாம் ஈண்டு ஒரு பொருள் குறித்து நின்றன. அதுபற்றி 'எழும்' என்பதற்கு 'சேர்' என்பது பொருத்தமான சொல் அன்று. 'பொருள் சேர் புகழ்' என்பதற்கு 'மெய்ம்மை சேர்ந்த புகழ்' என்றுரைக்குங்கால் இறைவனுக்குப் பொய்ம்மை சேர்ந்த புகழ் உண்டா? என்ற வினாவாவது, மாந்தர் புகழெல்லாம் பொய்ப்புகழா? என்ற வினாவாவது எழுகின்றது. அதற்குத் தக்க விடையிறுத்தல் இயலாத காரியம். இவ்வாறு பொருத்தமற்ற பொருளைத்தரும் குறளை

நம் மெய்ப்பாவலர் கூறினாரென்றால் அவரை நிந்தித்தலே யாகும்.

## ஆறாங்குறள்

**பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க**
**நெறிநின்றார் நீடு வாழ் வார்.**

இஃது ஐந்தாங்குறளிலும் பொருட் பொருத்தமற்ற குறள்.

இதற்குப் **பரிமேலழகருரை :** மெய், வாய், கண், மூக்குச் செவியென்னும் பொறிகளை வழியாக உடைய ஐந்தவா வினையும் அறுத்தானது மெய்யான ஒழுக்க நெறி யின் கண் வழுவாது நின்றார் பிறப்பின்றி எக்காலத்தும் ஒரு தன்மையராய் வாழ்வார்.

**மணக்குடவருரை :** (மெய், வாய், கண், மூக்கு செவி, யென்னும் ஐம்) பொறிகளின் வழியாக வரும் (ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்னும்) ஐந்தின் கண்ணும் செல்லும் மன நிகழ்ச்சியை அடக்கினானது பொய்யற்ற ஒழுக்க நெறியில் நின்றார் நெடிது வாழ்வார்.

**தாமத்தருரை :** உடம்பு, வாய், கண், காது, மூக்கு என்று சொல்லப்பட்ட ஐந்து பொறிகளை வழியாகவுடைய ஐந்து ஆசைகளை அறுத்தவன் (சொன்ன) குற்றமில்லாத நேர் நெறியிலே வழுவாமல் நடந்தவர்கள் (ஒரு காலமும் அழிவில்லாமல் இருக்கிற மோட்சத்திலே) எக்காலமும் வாழ்வார்கள்.

**நச்சருரை :** (ஐம்) பொறிகளின் வழியாக நுகரப்படும் ஐம்புலன்களையும் வென்றானது பொய் நீங்கிய ஒழுக்க நெறியில் நிலையாக நின்றார் (இகத்திலும், பரத்திலும்) நெடுங்காலம் வாழ்வார்,

**தருமருரை :** (சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்கின்ற ஐம்புலன்களை நுகர்தற்கு) வழிக்கருவியாகிய (மெய், வாய், கண், மூக்கு, செவி) என்கின்ற ஐம்பொறிகளையும் அகத்தடக்கிய இறைவனது உபதேச முறைமையாகின்ற நல்லொழுக்கத்தின் கண் வழிபட்டு நின்றவர் (முத்தராய்) நெடுங்காலம் வாழ்வர்.

**அரசஞ்சண்முகனாருரை :** (மெய், வாய், கண், மூக்கு' செவி என்னும்) பொறிவாயில்கள் இல்லாமலே ஐம்புலன் அவாக்களையும் நீத்தவனது பொய் நீங்கிய ஒழுக்க நெறியின்கண் நின்றவர்கள் வீட்டுலகத்தின்கண் நீடுவாழ்வார்.

பொறிவாயில்கள் இல்லாத மெய்ப்பொருளைப் பொறிவாயில்கள் பற்றி எழாநின்ற சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐம்புலன்களின் அவாக்களைவும் நீத்தவன் என்பது எவ்வளவு பொருத்தமின்மை என்பதை யான் எடுத்துக் கூற வேண்டுவதில்லை. அரசஞ்சண்முகனார் அப்பொருத்தமின்மையை உணர்ந்த பொறிவாயில்கள் இல்லாமலே ஐம்புலன் அவாக்களையும் நீத்தவன் என்று உரைத்தனர். அவ்வுரையும் பொருத்தம் அன்று, ஐம்பொறி வாயில்கள் இல்லாதானுக்கு ஐம்புல வேட்கை உண்டாகாதாகலான்.

பொய்தீர் ஒழுக்கம் என்றதனால் பொய்தீராத ஒழுக்கம் ஒன்று உண்டோ? என்னும் ஒரு வினா எழுகின்றது. தீயொழுக்கம், கூடாவொழுக்கம் என நம் திருவள்ளுவர் கூறியிருக்கின்றனரேயன்றி, யாண்டும் பொய் தீரா ஒழுக்கம் என்று கூறிற்றிலர்.

ஒழுக்கம் என்பதன் பொருள் 'ஒழுகுதல்' என்பது தானே. அவ்வாறிருக்கவும், அதனுடன் 'நெறி' என்பதனைச் சேர்த்து வாளா கூறுவானேன்? அன்றியும் 'நெறி

சென்றார்' என்று கூறுவதுதானே பெரு வழக்கு? அதனை விடுத்து 'நெறிநின்றார்' என்று கூறியதில் யாது சிறப்புளது? எங்கு நீடு வாழ்வார் என்று கூறாது நீடு வாழ்வார் என்று மட்டும் கூறியதனால் இந்நில மிசை என்று கொள்வதா? அல்லது எந்நிலங்களிலும் மிக்க எழுநிலமவற்றின் மேலாம் 'நன்னில' மிசை என்று கொள்வதா? 'நீடு' என்ற சொல்லின் பொருந்தாத்தன்மையையும், 'நீடு' வாழ் என்று ஆறாஞ்சீரைப் பிரிக்கும் படியாகப் பா யாத்திருத்தலின் சிறப்பின்மையையும் மூன்றாங்குறளின் கீழ்க் கூறியுள்ளேன். அவற்றை ஆண்டுக் கண்டு கொள்க.

மேற் கூறியாங்குப் பலவாறு பொருட் பொருத்தமின்மையும் சொற் பொருத்தமின்மையும் நிறைந்துள்ள இக்குறளினை நம் தெய்வப்புலவர் இயற்றினரென்றல் அவரை அவமதித்தலே யன்றி வேறன்று.

'பொறிவாயி லைந்தவித்தான்' என்று துறவியைக் கூறுதல் வழக்கேயன்றி மெய்ப்பொருளைக் கூறுதல் வழக்கன்று. அதனால் இக்குறளும் துறவியை இறைவனாக வணங்கும் ஒரு மதத்தினது கூற்றென்றே கொள்க. ★ ★

—ஊழியன், தை, 1934

# சிவஞான போதம் ஆறாஞ் சூத்திர ஆராய்ச்சி

## 15

சைவ சித்தாந்தத்திற்குத் தலையாய நூல் சிவஞான போதம் என்பது சைவ சித்தாந்திகளுக்கெல்லாம் ஒப்ப முடிந்ததொன்று. தமிழ் சிவஞான போதம் வடமொழி சிவஞான போதத்தின் மொழிபெயர்ப்பு என்பது, தமிழ் சிவஞான போதத்தின் வழிநூலாகிய சிவஞான சித்தியாரின் ஆசிரியராகிய ஸ்ரீ அருணந்தி சிவாச்சாரியாருக்கும், சிவஞான பாடியத்தின் ஆசிரியர் ஸ்ரீ சிவஞான சுவாமி களுக்கும், ஏனைய சைவசித்தாந்த ஆசிரியர் பலர்க்கும் ஒப்ப முடிந்ததொன்று. தமிழ்ச் சிவஞானபோத ஆசிரியர் ஸ்ரீ மெய்கண்ட தேவர் என்பதும் அவருக்கு வடமொழி சிவஞான போதத்தை உபதேசித்தருளிய ஆசிரியர் ஸ்ரீ பரஞ் சோதி முனிவரென்பதும், அவரே அந்நூலைத் தமிழில் மொழிபெயர்த்துத் தமிழுலகத்திற்கு உபகரிக்கும்படியாக ஸ்ரீ மெய்கண்ட தேவருக்குக் கட்டளையிட்டனர் என்பதும், சிவஞான போத வரலாற்றிலும் ஸ்ரீ மெய்கண்ட தேவர் சரித்திரத்திலும் சொல்லப்பட்டுள்ளன. வடமொழி சிவஞான போதத்தைத் தமிழில் மொழிபெயர்த்துத் தமிழுலகத்திற்கு உபகரிக்கும்படியாகக் கட்டளையிடப் பட்டார் என்பதிலிருந்தும் அதனைத் தமிழில் மொழி பெயர்த்தருளினாரென்பதிலிருந்தும் ஸ்ரீ மெய்கண்ட தேவர்

வடமொழியிலும் பயிற்சியுடையவர் என்பது பெறப்படு கின்றது. வடமொழிச் சிவஞான போதத்தின் ஆறாஞ் சூத்திரம் வருமாறு :—

... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ...

அதன் உரை வருமாறு :—

...=சிவனுடைய சொரூபம்,...அறியப் படாததாயின், ...உறவேது = அச்சிவனுக்கு அசத்துத்தன்மை உளதாம்;.. = அறியப்படுவதாயின், அச்சிவனுக்கு ஜடத்தன்மைஉளதாம்; ...அவ்விரண்டிற்கும் எதிர்மறையாக அறியப்படுவதாம், ...(இவ்வாறு) முனிகள் அறிகின்றார்கள்.

அசத்துத் தன்மை இல்லாத பொருள்கள் :— முயற் கொம்பு, ஆகாயத்தாமரை, கானல் நீர், ஜடத்தன்மை, அறிவற்ற தன்மை. அறிவற்ற பொருள்கள் :— நிலம், நீர், தீ. அவ்விரண்டிற்கும் எதிர்மறையாக அறியப்படுவது அசத்துத் தன்மைக்கும் ஜடத் தன்மைக்கும் எதிர்மறை யாகிய சத்துத் தன்மையும், சித்துத் தன்மையுமாக அறியப் படுவது சத்—உள்ளது, சித்—அறிவு, அசத்-இல்லது, அசித்-அறிவற்றது. இவ்வடமொழிச் சூத்திரம் கூறுவது— சிவனுடைய சொரூபம் (உயிர்களால்) அறியப்படுவதாயின் அசித்தாம்; (உயிர்களால்) அறியப் படாததாயின் அசத்தாம்; (ஆதலால்) அவ்விரண்டிற்கும் எதிர்மறை யாகிய சித் சத்தாம்.

முன்னோர் கொண்ட பாடப்படி தமிழ்ச் சிவஞான போதத்தின் ஆறாஞ் சூத்திரம் வருமாறு :

**உணருரு வசத்தெனி னுணராதின்மையி னிருதிற**
**னல்லது**
**சிவசத் தாமென விரண்டு வகையி னிசைக்குமன் னுலகே**

அதன் உரை வருமாறு :—உணர் உரு எனின் அசத்து (சிவனுடைய சொரூபம்); உயிர் அறியும் உரு என்றால் இல் பொருளாம்; உணராது எனின் இன்மை—உயிர் அறியாது என்றால் இல் பொருளாம் : இரு திறன் அல்லது சிவசத்தாம் என இரண்டு வகையின் இசைக்கும் உலகு— (அச்சொரூபம்) இவ்விரண்டு தன்மையும் அல்லதாகிய சித்சத்தாம் என இரண்டு வகையால் கூறுவர் உயர்ந்தோர்.

மன் என்பது அசை, ஏகாரம் ஈற்றசை, அசத்தென்பதும் இல்பொருளென்பதும் இலதென்பதும் இன்மையென்பதும் ஒரே பொருளைத் தரும் சொற்கள். உணர் உரு எனின், அசத்தாம் என்பதற்கும் உணராது எனின், இன்மையாம் என்பதற்கும் பொருள் ஒன்றே என்பது பள்ளிச் சிறாரும் தெள்ளென அறியத்தக்கதொன்று. சிவனை உயிர்கள் உணருமாயினும் அவன் இல்பொருளாம்; சிவனை உயிர்கள் உணராவெனினும் அவன் இல்பொருளாம் என்று கூறுதல் அசம்பாவிதம்.

ஆனால், ஸ்ரீ சிவஞான சுவாமிகள் அசத்து என்பதற்கு (அங்ஙனம் அறியப்படும் பிரபஞ்சம்போல் அழிபொருளாகிய அசத்தாம் என்று பொருள் உரைத்திருக்கின்றனர். அசத்தென்னும் வடமொழிச் சொற்கு வடமொழி அமரத்திலும் அகராதியிலும், இலக்கியங்களிலும் இல்லது என்னும் பொருளே காணப்படுகின்றது. அச்சொற்குப் பிரபஞ்சம் போல் (சிலகாலம்) நின்று கொண்டிருந்து (பின்) அழிவது; அஃதாவது நிலையாக என்றும் நில்லாதது என்னும் பொருள் யாண்டும் காணப்படவில்லை. அப்பொருள் உரைத்ததற்குச் சில காரணங்கள் கூறியிருக்கின்றனர் ஸ்ரீ சுவாமிகள். அக்காரணங்களின் சாரமெல்லாம், ஸ்ரீமெய் கண்ட தேவரே 'உணருரு வசத்தெனின்' என்று சூத்திரம்

செய்தாரென்பதும், அசத்து என்பதற்கு மேற்கண்டபடி பொருள் உரைக்கலாம் என்பதுமே, ஸ்ரீமெய்கண்ட தேவர் மனதாரப் பொய் மொழிப்பெயர்ப்புச் செய்தனரென்று கொள்ளவோ, சொல்லவோ, என் மனம் துணியவில்லை. அப்பெரியார் பொய் மொழிபெயர்ப்புச் செய்தன ரென்று சொல்வதினும், ஸ்ரீ சுவாமிகள் தமது மதக் கோட்பாட்டை நிலைநாட்டுவதற்காக 'அசத்' என்னும் வடமொழிச் சொற்கு யாண்டும் காணப்படாத ஒரு புதிய பொருளைச் சிருஷ்டித்து உரைத்தன ரென்று சொல்லலாம். ஸ்ரீசுவாமிகளோ தென்மொழிக்கும், வடமொழிக்கும் புதிய நிகண்டும், இலக்கணமும் உண்டு பண்ணும் அறிவும் ஆற்றலும் உடையவர். 'வல்லான் வகுத்ததே வாய்க்காலெனும் பெரு வழக்கிற்கிழுக்கு முண்டோ?' என்னும் ஆன்றோர் வாக்கியத்தை எடுத்துக் கூறிவிடுதலே சால்பு.

ஸ்ரீமெய்கண்ட தேவரால் இயற்றப் பட்டதாகச் சொல்லப்படும் உதாரணமாகிய "அசத்தறியாய் கேணீ" என்னும் தொடக்கத்துச் செய்யுளிலும் அசத்தெனப் பாடம் காணப்படுகின்றதே என்னின், அதுவும் பிழைபட்ட பாடமென்க. ஸ்ரீமெய்கண்ட தேவருடைய பாடம் அசத் தென்பதன்று; அசித் என்பதே என்று கொள்வதற்குச் சான்று இரண்டு உள. ஒன்று அவர் ஏழாஞ் சூத்திரத்தின் இரண்டாம் அடியில் "அசத் இலது" என்று கூறியுள்ளார். அவ்வாறு கூறியவர் ஆறாஞ் சூத்திரத்தில் "உணருரு வசத்தெனினுணராதின்மையின்" என அசம்பாவித மாகவும், பின்னுக்கு முன் முரணாகவும் கூறியிரார். மற்றொன்று ஸ்ரீமெய்கண்ட தேவரிடம் சிவஞான போதத்தைக் கேட்டதாகச் சொல்லப்படும் "சிவஞான சித்தியா"ரின் ஆசிரியர் "அறிவுப் பொருளோ" என்றும்,

தொடக்கத்துச் செய்யுளின் இரண்டாம் அடியில் "அறி பொருள் சித்தசத்தாம்" என்றும் கூறியுள்ளார். அறி பொருள் அசித் அசத் ஆம் என்பதற்குப் பொருள் (உயிர்) அறியும் பொருள் அசித்தாகிய இல்பொருளாம் என்பதே. இவர் "அறிபொருள் அசித்" என்று கூறியிருப்பதி னாலேயே, இவர் காலத்திலெல்லாம் ஆறாஞ்சூத்திரத்தின் தொடக்கம் "உணருரு வசித்தெனின்" என்றுதான் இருந்த தெனவும், இவர் காலத்திற்குப் பின்னரே, "உணருரு வசத்தெனின்" என மாறினதெனவும் கொள்வதே தகுதி.

இனி ஆறாஞ் சூத்திரத்தின் முதலடியின் இறுதிச்சீர் "இன்மையின்" என்று இருக்கிறது. இதற்கு ஸ்ரீ சிவஞான சுவாமிகள் "இல்லையாகலான்" என்று பொருள் உரைத் திருக்கின்றனர். "இன்" என்பதற்கு 'ஆகலான்' என்னும் பொருளைச் சுவாமிகள் யாண்டு கண்டனரோ? யான் இது வரையில் படித்துள்ள இலக்கண இலக்கியங்களில் அச் சொற்கு அப்பொருள் காணப்படவில்லை. ஆதலால், முதலடியின் இறுதியிலிருந்த யாகாரத்தை யிகரமாகப் படித் தும், இரண்டாம் அடியின் தொடக்கத்திலிருந்த மிகரத்தை னிகரமாகப் படித்தும் ஏடுபெயர்த்தெழுதினோன் எழுதினன் என்று கருதி யான் அவ்வாறே திருத்தியுள்ளேன். இத்திருத்தப் பாடமோ, முந்திய பாடமோ சூத்திரத்தின் பொருளைப் பாதிக்காதபடியால் இரண்டில் எந்தப் பாடத் தையும் வைத்துக்கொள்ளலாம். ஆனால், "உணருருவசத் தெனின்" என்னும் முந்திய பாடம் சரியா, தப்பா என்பது பற்றி அறிஞர்கள் ஒரு முடிவுக்கு வர வேண்டியது இன்றியமையாதது.

யான் ஓர் ஆராய்ச்சியாளன்; ஸ்ரீ சிவஞான சுவாமிகளது சித்தாந்தக் கொள்கைப்படி சித்தாந்தியல்லன்; சிவஞான

போதப்படி உண்மையான சித்தாந்தி. யான் தலைசிறந்த நூல்கள் எழுத்துப் பிழை, சொற்பிழையில்லாமல் வெளிவர வேண்டுமென்ற விருப்பமுடையவன்; ''நூலின் அரில கற்று''தல் ஒரு பெரும் புண்ணியச் செயலென்று கருது கின்றவன். அதனால் சிவஞானபோத ஆறாஞ்சூத்திரத்தின் முதலடியை ''உணருருவ சித்தெனி னுணரா தின்மையாம்'' என்று திருத்தியுள்ளேன். அத்திருத்தம் பிழையென்று சித்தாந்த ஆசிரியர்கள் தக்க காரணங்களோடு காட்டுவாரா யின், அவர் வாக்கியத்தை யான் நன்றியறிதலோடு ஏற்றுக் கொள்ளச் சித்தமாயிருக்கிறேன். எல்லாம் வல்ல இறைவன் துணை.

—*தினமணி (நாளிதழ்)*, 6-12-1935

★ ★
★

## திருத்தம்

'திருவள்ளுவர் திருக்குறள்' என்ற தலைப்பில் அமைந்த இரண்டாவது கட்டுரை 'ஊழியன்' என்ற இதழில் வெளி வந்ததாகக் குறிக்கப்பட்டுள்ளது (ப.140). அது தவறு. இது 'தமிழ்ப்பொழி'லில் துணர் 6 இல்—1930-31 (பக். 456-462) வெளிவந்துள்ள கட்டுரையாகும். இதே தலைப்பில் இடம் பெற்றுள்ள முதல் கட்டுரையில் (ப.132) அது வெளிவந்த தாகக் குறிப்பிடப்பட்டுள்ளதில் 1930—31, 11-12 என்ற பகுதியை நீக்கிவிடவும்.

# வ.உ.சி.

## நூல் வரிசை



கண்ணன்